தேவராய சுவாமிகள் அருளிச்செய்த

கந்தர் சஷ்டி கவசம்

மூலமும்

வித்துவான்

ஈக்காடு - சபாபதி முதலியார்

எழுதிய

விருத்தியுரையும்

பிரசுரித்தவர்கள் :

...த்தின நாயகர் அண்ட் சன்ஸ்,

சென்னை - 1.

தேவராய சுவாமிகள்

அருளிச்செய்த

கந்தர் சஷ்டி கவசம்

வித்துவான்

ஈக்காடு - சபாபதி முதலியார்

எழுதிய

விருத்தியுரையுடன்

பதிப்பாளர்கள்:

B. இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ்

சென்னை - 1.

 —— [விலை ரூ. 2.55



ஸ்ரீ முருகக் கடவுள்

முகவுரை

—:※:—

இந்தக் கந்தர் சஷ்டி கவசமானது, அடியார் பல ரும் குமாரக்கடவுளைத் துதித்துப் பேய், பூதம், பில்லி சூனியம், பிணி, பகை முதலியவற்ருலேற்படும் சகல துன்பங்களினின்றும் நீங்கிச் செல்வம், மக்கட்பேறு, தீர்க் காயுள், நற்பதவி முதலியவைகளையும் குமாரக்கடவு ளின் பேரருளையும் பெற்றுய்தற் குறுதுணையா யிருக்கும் பொருட்டு, தேவராய சுவாமிகளாற் றிருவாய் மலர்ந் தருளப்பட்டது. இத்தகைய மகத்துவம் வாய்ந்த கவசத் தைக் குகனடியார் பலரும் பக்தி சிரத்தையோடு பாரா யணம் செய்து அதனுல் தாங்கள் முழுமுதற் கடவுளாம் முருகப்பெருமானின் பேரருளையும், உலக நலன்களையும் பெற்று வருகின்றனர்.

கவசம் - வீரர்கள் பகைவர் மேல் யுத்தத்திற்குச் செல்லுங்கால், தாங்கள் உடலின்மேற் பாதுகாப்பிற்காக அணிகின்ற மேற்போர்வை. இந்த உடற்போர்வை செம்பினுலும் எஃகினுலும் செய்யப்பட்டு உடற்காவல் புரிவது. இதற்குத் தமிழில் 'குப்பாயம்' அல்லது 'சட்டை' என்று பெயர். இதனை வடநூலார் 'கஞ்சுகம்' என்றும், அக் கவச மணிவோரைக் 'கஞ்சுகி' என்றும் கூறுவர். கஞ்சுகி என்ருல், கவசமுடையவன் என்று பொருள்.

சாதாரணமான உடற்கவசங்கள் போலல்லாமல், இக்கவசமோ இகத்தில் உடலைக் காத்தல் மாத்திரமே யன்றி, பரத்திலே முத்தியையும் அளிக்கவல்லது. எனவே, இகபர மிரண்டிலும் உறுதுணையாய் விளங்கு வது.

இத்தகைய சிறந்த நூலுக்குச் சகலருக்கும் விளங்கும்படியான முறையில் ஒரு விருத்தியுரை எழுதியுள்ளேன்.

இதில் பதவுரை, பதசாரம், சொன்னயம், பொருணயம், விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, இலக்கண விளக்கம் முதலியவற்றையும் அமைத்துள்ளேன். பல நூல்களினின்றும் மேற்கோள்களை எடுத்துக் காட்டியுள்ளேன்.

யான் இயற்றிய உரையில் அறியாமை காரணமாகக் குற்றங் குறைகளிருத்தலும் கூடும். அது விஷயமாக முற்று முணர்ந்த மூதறிவாளர்கள் என்பொருட்டல்லாமல், சைவ சமயத்திற்கே பெரும்பாடு பட்டவரான என் தந்தையாரும் பல நூல்களுக்கு ஆசிரியருமான சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் மாஜி தமிழ்ப் பண்டிதரும், உரையாசிரியரும், சைவப் பிரசாரகருமாகிய மகா வித்துவான் ஈக்காடு - இரத்தினவேல் முதலியாரவர்கள் பொருட்டாகிலும் அடியேனை மன்னித்து ஆசிகூறி அன்புடனே ஆட்கொள்வார்களாக. பக்தர்கள் பல்லாண்டிசைக்க, பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஈக்காடு - சபாபதி முதலியார்.

முருகன் துணை

கந்தர் சஷ்டி கவசம்

மூலமும் - விருத்தியுரையும்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம் நெஞ்சிற், பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்— கதித்தோங்கும், நிஷ்டையுங் கைகூடு நிமலரருள் கந்தர், சஷ்டி கவசந் தனை.

(பதவுரை) நிமலர்-குற்றமற்ற கடவுளாகிய சிவபெருமான், அருள் - தன்னருளாலே பெற்றருளிய, கந்தர் - சுப்பிரமணியக் கடவுளைப் பற்றிய, சஷ்டி - ஆறாந் திதியாகிய சஷ்டியில் ஓதத் தகுந்த, கவசந்தனை - இந்தக் கவசத்தை, துதிப்போர்க்கு-தோத்திரம் செய்து வணங்குவோர்க்கு, வல்வினைபோம் - கொடிய தீவினைகளெல்லாம் தொலைந்து போகும், துன்பம்போம் - வருத்தங்களெல்லாம் நீங்கும், நெஞ்சில் - மனத்தில், பதிப்போர்க்கு - இருத்திவைப்போர்க்கு, செல்வம் - இம்மை மறுமைச் செல்வங்கள், பலித்து - உண்டாகி, கதித்து ஓங்கும் - மிகுந்து பெருகும், நிஷ்டையும் - சமாதி நிஷ்டையும், கைகூடும் - சித்திக்கும், என்றவாறு.

(கருத்துரை) சிவபெருமான் ஈன்றருளிய முருகக்கடவுளைப் பற்றிய இந்தக் கவசத்தைப் படிப்போர்க்குப் பூர்வ ஜன்ம கன்மம்

போவதோடல்லாமல், இம்மை மறுமை இன்பம் உண்டாகி, சமாதி நிஷ்டையும் சித்திக்கும் என்பதாம்.

(விருத்தியுரை) காப்பு-தொழிற்பெயர். இதில் பு-தொழிற் பெயர் விகுதி. கந்தர் சஷ்டி கவசமாகிய இந் நூலைத் துதிப் போர்க்கு பூர்வ ஜென்ம கன்மவாசனையும் துன்பங்களும் தொலைந்து போகுமென்பார் 'துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம்' என்றும், நெஞ்சில் பதிப்போர்க்கு இம்மை மறுமைச் செல்வங்கள் உண்டாகி மேலும் மேலும் நிலைபெற்று அபிவிருத்தி யாகும் என்பார். 'நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்' என்றும், யோகசாதனையாகிய சமாதிநிஷ்டையும் சித்திக்கும் என்பார் 'நிஷ்டையும் கைகூடும்' என்றும் கூறினர். துதிப்போர்க்கு வல்வினைபோம் எனவே, துதியார்க்கு அவை நீங்கா என்பது வெளிப்படை. இதனை,

> "கெடுவாய் மனனே கதிகேள் கரவா
> திடுவாய் வடிவே லிறைதா ணினைவாய்
> சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
> விடுவாய் விடுவாய் வினையா வையுமே"
>
> —கந்தரனுபூதி

என்பதானறிக. துதித்தலாவது - தோத்திரம் செய்தல். இது தொழும் வகையில் வாக்கின் காரியமாகும். பதித்தலாவது - இருத்திவைத்தல், அதாவது மனத்தினிடமாக வைத்து மறவாமல் தியானித்துக் கொண்டிருத்தல். நிஷ்டையாவது - பஞ்சேந்திரி யங்களைத் தன் வசப்படுத்திச் செய்யும் யோகநிஷ்டை. நிமலர் - குற்றமற்றவர். இதில் நி - இன்மைப் பொருளைக்காட்டும் ஓர் உபசர்க்கம். உபசர்க்கம் என்பது சொல் மூலம்.

நிமலர், கந்தர் என்னும் இரண்டு சொற்களின் ஈற்றில் வந்துள்ள பன்மைப்பாலை புணர்த்தும் அர் விகுதி இரண்டும் உயர்வுநோக்கிப் பால் வழுவமைதியாய் ஒருமைப் பாலில் வந்தன. நிமலன், அமலன் என்பன வழாநிலை. இவற்றை மரியாதைக்கண் வந்த விகுதி என்பர் இலக்கண நூலோர். இதனை,

" உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழப்பினும் பால்திணை யிழுக்கினு மியல்பே "

—நன்னூல்

என்பதானறிக.

ஸ்கந்தர் என்னும் ஆரியமொழி தமிழில் கந்தர் என வந்தது. கந்தர் என்பதற்குச் சேர்க்கப்பட்டவர் என்பது பொருள். என்னெனின், ஆறு குழந்தைகளாக உருவங்கொண்டு சரவணப் பொய்கையில் விளையாடிக் கொண்டிருந்த முருகக்கடவுளை உமா தேவியார் கண்டு, அந்த ஆறு குழந்தை வடிவங்களையும் தம் மிரண்டு கைகளாலும் எடுத்து அணைத்து ஆறு திருமேனியும் ஒன்றாகும்படியாகச் சேர்த்து அதனால் கந்தன் எனப் பெயரிட்டனர். ஆகவே ஆறு உருவமும் ஓர் உருவமாயினமையின் பெருமானுக்குக் கந்தன் எனக் காரணத்திருநாமம் ஏற்பட்டது. இதனை,

" தாயென வாரல் போந்து தனங்கொள்பா லருந்த லாலே
ஏயதோர் கார்த்தி கேய னென்றொரு தொல்பேர் பெற்றான்
சேயவன் வடிவ மாறும் திரட்டிநீ யொன்றாய்ச் சேர்த்தாய்
ஆயத னாலே கந்த னாமெனு நாமம் பெற்றான் "

" எந்தை சத்திக ளுயிரெலா மொடுங்குறு மெல்லை
முந்து போலவொன் றாகியே கூடிய முறைபோல்
அந்த மில்லதோர் மூவிரு வடிவமொன் றாகிக்
கந்த னென்றபேர் பெற்றனன் கவுரிதன் மைந்தன் "

—கந்தபுராணம்

" ஆறுமோ ருருவ தாக வாக்கலிற் கந்த னானான் "

—தணிகைப்புராணம்

“ நறுநீர் முடிக்கணிந்த நாதன் - குறுமுறுவற்
கன்னியொடுஞ் சென்றவர்கட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவன்கண் டவ்வுருவம் ஆறினையும்—தன்னிரண்டு
கையா லெடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து”
—கந்தர் கலிவெண்பா

என்பனவற்றுனறிக.

மேலும் கந்தர் என்பதற்குச் சந்தனக் குழம்பு பூசப்பெற்ற வர், பலவித வாசனைகளை யுடையவர் எனினும் அமையும். கவசம் என்பது எதிரிகளின் அஸ்திர சஸ்திரங்களால் அபாயம் உண்டாகாதபடி உடலைக் காப்பதற்காக இரும்பு முதலியவற்றி னாலே செய்து அணிந்துகொள்ளப்படும் ஒருவகைச் சட்டை. இது வீரர்களுக்கு உரியது. இஃது உவமையாகு பெயராய் ஓதுபவர் களைப் பாதுகாக்கும் மந்திரத்தை உணர்த்திற்று. சஷ்டி கவசம் என்றதனுனே இந் நூல் சஷ்டி திதியில் ஓதத்தகுந்த கவசம் என்பது பெறப்பட்டது. சஷ்டி திதியில் ஓதி வழிபட்டால் ஏனை நாட்களில் ஓதி வழிபடுவதா லுண்டாகும் பலனைக் காட் டிலும் அதிக பலன் ஏற்படும். தினந்தோறும் ஓதக் கூடியதாக இருந்தாலும் சஷ்டி திதியில் சிறப்பாக ஓதக்கூடிய தென்பதூஉம், அத் திதியில் ஓதுபவர்கள் மிக்க பலம் எய்துவார்கள் என்பதூஉம் உணரத்தக்கன. இக் கவச மந்திரத்தை நாளொன்றுக்கு முப்பத் தாறு உரு வீதம் ஜெபிக்க வேண்டும் என்பார், “ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய” என்றார்.

இக் கந்தர் சஷ்டி கவசத்தைப் பயபக்தியோடும் ஆசார நியம நிஷ்டைகளோடும் ஓதி வழிபடுபவர்களுக்குக் கந்தப்பெரு மான் கொடிய பழைய வினைகளும் அவற்றால் ஏற்படும் துன்பங் களும் நீக்கியருளி ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று பெரிய மலங்களையும் அடக்கித் தலைவனை ஆராய்கின்ற பழைய அடியார்களுடன் சேர்த்துப் பேரின்பத்தை யளித்து அழகிய தாமரை மலர்போலும் தமது திருவடி காட்டித் தடுத்தாட்

கொண்டருளுவன் என்க. இத்தகைய சிறப்பு வாய்ந்தது ஆகையி லூலே சஷ்டி கவசம் எனப்பட்டது.

"ஒழுக்கமுடன்,
இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தம்மைவிடுத்து
ஆயும் பழைய வடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச்—சேய
கடியேர்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்டு
அடியேற்கு முன்னின் றருள்"

—கந்தர் கலிவெண்பா

என்பதனுல் அறிக.

வழிபடுவார்க்கும் இடையருது சிந்திப்பார்க்கும் இஷ்ட காமியாதிகள் கைகூடும் எனவே, அங்ஙனம் செய்யாதார்க்கு அவையுண்டாக மாட்டா என்பது தானே பெறப்பட்டது.

இச் செய்யுள் இருவிகற்ப நேரிசை வெண்பா; ஒரு விகற்ப நேரிசை வெண்பாவும் உண்டு. வெண்பாக்கள்: நேரிசை, இன் னிசை, குறள், சிந்தியல், பஃறொடை முதலியனவாகும். வெண் பாவை முதற்பா வென்றும் பிராமண சாதிப்பா என்றுங் கூறுவர். அவற்றின் இலக்கணங்களை யாப்பருங்கலக் காரிகையிற் காண்க. வெண்பாப் பாடுதலில் சிறப்புற்றவர் புகழேந்திப் புலவர். இதனை "வெண்பாவிற் புகழேந்தி" என்பதனு னறிக.

குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

(ப-ரை.) நெஞ்சே-மனமே! அமரர்-தேவர்களுடைய, இடர்-துன்பமானது, தீர-நீங்கும்படி, அமரம் புரிந்த-யுத்தம் புரிந்த, குமரன்-குமரக் கடவுளுடைய, அடி-திருவடிகளை, குறி-தியானிக்கக் கடவாய்.

(வி-ரை.) மனம் ஒருவழி நில்லாமல் கண்டவாறு ஓடித் திரியும் தன்மை யுடையதான குரங்காகையினாலே, மனத்தை முன்னிலைப்படுத்தி, 'நெஞ்சே' என விளிவேற்றுமையிற் கூறினர். விளி - அழைப்பு, இரு வகைப்படும். அவை அண்மை விளி, சேய்மை விளி என்பன. அவற்றுள் இது சேய்மை விளி.

"பாவி மனக் குரங்காட்டம்
பார்க்க முடியாதே"

—திருவருட்பா

எனவும்,

"காடுங் கரையு மனக்குரங்கு கால் விட்டோட
வதன் பிறகே"

"ஆடிய கறங்குபோ லோடியுழல்
சிந்தையை"

—தாயுமானவர் பாடல்

எனவும்,

"அன்பர் மனமாங்குதிரை நிறைகொண்டவ
னென் றேத்தும்"

—சோணசைலமாலை

எனவும் கூறியவற்றாற் காண்க.

"அன்றியும், மனக் குரங்கைக் கட்டுப் படுத்தினாலல்லாமல் எடுத்த கருமங்கள் முட்டின்றி முடியாவெனவும், கட்டுப்படுத்தினால் தான் முன்னியவனைத்தும் முட்டின்றி முடியுமெனவும் கருதி நெஞ்சை முன்னிலைப் படுத்தினர். இவ்வாறு மனத்தை முன்னிலைப் படுத்துவது நெஞ்சொடு கிளத்தல் என்னும் துறையின் பாற்படும் என்க. அமரர் - அழிவில்லாதவர், அதாவது மரணமில்லாதவர்; அமரம் - அழிவின்மை: மரண மின்மை. அதனை யுடையவர் அமரர். இது காரணப் பெயர்.

அமுதபானம் செய்ததாலே அழியா உடல் பெற்றுள்ளவர்களான இந்திரன் முதலிய தேவர்களுடைய துயரமானது நீங்கும்.

படியாக சூரபதுமன் முதலானவர்களுடனே கொடிய யுத்தம் புரிந்து அவர்களை வேருடன் களைந்து ஒழித்தருளினாராகலின், 'அமரரிடர் தீர வமரம் புரிந்த' என்றார். முருகப் பெருமான் சிவபெருமானுக்கு இளைய பிள்ளை யாகலானும் எப்போதும் இளமை மாறாதவராகலானும் மன்மதனோடு ஒப்பப் பேரழகுடையவராகலானும் 'குமரன்' என்றார். இதனை,

"குன்றுதோ ளுடுங் குமரனே யெனவுங் கொடுஞ்சிலை
மதனவே ளெனவும்"

—சோணசைலமாலை

என்று கூறுமாற்றானறிக.

வேள் என்பதற்கு வேட்கை யுண்டாக்குபவன் என்பது பொருள். எனவே வேள் என்பது முருகக்கடவுளையும் மன்மதனையும் குறிக்கும் பொதுப் பெயர். ஆகலின் அப் பெயரின் முன் அடைமொழிதந்து வழங்கின் இருவரி லொருவரென்று உணர்ந்து கொள்ளுதல் முடியும். எனவே, செவ்வேள், குமரவேள் என வழக்காற்றில் வருதல் காண்க. இரக்ஷித்தலையே தொழிலாக வுடையன திருவடிகளே யாகலானும், பக்தகோடிகள் தங்கள் மனோபீஷ்டத்தை அடைவதற்குத் துணைபுரிவது திருவடி யொன்றே யாகலானும், அத் திருவடிகளே தியானத்திற்கு உபயோகமாக இருக்கின்றமையானும் 'அடி குறி' என்றார்.

இதனை,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

—திருக்குறள்

என்பதனால் திருவடிப்பெருமை கூறப்பட்டிருத்தல் காண்க.

ஈண்டு அடி என்னும் பால்பகா வஃறிணைப் பெயர் அடிகள் எனப் பன்மைப்பாலை யுணர்த்திற்று. என்னை?

"பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய"

என்பது விதியாகலின்.

"மொழியாய்த் தொடரினு முன்னனைத் தெழுத்தே"
—நன்னூல்

என்பதில் கூறியதுபோலவே என்க. இது சாதியொருமை எனவும் படும்.

குறி-நியானமிலை, குறித்தல். குமாரக்கடவுளை இடையறாமல் சிந்தித்தால், அவர் எவ்வாறு தேவர்களுடைய துன்பத்தைத் தீர்த்தருளினரோ, அவ்வாறே, நமது துன்பத்தையும் தீர்த்தருளுவார் எனப் பொருள்படும்படி நெஞ்சைக் குறித்துக் கூறினாராகலின், "அமரரிடர் தீர வமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி" என்றார். அமரம் - இதில் அம் சாரியை; நெஞ்சம் என்பது போல.

நூல்

நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்

(ப - ரை.) சரவணபவன் - சரவணப் பொய்கையில் அவதரித்தருளியவரும், ஆர் - பத்தி பொருந்திய, சிஷ்டருக்கு - தொண்டருக்கு, உதவும் - உபகாரம் செய்கின்ற, செங்கதிர் - சிவந்த கிரணங்களையுடைய, வேலோன் - வேலாயுதத்தை யுடையவனும்.

(வி - ரை.) சரவணப் பொய்கையில் அவதரித்தருளினமையால் முருகக்கடவுளுக்கு 'சரவணபவன்' என்னும் திருநாமம் ஏற்பட்டது. இதனை,

"ஈங்கன நமது கண்ணி னெய்திய குமரன் கங்கை
தாங்கினள் கொண்டுசென்று சரவணத் திடுத லாலே
காங்கய னெனப்பேர் பெற்றான் காமர்பூஞ் சரவ ணத்தின்
பாங்கரின் வருத லாலே சரவண பவனென் றுளான்"
—கந்தபுராணம்

" மங்கலில் கங்கையு மப்பொறி தன்னை வண்ண முறஞ்
சரவண மிசை வைப்ப " —கந்தபுராணச் சுருக்கம்

" சேப்பகீ ரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்
றன்னவளுங் கொண்டமைதற் காற்றாள் சரவணத்திற்
சென்னியிற் கொண்டுய்ப்ப " —கந்தர் கலிவெண்பா

என்பனவற்றானறிக. பக்தகோடிகளைக் காக்குங் கருவியாக அவர் திருக்கரத்தில் உள்ளது வேலாயுதமாகலின், "சிஷ்டருக்குதவும்" என்றார். 'சிஷ்டருக்குதவும்' எனவே, துஷ்ட நிக்கிரகமும் புரிய வல்லது அவ்வேலாயுதமே என்பது பெறப்பட்டது. இதனை,

" குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்" —அபியுக்தர் வாக்கு

என்பதனானும் அறிக.

புல்லோரைக் கொன்று நல்லோருக்கு உதவி புரிவதாகலின் 'சிஷ்டருக்குதவும்' என்றார். 'சிஷ்டர்' என்னும் பதம் சிரேஷ்டம் என்னும் வடமொழியிலிருந்து வந்தது. 'சிஷ்டாசாரம்' என இக்காலத்தும் வழங்கி வருகிறது.

பகைவர் இரத்தம் தோய்ந்திருத்தலாலே தன் நிறம் மாறுபட்டுச் சிகப்பு நிறம் பிரகாசிக்குமாதலின், 'செங்கதிர்' என்னும் அடைமொழி கொடுத்துச் 'செங்கதிர் வேல்' எனப்பட்டது.

" காடும் மலையும் கடலு முருளச்
சாடும் தனிவே லுடையாய் சரணம்
ஆடும் மயில்வே லரசே சரணம்
பாடும் வரதற் பரனே சரணம்" —கந்தரனுபூதி

என உடைமைப்பொருளை உடையான் மேலேற்றிக் கூறப்பட்டது. இது உபசார வழக்கு எனப்படும். முருகக் கடவுளுக்குச் செவ்

வேள் என்னும் பெயருண்மையின் செங்கதிர் என்பதை அம்முருகனுக்கு எற்றினும் அமையும்.

> " பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
> ஆவோ வாகலும் செய்யுளு ளுரித்தே " —நன்னூல்

என்ற விதிப்படி 'வேலோன்' என்ற சொல்லானது செய்யுளின்பம் பயத்தற் பொருட்டு, 'வேலோன்' என வந்தது. (1)

> பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
> கீதம் பாடக் கிண்கிணி யாட

(ப - ரை.) பாதம் இரண்டில் - இரண்டு பாதங்களிலும், பல்மணி - பலவகை மணிகள் கோக்கப்பட்ட, சதங்கை - சதங்கை என்னும் ஆபரணமானது, கீதம்பாட - இனிமையான பாட்டைப் பாடவும், கிண்கிணி - கிண்கிணி என்னும் ஆபரணமானது, ஆட - அசைய.

(வி - ரை.) முருகக் கடவுள் இரண்டு திருப்பாதங்களிலும் பல இரத்தினங்கள் கோத்த சதங்கையுடனும் கிண்கிணியுடனும் விளங்கினாரெனக் கூறினர். 'பாதம் இரண்டில்' என்பதில் 'இல்' என்பது ஏழாம் வேற்றுமை உருபு, இடப்பொருளில் நின்றது. சதங்கை என்பது பல கெச்சங்களால் கோக்கப்பட்ட ஆபரணம். கிண்கிணி என்பது உள்ளே பருக்கைக் கற்களையிட்டு ஒலியெழும்படி தண்டை வடிவமாகச் செய்யப்பட்ட ஆபரணம். கிண்கிணி - காரணப் பெயர். கிணீர் கிணீர் என்ற சப்தத்தைக் கொடுக்கின்றமைபற்றி யுண்டான பெயர். "கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடி" எனத் திருமுருகாற்றுப்படையில் கூறியதும் நோக்கத்தக்கது. எனவே முருகக்கடவுள் திருவடிகளில் பல மணிகள் கோத்த சதங்கையுடனும் கிண்கிணியுடனும் விளங்கினரெனக் கூறியபடி. பல மணி - பன்மணி. இதனை,

" பலசில வெனுமிவை தம்முன் றும்வரின்
இயல்பு மிகலு மரா மேசு
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற" —நன்னூல்

என்பதானறிக.

" தட்டை ஞெகிழங்கழல் சதங்கைகள் சிலம்பக்
கட்டழகு மேயவரை ஞான்மணி கறங்க
வட்டமணி குண்டல மதாணிநுதல் வீர
பட்டிகை மினக்குமர னுடல்பயில் வின்றான் "
—கந்தபுராணம்

எனக் கூறியபடி, கந்தவேள் கழலிணைகளின் அழகினைச் சிறப் பித்தவாறும். (2)

மைய னடஞ்செயும் மயில்வா கனனுர்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து

(ப - ரை.) மையல் - பார்ப்பவர்களுக்கு விருப்ப முண்டாகத் தக்க, நடம்செயும் - திருநடனம் புரிகின்ற, மயில்வாகனனுர் - மயிலைத் தமக்கு வாகனமாகக் கொண்டருளியவராகிய முருகப் பெருமானுர், வந்த - என் முன்னே வந்து தோன்றி, கையில், தமது திருக்கரத்தில், ஆர் - பொருந்திய, வேலால் - வேலாயுதத் தினுலே, என்னை - அடியேனை, காக்க என்று - காக்கக் கடவன் என்று கருதி, சஷ்டியை - சஷ்டி கவசமென்னும் இம் மந்திரத்தை, நோக்க - மனத்தால் சிந்திக்க, எ - று.

(வி - ரை.) கண்டவர்களின் மனத்தைக் கவராநின்ற திரு நடனத்தை யாடாநின்ற மயிலைத் தமக்கு வாகனமாகக் கொண் டருளிய முருகப் பெருமானுராகலின், 'மைய னடஞ்செயும் மயில் வாகனனுர்' என்றார். மயில்வாகனம் முருகக் கடவுளுக்கு மிகவும் உரியதாம். சூரபத்மன் யுத்தத்தில் முருகக்கடவுளுக்கு இந்திரன் மயில்வாகனமாக அமைந்திருந்தான். அதன் பிறகு சூரபதுமனே

அவருக்கு மயில்வாகனமாகி எப்போதும் அவரைத் தாங்கிக் கொண்டேயிருக்கின்றனன். இதனை,

"இந்திர னனைய காலை யெம்பிரான் குறிப்புந் தன்மேல்
அந்தமி லருள்வைத் துள்ள தம்மையு மறந்து நோக்கிச்
சுந்தர நெடுங்கட் பீலித் தோகைமா மயிலாய்த் தோன்றி
வந்தனன் குமரற் போற்றி மரகத மலைபோ னின்றான்."

"சீர்திகழ் குமார மூர்த்தி செறிவிழி கொண்ட தொல்லை
ஊர்தியி னிருக்கை நீங்கி யுணர்வுகொண் டொழுகி நின்ற
சூர்திகழ் மஞ்ஞை யேறிச் சுமக்குதி யெம்மை யென்னாப்
பார்திசை வான முற்றும் பரியென நடாத்த லுற்றான்"
—கந்தபுராணம்

"மண்டும்புக ழறுமா முகன் மகவான் மயில்
வடிவாய் வரவுன்னலு, மவனப்படி
வந்தானவன், மிசையே சண்டன்றனை
யுதையவ னருண் மாமகனேறி"—கந்தபுராணச்சுருக்கம்

"போரவுணன்
அங்கமிரு கூறு யடல்மயிலுஞ் சேவலுமாய்த்
தங்கமுட னேர்த்தெழுந்து தோன்றுதலும்—அங்கவற்றுள்
சீறுமா வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே" —கந்தர் கலிவெண்பா

என்பனவற்று னறிக.

சஷ்டி என்பது காலவாகு பெயராம். அதிலோதப்படும் கவசமாகிய மந்திரத்தை உணர்த்திற்று.

இந் நிலைமண்டில ஆசிரியப்பாவின் முதலடியிலுள்ள எச்சமானது மேல்வரும் அடிகளோடு தொடர்ந்து முடியும். இவ்வாறே பத்துப் பாட்டில் பல இடங்களில் வந்துள்ளது காண்க.

மயிலைத் தனக்கு வாகனமாகக் கொண்டருளிய முருகக் கடவுள் எனக்கு முன்னே கண்கூடாக வந்துதோன்றிக் காட்சியளித்து அடியேனை ரக்ஷிக்க என்று மனத்திலே நினைத்து சஷ்டி

கவசமாகிய இம்மந்திரத்தை மனத்தினாலே தியானஞ் செய்யவும் என்பது கருத்து. (3)

வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

(ப-ரை.) வேலாயுதனார்-வேலாயுதத்தைத் திருக்கரத்தி லேந்திய முருகக் கடவுள், வரவர-அடியேனைத் தடுத்தாட் கொள்ளும்படியாக அடியேன் முன்னே வந்தருளுக வந்தருளுக, மயிலோன்-மயிலைத் தனக்கு வாகனமாகக் கொண்ட குமாரக் கடவுள், வருக வருக வருக வருக-வந்தருள்புரிக வந்தருள் புரிக வந்தருள்புரிக வந்தருள்புரிக, எ-று.

(வி-ரை.) வரவர என்னும் அடுக்குத்தொடர் வேலா யுதனார் என்பதற்குப் பின்னும், வருக வருக வருக என்னும் மூன்றடுக்கும் ஈற்றிலுள்ள வருக என்பதும் மயிலோன் என்பதற்குப் பின்னும் கூட்டப்பட்டன. வர வர வருக வருக என்பன வியங்கோள்கள்.

" அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும் "

—நன்னூல்

என்ற விதிப்படி மகிழ்ச்சிப் பொருள் நிலையால் இரண்டு மூன்று சொற்களாக அடுக்கி வந்தன. மேல் வரும் வியங்கோளடுக்குக் களையும் இவ்வாறே கொள்க. இவ்வரிகளால் முருகக் கடவுளின் திருப்படையாகிய வேலாயுதத்தை அவன் வாகனமாகிய மயிலைப் போற்றினார். பெருமானுக்கு வேலும் மயிலும் மிக முக்கிய மாதலின் என்க. இதனாலேதான் மற்றெதனாலேயோ குகனடியார்களும் அஷ்டாவதானிகளும் எத்தொழில் ஆரம்பிக்கும் போதும் வேலு மயிலுந் துணை, என்றும், அயிலும் மயிலும் துணை என்றும் கூறித் தொடங்குவதை இன்றும் கண்கூடாகக் காணலாம். (4)

இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

(ப - ரை.) இந்திரன் முதலா - தேவேந்திரன் முதலாக, எண்திசை - எட்டுத் திக்குகளிலுள்ள (அஷ்டதிக்குப்) பாலகர்களும், போற்ற - துதிக்க, மந்திரம் - மந்திர சக்தியையுடைய, வடி - கூர்மை தங்கிய, வேல் - வேலாயுதமானது, வருக வருக - (அடியேனைக் காப்பதற்காக) வரக்கடவது வரக்கடவது, எ - று.

(வி - ரை.) எண்டிசை - இடவாகு பெயராய் எட்டுத் திக்குகளிலுமுள்ள திக்குப்பாலகர்களான தேவர்களை யுணர்த்திற்று. அஷ்டதிக்குப் பாலகர்கள் - இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர்கள். இந்திரனைத் தலைமையாகக் கொண்ட எட்டுத்திக்குகளிலுமுள்ள பாலகர்கள் முதல் மற்றையோரும் ஸ்தோத்திரம் செய்ய என்பார், "இந்திரன் முதலா வெண்டிசை போற்ற" என்றார். வேல் கூர்மைமிக்கதாதலானும் வேலைப் பகைவர்மீது பிரயோகிக்கும் காலத்தில் மந்திரோச்சாரணம் செய்து பிரயோகித்தல் முறையாதலானும், 'மந்திர வடிவேல்' என்றார். மந்திர வடிவேல் என்றதனால் அது தவறாமல் துன்பத்தை நீக்கி இன்பத்தை யளிக்கத்தக்கது என்பது கூறாமலே அமையும். இதனை,

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை.

— அபியுக்தர் வாக்கு

என்பதனு னறிக. மந்திரவேல் - மந்திர வடிவமாக இருந்து பகைவரைச் சோதிக்கும் வேலாகலானும், முருகக் கடவுளுக்குப் பரமசிவனால் தேவர்களைக் காத்து அசுரர்களைச் சிக்ஷிக்கவே மந்திரத்துடன் அளிக்கப்பட்டதாலும், மந்திரவேல் எனப்பட்டது. அபிமன்யு கண்ணபிரான் கையினின்றும் கொண்ட வாளை 'மந்திரவாள்' என்றதும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. வடிவேல் வினைத்தொகை. கொல்லன் உலைக்களத்தில் வடிக்கப்பட்ட வேல் என்றும் பொருள் கூறுவர். பரமன் திருக்கரத்திற்றிகழும் வேல்

வேறு வினைஞரால் செம்மையிடச் சாலாதாகலின் அப் பொருள் அத்துணைச் சிறப்புடைத்தன்று.

வடிவேல் என்பதற்கு, கூறிய வேலைத் தாங்கிய முருகக் கடவுளே எனப் பொருள் கூறினும் அமையும். என்னெனின், உடைமையும் உடையானும் ஒன்றே யாகையால் உடைமைப் பொருளை உயர்த்திக் கூறவேண்டிய இடத்து உயர்த்திக் கூறுதல் அமையுமென்க. முதலாக எனற் பாலது முதலா என்றாயது, செய்யுள் விகாரம் கடைக்குறை. (5)

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக

(ப-ரை.) வாசவன் - தேவேந்திரனுக்கு, மருகா - மருமகனே, வருக வருக - வந்தருளுக வந்தருளுக; நேசம் - அன்பு பொருந்திய, குறமகள் - குறவரிடத்திலே வளர்ந்து வந்த வள்ளியின், நினைவோன் - ஞாபகத்தையுடையவனாகிய முருகக் கடவுள், வருக - வந்தருள்க, எ - று.

(வி-ரை.) அஷ்ட வசுக்களுக்குத் தலைவனாகிய தேவேந்திரனுக்கு மருமகனாகலின் வாசவன் மருகா என்றார். வாசவன் செல்வத்திற்குத் தலைவன் என்றும், அஷ்ட வசுக்களுக்குத் தலைமையுடையவனென்றும் காரணப் பெயராம்.

"அணியார் முருகேசன் வளர்த்த தடத்தமுதக்
 கொடி சுந்தரியென் றிருவோர்
தணியாநசையிற் குகனைத் தழுவத் தவமுற்றது
 கண்டவர் தங்கனுறப்
பணியாவெதிர் நிற்ப விரும்பியதென் பகர்வீரென
 வெம்மை மணத்தியெனப்
பிணியான தறுத்தெனை யாளுமருட் பெருமா
 னவ ரோடிது பேசவனால்.

" பேரன்பு பொருந்திய நுங்கடமைப் பின்மன்ற
   லியற்றுது மவ்வளவுஞ்
சீரிந்திரன் வேடர்கள் பான்மகளாய்ச் சென்
   றேயிரு மென்றரு ளோடுவிடுத்
தாருந்தொழு கந்தவிலங்கலில் வந்தணிசேர்
   கயிலாய மடைந்தாரனே
டேருந்துமையாளை வணங்கியவர்க் கிடையாக
   விருந்தன னெம்பெருமான் "
—கந்தபுராணச் சுருக்கம்

என்றபடி சுந்தரி அமுதவல்லி என்ற இருவருமே வள்ளி தெய்வயானை என்னும் பெயருடனே வந்து மணஞ் செய்துகொண்டனர். தேவயானையைத் தேவேந்திரன் கன்னிகாதானமாகக் கொடுக்க மணம் புரிந்து கொண்டமையாலே 'வாசவன் மருகா' என்றார்.

நீங்காத அன்பினைக் கண்டமாத்திரத்திலே சொண்டவளாகிய குறவருக்குப் பெண்ணாகி வளர்ந்த காரணத்தால் குறப்பெண்ணென்ற பெயர் பெற்ற வள்ளி நாயகியாரை உகந்தவனென்று எக்காலத்தும் மனத்திலே ஞாபகத்தை யுடையவனாகலின் முருகக் கடவுளை 'நேசக் குறமகள் நினைவோன்' என்றார். இதனை,

" பமர மடுப்பக் கடாமெடுத் தூற்றுமொர்பகடு
நடத்திப் புலோமசைச் சூழ்புயற் பருகியிடக்
கற்பகாடவிப் பாற்பொலி பரவையிடைப்
பத்மமா தெனத் தோற்றிய குமரியிருக்கக்
   ...   .
குறவர் மடட்குச் சலாமிடற் கேக்கறு குமரனை
முத்துக் குமரனைப் போற்றுதும் "
—மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ்

என்பதனானறிக. (6)

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக

(ப-ரை.) ஆறுமுகம் படைத்த - ஆறு திருமுகங்களைப் பெற்ற, ஐயா - ஐயனே, வருக - வந்தருளுக; நீறு - திருநீற்றை, இடும் - தம் திருமேனியில் தரித்துள்ள, வேலவன் - வேலாயுதத்தை யுடையவனே, நித்தம் - ஒவ்வொரு நாளும், வருக - வந்தருளுக, எ-று.

(வி-ரை.) தேவர்கள் சிவபெருமானிடஞ் சென்று சூரபன்மன் முதலியோரால் தாங்கள்படுந் துன்பத்தை நீக்கும்படி வேண்ட, அவர் சிவஞானச் செல்வர்கள் சதா சிந்தித்துக் கொண்டிருக்கும்படியான ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், அதோமுகம் ஆகிய ஆறு திருமுகங்களோடும் தோன்றி நிற்க, அம்முகங்களிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் உண்டாக, அவற்றை அக்கினிதேவன் கங்கையில் விட, கங்கை சரவணப் பொய்கையில் சேர்க்க, அத்தீப்பொறிகளினின்றும் முருகக் கடவுள் ஆறு திருமுகங்களும், பன்னிரு திருக்கரங்களும் உடையவராய்த் தோன்றினர். இதனை,

"சற்றுந் தகவில் கொடுஞ்சூரன் றன்னு லிந்நா ளின்னன்மிக
உற்று வருந்தித் திரிந்திளைத்தோ முன்னைப்போல வொருசுதனை
வெற்றி பொருந்த வளித்தெமது விழுமந் துரப்ப வேண்டுமென
அற்றன் றியசிர்க் களப்பெருமா னறுமா முகங்கொண் டாங்
கிருந்தான்" —கந்தபுராணச் சுருக்கம்

"வந்திக்கு மலரோ னாதி வானவ ருரைத்தல் கேளாப்
புந்திக்கு ளிடர்செய் யற்க புதல்வனைத் தருது மென்னு
வந்திக்கு நிகர்மெய் யண்ண லருள்புரிந் தறிஞ ராயோர்
சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுக மாறுங் கொண்டான்"

"அருவமு முருவுமாகி யாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
யொருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய."

“மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினா லளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடு நிமல மூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி யருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந் தருளினானே.

சிற்பரன்றான் கொண்டுள்ள திருமுகமாறு தம்மிற்
பொற்புறு மதற்கண் டோறும் புலிங்க மொன்றொன்று
தந்தான்” —கந்தபுராணம்

“பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையு முக்கட் பரஞ்சோதி—யாங்கொருநாள்
வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோ டதோமுகமும்—தந்து
திருமுகங்க ளாறாகிச் செந்தழற்க ணாறு
மொருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப”
என்பனவற்றானறிக. —கந்தர் கலிவெண்பா

ஆறு திருமுகங்களை யுடையவராகலின் ஆறுமுகன் எனப் பட்டான். ஆறு திருமுகங்களையுடைய அப் பெருமான் அத் திருமுகங்களாற் செய்யும் நன்மைகள் யாவையோவெனில், ஒரு முகமானது பேரந்தகாரத்தைப் பொருந்திய இவ்வுலகம் இருளின்றி விளங்குமாறு பல கதிர்களை விரிக்கின்றது மற்றொரு முகமானது பக்தகோடிகள் தனது புகழைக் கூறித் துதிக்க அவர்கள் விருப்பம் போல நடந்து அன்போடு மகிழ்ந்து வரங்களைக் கொடுக்கின்றது. மற்றொரு முகமானது மந்திரவிதியின் முறையினிடத்துத் தவறுதலில்லாத அந்தணர் இயற்றும் யாகங்களைத் தீங்கு வாராதபடி ஞாபகத்தில் வைத்துக் காக்கின்றது. மற்றொரு முகமானது யாகமல்லாத மற்றைய பொருள்களை மகிழ்வோடு தேடிச் சந்திரனைப் போல பத்துத் திசைகளிலும் விளங்கச் செய்கின்றது. மற்றொரு முகமானது எதிரிகட்கு வெற்றியாகச் சென்றுகொண்டிருந்த போரை அழித்துப் பகைவரை யழித்து நன்மை செய்கின்றது. மற்றொரு முகமானது கொடிபோன்ற இடையையுடைய வள்ளி

யம்மையாருடன் குறைகலந்றுடன் குலவிச் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கின்றது. இதனை,

" மனனேர் பெழுதரு வாணிற முகனே
மாயிருண் ஞால மருவின்றி விளக்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக
மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங் கொடுத்தன்றே யொருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி யோர்க்கும்மே யொருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள்போலத் திசை விளக்கும்மே யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட்டன்றே யொருமுகம்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே யாங்கம்
மூவிரு முகனு முறைநவின் றொழுகலின் "

—திருமுருகாற்றுப்படை

எனவும்,

" வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத் தடிந்து
தெவ்வருயிர் சிந்தும் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும்—விடுத்தகலாப்
பாச விருள் துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன்
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோக மளிக்கும் முகமதியும்—தாகமுடன்
வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவுந்
தந்தருளுந்தெய்வமுகத் தாமரையும்"-கந்தர் கலிவெண்பா

எனவும்,

" ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே "

—திருப்புகழ்

எனவும் ஏனையோரும் கூறியிருத்தல் காண்க.

'நீறிடும் வேலவன்' என்றதற்குத் தன் அருமைத் தந்தையார் அணிந்து வருகின்ற திருவெண்ணீற்றினையே தானும் இட்டுத் திகழும் வேலவன் என்பது பொருள்.

'ஆறுமுகம் படைத்த ஐயா' என மகன் தந்தையை நோக்கி விளிப்பது போலவே விளித்தழைத்தனர். (7)

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக

(ப - ரை) சிரகிரி - சிரமலையில் வாசஞ் செய்கின்ற, வேலவன் - வேலாயுதத்தைத் தரித்த முருகக்கடவுள்; சீக்கிரம் - விரைவாக, வருக - வந்தருள்க; சரஹண பவனார் - நாணற்காடாகிய சரவணப் பொய்கையிலே திருவவதாரஞ் செய்த கடவுள், சடுதியில் - சீக்கிரமாக, வருக - வந்தருளுவாராக, எ - று.

(வி - ரை.) நாணற் காடாகிய சரவணப் பொய்கையிலே அவதரித்த காரணத்தால் முருகக் கடவுளுக்குச் சரவணபவன் என்னுந் திருநாமம் ஏற்பட்டது. சரவணம் - சரவணப்பொய்கை, பவன் - உற்பத்தியானவன்; சரவணபவனார் என்பதில் ஆர் என்னும் பன்மைப்பால் விகுதி உயர்வு குறித்து வந்தது. (8)

ரஹறண பவச ரரரர ரரர
ரிஹறண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹற வீரா நமோ நம
நிபவ சரஹறண நிறநிற நிறென
வசர ஹறணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக

(ப-ரை.) ரஹறணபவச-, ரரரரரரர-, ரிஹறணபவச-, ரிரிரிரி ரிரிரி-, விணபவ சரஹற-, (என்று பலவகையாக மாறி வரப்பட்ட சடாக்ஷர முதலிய பல அக்ஷரங்களின் மூலப் பொருளும் வடிவுமாகிய), வீரா-(சூரபதுமன் முதலியவர்களை வென்ற) வீரத் தன்மையுடையவனே!, நமோ நம-உனது மேலான காரியத்திற்கும் உனக்கும் நமஸ்காரம், நிபவ சரஹறண-நிபவ சரஹறண என்னும் அக்ஷரங்களின் சொரூபமானவனே! வசரஹறணப-வசர ஹறணப என்னும் அக்ஷரங்களின் சொரூபமான முருகனே!, நிறநிற நிறென-(நீ மயில்வாகனத்தின்மேல் ஆரோகணித்தருளி வேகமாக வருவதனால்) நிற நிற நிற என்னும் ஓசை யுண்டாகும்படி, வருக வருக-வந்தருளுக வந்தருளுக; அசுரர் குடிகெடுத்த-தேவர்களுக்குப் பகைவராகிய சூரபதுமன் முதலிய அசுரர்களுடைய குடும்பங்களை அடியோடு நாசப்படுத்திய, ஐயா-ஐயனே, வருக-வந்தருள்வாயாக, எ-று.

(வி-ரை.) ரஹறண என்றது முதல் இரண்டு வரிசைகளிலும் அடுக்காக வந்திருக்கும் ஒவ்வோர் எழுத்துக்களும் பீஜாக்ஷரங்களாகும். 'விணபவ சரஹற' என்றது மாறிவந்த சடாக்ஷரியின் ரூபம். வசரஹறணப என்பது மாரண சக்கரத்தின் அமைப்பு அக்ஷரஸங்கியைக் காட்டுவதாகும் எனவும் இம் மந்திரத்தாலே துதித்தால் வறுமை வல்வினை யாவும் அணுகாதெனவும் இதன் பீஜாக்ஷரம் ஔவும் கிளியுமாம் எனவும் கூறுவர். இவற்றின் இரகசியங்களை அறிந்துகொள்ள ஆவலுள்ளவர்கள் ஞானாசிரியர்பால் கேட்டுணர்க. நமோ, நம என்பவைகள் மந்திரங்களின்

ஈற்றில் வணக்கத்தை புணர்த்த வருஞ் சொற்கள். இவற்றிற்கு, 'வணக்கஞ் செய்கிறேன்,' 'நமஸ்கரிக்கின்றேன்' என்பன பொருள்களாம். கிறுகிற என்னும் அடுக்குத் தொடர் ஈண்டு ஒலிக்குறிப்புப் பொருளில் வந்துள்ளது. தேவர்களுக்கு நாளும் துன்பத்தையே உள்ளம் உவந்து செய்துவந்தவர்களான அசுரர்களின் குலத்தை மீண்டும் தோன்றாதபடி ஒருவரில்லாமல் அக்குடியினைச் சார்ந்தவர்களை யெல்லாம் வேருடனே வேலா லழித்தொழித்த தந்தையினும் தந்தையானவனே யென்பார், 'அசுரர் குடி கெடுத்த ஐயா' என்றார். (9, 10, 11)

என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக.

(ப - ரை.) என்னை - அடியேனை, ஆளும் - காத்தருளுகின்ற, இளையோன் - இளைய குமாரனும், வேலோன் - வேலாயுதத்தைத் திருக்காத்திலேந்தி யருளியவனுமான முருகன், கையில் - பன்னிரண்டு திருக்கரங்களிலும், பன்னிரண்டு ஆயுதம் - பன்னிரண்டு என்னும் வகையினையுடைய ஆயுதங்களும், பாசம் - பாசம் என்னும் ஆயுதமும், அங்குசம் - அங்குசம் என்னும் ஆயுதமும், பரந்த விசாலமான, பன்னிரண்டு விழிகள் - பன்னிரண்டு என்னும் எண்ணுள்ள திருநேத்திரங்களும், இலங்க - பிரகாசத்தைச் செய்ய, என்னைக் காக்க - அடியேனை (துன்பக் கடலில் தவளவிடாது) காத்தருளும் பொருட்டு, விரைந்து - அதிசீக்கிரமாக, வருக வந்தருளுவாயாக, எ - று.

(வி ரை.) முருகக் கடவுள் சிவபெருமான் புதல்வர்களுள் இரண்டாவது புதல்வராகலின் 'இளையோன்' எனப்பட்டார். என்றும் மாறாது நிற்கும் இளமைப் பருவத்தை புடையவராதலாலும் இளையோன் எனப்பட்டார் எனினும் அமையும். இச்

காரணங்கள் குறித்தே குமரன் என்னும் திருநாமம் இவர்க்கேற்பட்டது.

'என்னை யாளும் இளையோன்' எனக் கூறினமையின், இவர் நீங்காத முருக பக்தியுடையவ ரென்பதும், அப் பெருமானையே உபாசனா மூர்த்தியாகக் கொண்டவ ரென்பதும், அவர் வரப் பிரசாதத்தைப் பெற்று வாழ்ந்தவ ரென்பதும் கரதலாமலகமென விளங்குகின்றது.

கை என்பதும், ஆயுதம் என்பதும் சாதியொருமைகளாய் நின்று, முறையே பன்னிரண்டு திருக்கரங்களையும் பன்னிரண்டு ஆயுதங்களையும் உணர்த்தின. பாசம் + அங்குசம் என்பன பாசாங்குச மெனப் புணர்ந்தன; இங்ஙனம் புணர்ந்தது வடமொழிப் புணர்ச்சியாகிய தீர்க்கசந்தி யெனப்படும்.

பாசம் என்பது பகைவர்களைப் பிடித்துக் கட்டும் கயிற்று வடிவமாகிய ஓர் ஆயுதம். இஃது அன்பெனவும் கயிறெனவும் பொருள்படும். அங்குசம் என்பது யானைபோலத் தருக்கித் திரியும் பக்தி உன்மத்தரை அடக்கி யாளும்படியான இரும்பினாற் செய்யப்பட்ட கருவி. இதனை இரும்பினாலாகிய முட்கருவி யென்பர் பரிமேலழகர். இரும்புத் தோட்டி என்பது இரும்புமுள். எனவே அங்குச மென்பதும் தோட்டி என்னும் ஆயுதமேயாம். விழிகள் பனனிரண்டு என்பது பன்னிரண்டு விழிகள் என மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது.

கண்கள் விசாலமாக நீண்டிருப்பது உத்தமபுருஷ இலக்கணமாகலின், 'பரந்தவிழிகள்' என்றார். விழி - விழித்தலையுடையது காரணப் பெயர். வருக – வியங்கோள். ஆயுதங்களும் விழிகளும் இலங்க வருக என்றமையால், வந்து ஆயுதங்களால் பகைத்துன்பங்களை யொழித்து, விழிகள் திருவருள் பாலிக்க வேண்டும் என்பதாம். இளையோன் கையில் பன்னிரண்டாயுதம் என்றதனால், பன்னிரு திருக்கரங்களிலும் பன்னிரண்டு ஆயுதங்கள் பொலிகின்றன என்பதாம். இதனை,

" ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்'
விண்செலன் மரபினையர்க் கேந்திய தொருகை
உக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇயதொருகை
அங்குசங் கடாவ வொருகை யிருகை
ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்பவொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ட வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வான்அர மகளிர்க்கு வதுவைசூட்ட வாங்கப்
பன்னிரு கையும் பாற்பட வியற்றி "

—திருமுருகாற்றுப்படை

எனவும்,

" ஆர முதந்
தேவர்க் குதவுந் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும் - ஓவாது
மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர வணிந்த திருக்கரமும் - மார்பகத்தில்
வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கி லொருகரமும் - மொய்த்த
சிறுதுடிசேர் கையமணிசேர்ந்த தடங்கையும்
கருவசமாங்குசஞ் சேர்கையுங் - தெறுபோர்
அதிர்கேடகஞ் சுழற்று மங்கைத் தலமும்
கதிர்வாள் விதிக்கும் கரமும் "

—கந்தர் கலிவெண்பா

எனவுங் கூறியிருத்தல் காண்க. (12, 13)

ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்

(ப - ரை.) ஐயும் கிலியும் - இவ்விரண்டு பீஜங்களும், அடைவுடன் - முறைமையுடனே, சௌவும் - சௌவென்னும் பீஜத்தையும், உய் ஒளி சௌவும் பிழைத்தற்கேதுவான பிரகாச வடிவமான சௌவும், உயிரையும் - பிராணுதாரமான ஐயும், கிலியும் - கிலி என்னும் பீஜமும், எ - று.

(வி - ரை.) இதிற் கூறியிருக்கின்ற பீஜாக்ஷரங்கள் உயிர்களுக்கு உண்டாகின்ற துன்பத்தை போக்கி இன்பத்தையளித்துக் காப்பவையாகும். பீஜம்—விதை. அக்கரம்—எழுத்து. (14)

கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக.

(ப - ரை). கிலியும் சௌவும் - கிலியும் சௌவும் ஆகிய இவ்விரண்டு பீஜங்களும், கிளர் - விளங்காநின்ற, ஒளி - சோதி வடிவமான, ஐயும் - ஐயென்னும் பீஜமும், நிலைபெற்று - நிலையாகி, என்முன் - அடியேன் எதிரில், நித்தமும் - தினந்தோறும், ஒளிரும் - பிரகாசிக்கின்ற, சண்முகன் - ஆறுமுகம் என்னும் பெயர் உருவமுய், றீயும்-, தனி - ஒப்பற்ற, ஒளி - பிரகாசமுடைய, ஒவ்வும் - ஒவ்வென்னும் பீஜமும், குண்டலி - சத்தியுருவமான மூலாதாரமும், ஆம் - ஆகிய, சிவகுகன் - சிவபெருமான் குமாரனுகிய குகப்பெருமான், தினம் - ஒவ்வொருநாளும், வருக - வந்தருளுக, எ — று..

(வி - ரை.) இதிற் கூறியுள்ள பீஜாக்ஷரங்களின் விவரத்தை ஞானசிரியர்பாற் கேட்டுணர்க. 'தனி ஒளி ஒவ்வும்' என்பது ஒப்பற்ற விளக்கும் ஓங்காரபீஜம். இப்பீஜாக்ஷரம் பிறிதொன்றின் சேர்க்கை யின்றித் தானே தனிநின்று ஒளிதரும் அக்கரம்: ஓம் என்ற அந்த அக்ஷரமே பரப்பிரம்மமாம்.

அடியார்களின் உள்ளக் குகையில் வசிப்பவனாகலானும், குறிஞ்சி நிலத்து மலைக்குகைகளில் வசிப்பவனாகலானும், பிரணவமாகிய குகையினு ளிருப்பவ னாகலானும், 'குகன்' எனப் பட்டான். (15, 16)

ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்

(ப-ரை.) ஆறுமுகமும் - ஆறுவகைப்பட்ட திருமுகங்களும், அணி - அழகு பொருந்திய, முடி - கிரீடங்கள், ஆறும் - ஆறும், நீறு இடும் நெற்றியும் - விபூதியணியப் பெற்ற திருநெற்றிகளும், நீண்ட புருவமும் - நீளமான பன்னிரண்டு புருவங்களும், எ-று.

(வி-ரை.) 'நீறில்லா நெற்றிபாழ்' என ஔவைப் பிராட்டியாராலும், 'திக்பஸ்ம ரகிதம்பாலம்' என்றபடியும் பஸ்பமில்லாத நெற்றியைச் சுடு என வருமவைகளைக் கொண்டு உலகம் வழிபடத் தாமே நீரணி நெற்றியோடு பொலிவதாயினன் என்பார், 'நீறிடு நெற்றி' என்றார். புருவமும் நீண்டிருப்பது உத்தமபுருஷ இலக்கணம் ஆகலின் 'நீண்ட புருவம்' என்றார். இது, முருகப்பிரானின் உண்மை உருவத்தை உள்ளபடியே காட்சியாக உரைக்க எழுந்ததாம். (17)

பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்

(ப-ரை.) பன்னிரு கண்ணும் - பன்னிரண்டு திருக் கண்களும், பவளச்செவ்வாயும் - பவளம் போன்ற நிறத்தினையுடைய சிவந்த ஆறு திருவாய்களும், நல்நெறி - நல்ல ஒழுங்கையுடைய நெற்றியில் - ஆறுநெற்றிகளிலே, நவமணிச் சுட்டியும் - ஒன்பது வகை இரத்தினங்களாற் செய்யப்பட்ட சுட்டி யென்னும் திருவாபரணமும், எ-று.

(வி-ரை.) மணி - வடசொல், தற்சமம். சுட்டி - குழந்தைகளின் நெற்றிமுகப்பிலே மயிர்சீவிக் கட்டுவதோர் ஆபரணம்.

தன்னைத்தரித்தவன் அழகை வெளிக்குச் சுட்டிவிளக்கும் திருவாபரணமாகும். (18)

ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்

(ப - ரை.) ஈர் ஆறு செவியில் - பன்னிரண்டு திருச் செவிகளிலும், இலங்கு - விளங்காநின்ற, குண்டலமும் - குண்டலங்களும், ஆறிருதிண்புயத்து - பன்னிரண் டென்னும் வலிமை கொண்ட புஜத்திலும், அழகிய மார்பில் - அழகு பொருந்திய மார்பினிடத்தும், எ - று.

(வி - ரை.) ஈர் + ஆறு = இரண்டாகிய ஆறு, பன்னிரண்டு பண்புத்தொகை. 'திண்புயத்தழகியமார்பு'' என்றதனுல் முருகப் பெருமான் திருமார்பின் பேரழகு கூறியதாயிற்று. (19)

பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

(ப - ரை.) பல்பூஷணமும் - பலவகையான ஆபரணங்களும், பதக்கமும் மதாணியும், நல்மணி பூண்ட - ஆராய்ந்தெடுத்த அருமணிகள் வைத்துப் பதித்த, நவரத்ன மாலையும் - நவரத்தினங்களால் செய்யப்பட்ட மாலையும், தரித்து - அழகாய் அணிந்து, எ - று.

(வி - ரை.) பதக்கம் - மார்பிலணியும் ஆபரணம். இதனை மதாணி என்பர். நல்மணி என்பதற்கு நல்ல அழகைக் கொண்ட என்ருவது, ஆராய்ந்தெடுத்த அருமணிகள் வைத்துப் பதித்த என்ருவது பொருள் கூறலாம். நல்மணி - நீர்மையுள்ள இரத்தினங்கள், நீரோட்டங் குன்ருதவைகள். 'பல்பூஷணமும்' இதில் உம்மை சுட்டுவன. இடுவன, அணிவன முதலியவற்றையும் சுட்டும்.

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்

(ப-ரை.) முப்புரிநூலும் மூன்றுபுரிகளைக் கொண்ட பூணூலும், முத்து அணிமார்பும் - முத்துச்சரத்தை அணிந்த திரு மார்பும், செப்பு - புகழ்ந்து கூறத்தக்க, அழகு உடைய - பேரழகை யுடைத்தாகிய, திருவயிறு உந்தியும் - மேன்மையாகிய திருவயி றும் கொப்பூழும், எ - று.

(வி - ரை.) முப்புரி - இதனை, இருபத்தேழு இழைக ளாகிய மூன்றுபுரி நூலென்பர் உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க் கினியர். இதனை,

"ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண் ஞாண்"

—திருமுருகாற்றுப்படை

எனக் கூறியது காண்க. முப்புரிநூலும் முத்தணிப் பதக்கமும் துலங்கு மார்பும், சித்திரித்த அழகிய வயிறும், உந்தியும் உடைய வராகி விளங்குபவருமாம் என்றபடி. (21)

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்

(ப - ரை.) துவண்ட - அசையு மியல்புடைய, மருங்கில் - இடுப்பிலே, சுடர் - பிரகாசிக்கின்ற, ஒளி - ஜோதியையுடைய, பட்டும் - பட்டாடையும், நவரத்னம் பதித்த - நவரத்தினங்களைப் பொருத்தியுள்ளதான, நல்சீராகவும் - நல்ல கவசமும், எ - று.

(வி . ரை) துவண்ட மருங்கு என்றதனால், இடையின் நுண்மை பெறப்பட்டது. துவளுதல் - அசைதல். மருங்கு - பக்கம்; இடுப்பு. மருங்கில் என்பதில் இல் என்பது ஏழாம் வேற்றுமை இடப்பொருளில் வந்தது. சுடரொளி - ஒரு பொருட் பன்மொழி. நவரத்னம் - கோமேதகம், நீலம், பவளம், புருடராகம், மரகதம், மாணிக்கம் முதலியன. நற்சீரா என்பது பகைவர்களினாலே அழித்தொழிக்க முடியாத வலிய கவசம். (22)

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழக்க

(ப - ரை.) இரு தொடை அழகும் - இரண்டாகிய தொடைகளின் சௌந்தரியமும், இணைமுழந்தாளும் - இரண்டாகிய முழந்தாள்களின் அழகும், திருவடியதனில் - அழகிய பாதத்தில், சிலம்பொலி - சிலம்பென்னும் ஆபரண சப்தம், முழங்க - சப்திக்கவும், எ - று.

(வி - ரை.) பலவகை ஆபரணங்களையும் முந்நூல் முதலியவைகளையும் 'தரித்து' என முடிவு செய்து எச்சப்பொருளை முடித்துக் காண்க. தொடை அழகும், முழந்தாள் அழகும், அழகிய பாதத்தில் சிலம்பென்னும் ஆபரண சப்தம் சப்திக்கவும் என்றவாறும். (23)

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேண் முந்து

(ப - ரை.) செககண செககண செககண செகண - பூமியிற் சேர்ந்திருப்பவனே! பூமியிற் சேர்ந்திருப்பவனே! பூமியிற் சேர்ந்திருப்பவனே! பூமியிற் சேர்ந்திருப்பவனே!, மொகமொக மொகமொக மொகமொக மொகென—, நகநக நகநக நகநக நகென—, டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண—, ரரரர ரரரர ரரரர ரரர—, ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி—, டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு—, டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு—, விந்து விந்து - எல்லாவற்றிற்கும் மூலமாகிய தாதுவே! தாதுவே!, மயிலோன் - மயில் வாகனத்தை யுடையவனாகிய, விந்து - தாதுவே!, முருகவேள் - முருக

ளுமிய வேளே!, முந்து முந்து முந்து – (அடியேனைக் காக்கும் பொருட்டு) அடியேன் முன்னே முற்படுவாய்! முற்படுவாய்! முற்படுவாய்! எ - று.

(வி - ரை). செககண என்பதற்குப் பூமியின் சேர்க்கையை யுடையவனே என்பது பொருள். செககண என்பது செகண என முதல்வரி ஈற்றில் ககரம் தொக்கு நின்றது செய்யுள் விகாரம். செகம் - பூமி, அதாவது மண்ணுலகம். கணம் - கூட்டம் அல்லது சேர்க்கை. முருகக் கடவுள் சூரசம்மாரம் செய்து முடிக்கவும், தேவர்களுக்கு அனுக்கிரகிக்கவும், இம் மண்ணுலகிற்கு எழுந்தருளி வந்து பற்பல திவ்ய க்ஷேத்திரங்களில் திருக்கோயில் கொண்டனராதலினாலேதான் 'செககண' என்றார். கந்தப் பெருமான் பூமிக்கு வந்தருளியதை,

" ஆன காலையி லதுதெரிந் தறுமுகத் தொருவன்
வான ளாவிய புணரிகள் சூழ்ந்திட வயங்கும்
பானு நாயகன் வந்தெனப் பரந்துபா ரிடத்துச்
சேனை சூழ்தரக் கைலைநீத் தவனிமேற் சென்றான் "

—கந்தபுராணம்

என்பதனாலுணர்க. செககண என்பவை ஒலிக்குறிப்பினடியாக எழுந்த சொற்களென இலக்கண நூலாரும், மந்திர வைபவங்களை அடக்கியுள்ளதான அக்ஷரக்கணக்கு அமைந்தவைகளென மந்திர நூலாரும் கூறுவர். 'மொக மொக ...நக நக ' முதலிய அடுக்குள்ள ஒலி, பிரகாசம் முதலியவற்றின் குறிப்புக்களென விளங்குகின்றன. மற்றவைகளுட் சில மந்திராக்ஷரங்களும் ஒலிக்குறிப்புக்களுமாம். 'டிகுகுண...டிகுண ' இவைகளை மாற்றியும் பிரித்தும் கூறும் மந்திராக்ஷரங்களாகக் கொள்ளுவர். இவைகளின் விவரம் ஞானாசாரியரிடம் உணர்க. இவ்வடுக்குக்களிலுள்ள ரகரம் 'சரவணபவ' என்னும் சடாக்ஷரங்களிலொன்று. ரரரர...ரிரிரிரி—இவை பீஜாக்ஷரங்களின் உற்பத்தியைக் காட்டும் காரண அக்கரங்கள். டுடுடுடு...டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு—இவை சப்த பீஜ ரூபங்களமைந்த அக்கர வரிசைகள்.

முருகக்கடவுள் பால வயதில் பிரமனைச் சிறையில் வைத்துத் தாமே சிருஷ்டித் தொழிலைச் செய்து வந்தாராதலின் அவர் ஈண்டு எல்லாவற்றிற்கும் விந்து (தாது) எனப்பட்டார். இதனை,

" மன்னு குடிலைப் பொருளை யறியாமன் மயங்குதலுங்
கொன்னுடைய வரசிங்கக் குட்டிதலைக் குட்டியுதைத்
தின்னலுறக் கந்தவெற்பிற் சிறையிடுவித் ததிலேதி
யன்னநடை யுமைபால னுவிகள் பன்னாட் படைத்தான் "
—கந்தபுராணச் சுருக்கம்

என்பதானறிக.

மேலே கூறியுள்ளபடி இவ்வித ஒலிகளோடும் பிரகாசங்களோடும் இவ்வித மந்திராக்ஷரங்களின் வடிவமானவனே வந்தருள்க என்பதாம். (24, 25, 26, 27, 28)

என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க

(ப - ரை.) என்றனை - அடியேனாகிய என்னை, ஆளும் - காத்தருளிய, ஏரகச்செல்வ - திருவேரகம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் திருக்கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் பாக்கியசாலியே!, மைந்தன் வேண்டும் - உன் குமாரனாகிய அடியேன் விரும்பிக் கேட்கின்ற, வரம் - வரங்களை, மகிழ்ந்து - சந்தோஷித்து, உதவும் - கொடுக்கின்ற, லாலா லாலா லாலா - லாலா லாலா லாலா என்று பக்தகோடிகள் அனவரதம் துதிக்கும் பாக்கியத்தைப் பெற்றுள்ளதாகிய, ஆவேசமும் - ஒருவகையான குதூகலாவேசமும், லீலா லீலா லீலா - பலவிதமான திருவிளையாடல்களும் பொருந்திய, விநோதன் - விசித்திரத்தை யுடையவனே, என்று - என்று சொல்லித் துதித்து, உன் திருவடியை - தேவரீருடைய

அழகிய பாதங்களை, உறுதியென்று - (இவை துணைபுரிவது) நிச்சயமென்று, என்றும் - நினைக்கும், என்தலை - அடியேனுடைய தலையில், உன் இணையடி - தேவரீருடைய உபயதிருத்தாள்களையும், வைத்து - பொருந்தியருளி, காக்க - காத்தருள் புரிவாயாக, எ - று.

(வி - ரை.) திருவேரகம் - சுப்பிரமணியருடைய ஆறு படைவீடுகளில் ஒன்று. இது கும்பகோணத்திற்கு இரண்டு நாழிகை வழி தூரத்தி லிருக்கின்றது. சாமிமலை என்னும் பெயர் பெற்று வழங்கிவருகின்றது. வேண்டும் என்பது மரியாதையைக் குறிக்கும். வியங்கோளெனத் தொல்காப்பியத்திற் கூறியபடி ஈங்குக் கடமையையும் மரியாதையையும் சொல்லியது ஆம். வரம் - மேலான பொருள் ; வேண்டும் வரம் - இம்மைச் செல்வமும் மறுமைப் பேறுமாம்.

“ எமவெ விற்பல வெற்பினி னற்பதி
ஞால கத்தினி லுற்றுறு பக்தர்கள்
எது நினைத்தது மெத்தவளித் தருளிளையோனே ”

—திருப்புகழ்

எனவும்,

“ வாட்டமி லருளுங் கோட்டமில் குணனும்
அசையா நிலையும் நசையா மனனும்
வெருளாப் பண்பும் விடாப்பே ரன்புஞ்
செவ்வியின் மரீஇ யெவ்வெவர் எவ்வகை
வேட்டனர் அவ்வகை விருப்பொடு குறிப்பின்
வரையா நீதல் வள்ளல் தன்மை ”

—புறநானூறு

எனவும் கூறியபடி, தன்னடியார் வேண்டுவன வேண்டியாங்க னுமுவந்து உள்ளன்போடு கொடுக்கும் வள்ளற்றன்மை மிக்கவனாகலின் ‘மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்’ என்றார்.

லாலா என்பது தேவாவேசத்தை யுண்டாக்குவதற்காகத் துதியாக இடப்படும் ஒருவகை ஆவேச ஒலி. தாலாட்டுதல் போன்றது. தென்னாட்டில் சில இடங்களில் தேவாலயங்களில் பூஜை வழிபாடுகள் நடைபெறும்போது, தெய்வ ஆவேசத்தைச் சிலர் மீது உண்டாக்குவதற்காகவே பலர் ஒன்றுகூடி சப்தமிடுவது. இவ்வழக்கம் இப்போதும் உள்ளது, இவை மந்திரவக்ஷர ஸக்தியைக் காட்டவந்ததென்று கொள்ளுதலுமா மென்றுங் கூறுவர். லாலா + ஆவேசம் = லாலாவேசம் வடமொழிப்புணர்ச்சி ; தீர்க்க சந்தி. பாண்டிய நாட்டுச்சொல் என்பர்.

தேவரீர் திருவடிகளே அடியேனுடைய கஷ்டங்களை யெல்லாம் போக்கி இஷ்ட காமியாதிகளை யளிக்கும் என நினைக்கும் அடியேன் தலைமிசை தேவரீர் இரண்டு திருவடிகளையும் பொருத்தியருளிக் காத்தருள் புரிவீராக எனப் பிரார்த்தித்தா ரென்க.

'உன் திருவடி என் தலைவைத்துக் காக்க' என்றது திருவடி தீக்ஷை கோரியபடியாம். தலை என்பதற்கு அடியென வந்தது முரண்டொடை, என்னை? தொல்காப்பியம் "மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே" என்றாராகலின். (29-31)

என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

(ப - ரை.) என் உயிர்க்கு - அடியேனுடைய பிராணனுக்கும், உயிராம் - உயிராய் இருக்கின்ற, இறைவன் - முருகக் கடவுளே!, காக்க - அடியேனைக் காத்தருள் புரிக ; பன்னிரு விழியால் - பன்னிரண்டு திருநேத்திரங்களாலும், பாலனை - தேவரீர் புதல்வனாகிய அடியேனை, காக்க - காத்தருள்வாயாக, எ - று.

(வி - ரை.) முருகக் கடவுள் அடியேனுடைய இனிமையான உயிருக்கும் உயிராக இருக்கின்றாராகலின், 'என்னுயிர்க்குயிராம் இறைவன்' என்றார். இறைமைக் குணத்தை யுடையவனாதலின் 'இறைவன்' எனப்பட்டான். இறைமைக் குணமாவது தலைமைக் குணம். இதனை,

" தாங்கரிய வெறுப்பினொடு விருப்பு மெல்லாஞ்
சார்வரிய தனிமுதல்வ னாதலாலும் "
—சிவப்பிரகாசம்

என்பதனாலறிக. விழியாற் காத்தல் - கடாக்ஷ வீக்ஷண்யஞ் செய்தல்; அருட்கண் பார்த்தல். இறைவன் என்பதில் விளியுருபு எஞ்சி நின்றது. விழி-பால்பகா அஃறிணைப் பெயர். ஈண்டு பன்மைப்பாலை உணர்த்திற்று. இறைவன் என்பதில்-வ் = பெயரிடைநிலை, தலைவன், முதல்வன் முதலியவற்றைப் போல். அறியாமைக்குணம் நீங்காதவனெனத் தன்னைக் குறித்தற்காகவே 'பாலன்' என்று கூறினர் எனினுமாம். (32)

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க

(ப - ரை.) அடியேன்-அடியவனாகிய என்னுடைய, வதனம்-முகத்தை; அழகுவேல் - (தேவரீர் திருக்கரத்திலேந்திய) அழகமைந்த வேலாயுதமானது, காக்க - காக்கக் கடவது; பொடிபுனை - விபூதி தரிக்கின்ற, நெற்றியை - நுதலை, புனிதவேல் - பரிசுத்தமுள்ள அவ் வேலாயுதமே, காக்க - காக்கக்கடவது, எ - று.

(வி - ரை.) முருகக் கடவுளுக்கு ஆயுதங்கள் பல இருப்பினும், அவ் வாயுதங்களிலெல்லாம் வேலாயுதமே முதன்மை பெற்றுள்ளதாதலாலும், சூரபதுமன் முதலியவர்களை அழித்துத் தேவர்களுக்கு நலஞ் செய்ததற்கு உறு துணையாயிருந்ததாதலாலும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இக்காரணம் பற்றியே வேலன் என்ற காரணப் பெயரும் வாய்ந்துள்ளது. இவ் வேலாயுதமானது சிவபெருமானால் முருகக்கடவுளுக்கு அன்புடன் அளிக்கப்பட்டது. (33)

கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க

(ப - ரை.) கதிர் - பிரகாசம் பொருந்திய, வேல் - வேலாயுதமானது. கண்ணினை - அடியேன் கண்களை, காக்க - காக்கக்

கடவது, விதி-கல்வி கேள்வி அறிவையுடைய அல்லது பிரமனால் சிருஷ்டிக்கப்பட்ட, செவி இரண்டும்-இரண்டு செவிகளையும், வேலவர் வேலாயுதத்தைத் தரித்தவரே!, காக்க-காத்தருளுக, எ-று.

(வி ரை.) வேல் கண்களைக் காக்கவும், செவிகளை முருகன் காக்கவும் என்பதாம். "ஸர்வேந்த்ரியாணும் நயனம் பிரதானம்" எனச் சிறப்பித்துள்ளதாகிய நேத்திரங்களைப் பகைவர்கள் நிணந் தோய்ந்து நிறம் மாறிப் பொலியும் வேலாயுதம் காக்க வேண்டுமென்பார் 'கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க' என்றார். விதி-அறிவு என்றும் நியமிப்பு என்றும் பொருள்படும். வேலவர் - என்பது விளி; ஏ முதலிய உருபுகளை ஏலாமல் இயல்பாக நின்றது என்னெனின், நன்னூல் "இம்முப் பெயர்க்கண் ணியல்பு மேயும் இகர நீட்சியு முருபா மன்னே" என்னும் விதிபற்றி யென்க. (34)

நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

(ப-ரை.) நாசிகள் இரண்டும் - இரண்டு மூக்குத் துவாரங்களையும், நல்வேல் - நன்மைபுரியும் வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது; பேசிய - தேவரீருடைய துதிகளையே சதா சர்வ காலமும் பன்னிப் பன்னிப் பேசிய, வாய்தனை - வாயை, பெருவேல் - பெருமை பொருந்திய வேலாயுதமானது, காக்க - காக்கக் கடவது, எ-று.

(வி-ரை.) முருகக் கடவுளே, நினது கைவேல் மூக்கையும் வாயையும் காக்க வேண்டுமென்பதாம்

தேவாரம் 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்றப்படி அவன் புகழ் பேசாத நாட்களெல்லாம் பிறந்தும் பிறவா நாட்களாகையால், அவன் புகழ்பேசியே ஆகவேண்டும்; அடியேன் பேசாமல் வாளா இருந்தாலும் அடியேனும் என்னையும் அறியாமல் உன் புகழையே பேசிக் கொண்டிருத்தல் வழக்கமாகிவிட்டது.

"நற்றவா வுன்னை நான் மறக்கினும் சொல்லுநா
நமச்சி-வாயவே." —தேவாரம்

என்றபடி அசிதை இப்போதும் மாருமல் வேலாயுதமே காக்க வெண்டுமென்று விரும்பியதாகும். நல்வேல் - என்பதற்கு நன்மையைச் செய்யும் வேலென்றும் பெருவேல் என்பதற்கு பெருமையைக் கொடுக்கும் வேலென்றும் பொருள்கொள்க. சிவன் கை வேலினும் எமன் கை வேலினும் முருகப்பெருமான் திருக்கை வேலே சிறந்தது என்று குறிக்கவே, 'பெருவேல்' என்ருர். (35)

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

(ப - ரை.) முப்பத்திருபல் - அடியேனுடைய முப்பத்திரண்டு பற்களையும், முனை - போர் செய்தலையுடைய, வேல் - வேலாயுதமானது, காக்க - காக்கக் கடவது, செப்பிய - தேவரீர் துதிகளைக்கூறிய, நாவை - நாக்கை, செவ்வேல் - தேவரீரது சிவந்த வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது, எ - று.

(வி - ரை.) முனை - தல்லீறு கெட்ட முதனிலைத் தொழிற்பெயர். முனை என்பதற்குக் கூர்மை என்றும் பொருள் இருப்பதால், முனைவேல் என்பதற்குக் கூர்மை என்றும் பொருள்படும். செம்மை + வேல் = செவ்வேல்.

" ஈறு போதல் இடையுகர மிய்யாதல்
ஆதி நீட லடியகர மையாதல்
தன்னொற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும் பண்பிற் கியல்பே'

—நன்னூல்

என்ற விதிப்படி மை விகுதிகெட்டு, மகரவொற்று வகரவொற்ருகத் திரிந்து செவ்வேல் என வந்தது. மூன்று + பத்து = முப்பது. பகைவருடைய குருதி தோய்ந்தமையால் தன்னிறம் மாறுபட்டுச் செம்மை நிறத்தைக் காட்டும் வேலாகலின், செவ்வேல் எனப்பட்டது. (36)

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க

(ப - ரை.) கன்னம் இரண்டும் - அடியேனுடைய இரண்டு கதுப்புக்களையும், கதிர்வேல் - கிரணங்களையுடைய வேற்படையானது, காக்க - காக்கக்கடவது ; என் - அடியேனுடைய, இளங் கழுத்து - இளமையாகிய கண்டத்தை, இனிய - சந்தோஷமிகுந்த, வேல் - வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது, எ - று.

(வி - ரை.) கதிர்வேல் - பிரகாசம் செய்கிற வேல், கிரணத்தை வீசும் வேல், பிரகாசம் பொருந்திய வேல் எனப் பொருள் உரைக்க.

இளமை + கழுத்து இளங்கழுத்து }
இனிமை + வேல் இனியவேல் } பண்புத்தொகை.

வேல் காக்க - எழுவாய்த் தொடர்.

அடியவர்களுக்குத் துன்பம் போக்கி இன்பம் அளிக்கும் வேலாகலின் 'இனியவேல்' என்றார். முருகக் கடவுளே! தேவரீரது திருக்கைவேல் அடியேனது கன்னங்களையும் கண்டத்தையும் காக்கக்கடவது என்பதாம். (37)

மார்பை யிரத்ந வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க

(ப - ரை.) மார்பை - நெஞ்சை, இரத்நம் - இரத்தினங்கள் இழைக்கப்பட்ட, வடி - கூர்மைதங்கிய, வேல் - வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது ; சேர் - பொருந்திய, இளமுலை - இளமையாகிய தனங்களிருக்கின்ற, மார் - இரண்டு பக்கத்து இரண்டு மார்பு ஸ்தானங்களையும், திருவேல் - அழகிய வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது, எ - று.

(வி - ரை.) முதலில் கூறிய மார்பு நடுவேயுள்ள - இருதய ஸ்தானம், இரண்டாவது சொன்ன மார், இரண்டு பக்கங்களிலும் ஸ்தனங்கள் இருக்கின்ற ஸ்தானங்களைக் குறிக்கும். இரத்தின வேல் என்பதற்கு இரத்தினத்தினைப்போலும் பேரொளிதரும் வேல் எனினுமாம். இரத்தினம் எனப் பொதுபடக் கூறினமை

வின், இரத்தின வகைகளில் சிறந்த மாணிக்கம் என்றே கொள்ளுதல் சாலும். வடிவேல் - வடித்துக் கூர்மையுடைய வேல்; வினைத்தொகை. திருவேல் - எனவே செல்வம் தரும் வேல், மேன்மை தங்கிய வேல், வீரலக்ஷ்மி கடாக்ஷம் பொருந்திய வேல் என்றும் பொருள் உரைக்கலாம். திரு என்பது ஸ்ரீ என்பதன் திரிபு என்பர். வேற்படை உமாதேவியாரால் முருகக் கடவுளுக்குத் தண்ணளி செய்யப்பட்டதாகலின் திருவேல் எனப் பட்டதுமாம். சக்திவேல் என்பதும் இக்கருத்து நோக்கியே. (38)

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க

(ப - ரை.) வடிவேல் - கூர்மை பொருந்திய வேலாயுதமானது, இருதோள் - இரண்டு புஜங்களையும், வளம்பெற - வளமையுண்டாகும்படி, காக்க - காக்கக்கடவது; பிடரிக ளிரண்டும் - இரண்டு பிடரிகளையும், பெருவேல் - பெருமையுடைய வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது, எ - று.

(வி - ரை.) வடிவேல் - வினைத்தொகை. இருதோள் - எண்ணுப் பெயராகலின் வலி மிகவில்லை. இருதோள் - பெரிய தோள் எனினும் ஆம். வண்மை என்னும் பண்புச்சொல வளம் எனத் திரிந்தது. பெருமை என்னும் பண்புச்சொல் "ஈறு போதல்" என்னும் சூத்திர விதியால் மையீறு கெட்டுப் பெரு என நின்றது. முருகா! தேவரீரது வேலாயுதம் அடியேனது தோளையும் பிடரியையும் காக்க வேண்டும் என்பதாம். (39)

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

(ப - ரை.) முதுகை - முதுகின் பாகத்தை, அழகுடன் - அழகாக, அருள்வேல் - கிருபை தங்கிய வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது, பழுபதினாறும் - பதினாறு விலா எலும்புகளையும், பருவேல் - பருத்த வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது, எ - று.

(வி - ரை.) அருள்வேல் - அருளைப்புரியும் வேலாயுதமு மாம். பழுமரம் என்னும் ஆலமரத்தை அதன் பக்கத்தில் அமைந் துள்ள வேர்கள் காப்பதுபோலவே, உடலாகிய மரத்தைக் காப்ப தற்கு அமைந்துள்ள பக்கவிலா வெலும்புகள் பதினாறையும் காக்க வேண்டுமென்பார் 'பழுபதினாறும் காக்க' என்றார். பிறரால் தாங்க முடியாதபடி பருத்திருக்கும் வேற்படையாகலின், 'பருவேல்' என்றார். (40)

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க

(ப - ரை.) வெற்றிவேல் - ஜயத்தையுடைய வேலாயுதமா னது, வயிற்றை - அடியேன் வயிற்றை, விளங்க - நோயில்லாமல் சுகத்துடன் பிரகாசிக்க, காக்க - காக்கக் கடவது; சிற்றிடை- சிறுத்த இடையை, அழகுற - மேன்மேலும் அழகுண்டாகும் படி, செவ்வேல் - சிறந்த வேலாயுதமானது, காக்க - காக்கக் கட வது, எ - று.

(வி - ரை.) வெற்றி - தொழிற்பெயர். சிறுமை + இடை - சிற்றிடை; பண்புத் தொகை, செம்மை + வேல் செவ்வேல், பண்புத்தொகை. முருகா! தேவரீரது திருக்கைவேல் அடியே னுடைய வயிற்றையும் இடுப்பையும் காத்தருள்க என்பதாம். (41)

நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க

(ப - ரை.) நாணும் - (கருவுற்பத்திக் காரணமாகிய) நாம்பு போலும், கயிற்றை - கயிற்றினை, நல்வேல் - நன்மையை யுடைய வேலாயுதமானது, காக்க - காக்கக் கடவது; ஆண்குறி யிரண்டும் - இரண்டு பீஜங்களையும். அயில்வேல் காக்க - கூர்மை தங்கிய வேலாயுதமானது காக்கக் கடவது, எ - று.

(வி - ரை.) நல்வேல் என்பதற்கு நம்பினவரைக் காக்கும் வேல் என்றும் பொருள் உரைக்கலாம். நம்பினவரைக் காக்கும்

வேல் எனவே, அது நம்பாதாரைக் காக்காமல் கைவிட்டு விடும் வேல் என்பதும், துஷ்டநிக்கிரகமும் சிஷ்டபரிபாலனமும் செய்யும் வேல் என்பதும் பெறப்பட்டன. நாண் - கயிறு, இது உவமையாகு பெயராய் நரம்பை யுணர்த்திற்று. கருவுற்பத்திக்குக் காரணமான அவயவத்தை நாண் கயிறென்றும் பீஜத்தை ஆண் குறி யென்றும் கூறியது இடக்கரடக்கல். பீஜங்கள் ஆண் வகுப்பைக் குறிக்கும் அடையாளமாகையால் ஆண்குறி யெனப் பட்டன. (42)

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க

(ப - ரை.) பிட்டம் இரண்டும் - இரண்டாகிய பிரஷ்ட பாகங்களையும், பெருவேல் - தேவரீரது பெருமை பொருந்திய வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது; வட்டக் குதத்தை - வட்டமாகிய ஆசனவாயிலே, வல்வேல் - வலிமை தங்கிய வேலாயுதமானது, காக்க - காக்கக் கடவது, எ - று.

(வி - ரை.) பிட்டம் - சகனபாகங்கள்; சகனம் - அசனங்கள்; அவை முதுகின் பக்கத்திடையின் கீழ்ப்பாகங்கள். வேல் - வெல்வது வேல், காரணப் பெயர். வட்டக்குதம் - வட்டமாகிய ஆசனத்துவாரம், வடிவுப்பண்பு பரஷ்டம் என்னும் வடமொழி பிட்டம் என ஆயிற்று. வட்டம் - உருண்டை. உடற் காப்பு மந்திரமாகலின் எல்லா அவயவங்களும் விகற்ப மில்லாமல் எடுத்துக் கூறப் படுகின்றன. (43)

பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கான் முழந்தாள் கதிர்வேல் காக்க

(ப - ரை.) பணைத் தொடை இரண்டும் - திரண்ட இரண்டு தொடைகளையும், பருவேல் - பெரிய வேலாயுதமானது, காக்க - காக்கக் கடவது; கணைக்கால் - இரண்டு கணைக்கால்களையும், முழந்தாள் - இரண்டு முழந்தாள்களையும், கதிர் - பிரகாசம் பொருந்திய, வேல் - வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது, எ - று.

(வி-ரை.) பிணை - வலிமை; பருமையுடைய அதாவது திரண்ட. முழந்தாள் - ஒருமுழம் என்னும் அளவு கொண்டு அமைந்துள்ள முழந்தாள். தத்தம் கையால் ஒருமுழ வீச்சுள்ளதே உத்தம புருஷ லக்ஷணமாதலின் இவ்வாறு கூறப்பட்டது. முழந்தாள் - முழமாகிய தாள் - பண்புப் பெயர். தாள் - சினைப்பெயர். கணைக்கால், முழந்தாள் - உம்மைத் தொகை. வேலாயுதம் அடியேன் தொடைகளையும் கணைக்கால்களையும் காத்தருளல்வேண்டும் என்பதாம். (44)

ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க

(ப-ரை.) ஐவிரல் - ஐந்து விரல்களையுடைய, அடிஇணை - இரண்டு அடிகளையும், அருள்வேல் - கிருபை தங்கிய வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது; கைகள் இரண்டும் - இரண்டு கரங்களையும், கருணைவேல் - அருள் நிறைந்த வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது, எ-று.

(வி-ரை.) ஐந்து + விரல் = ஐவிரல் என்றாயிற்று, இதனை,

"ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும்"

—நன்னூல்

என்ற சூத்திர விதிப்படி ஐந்து என்னும் ஈற்றுயிர் மெய்யும் நடு நின்ற நகர மெய்யும் கெட்டு நின்றது. ஐவிரல் - ஐந்தாகிய விரல், பண்புத்தொகை. ஐவிரல் - அழகிய விரல், ஐ - இடைச்சொல். அடி இணை என்பது இணையடி எனவும் இலக்கணப் போலியாக வரும். அருள் - இயற்கை யமைப்பு. கருணை - கண்டபோதுண்டாகும் காட்சி. வேல் விரலையும் கரத்தையும் காத்தருள் புரிக என்பதாம். (45)

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க

(பத-ரை.) முன்கை இரண்டும் - இரண்டு கெண்டைக் கைகளையும், முரண் - வலிமை கொண்டுள்ளதாகிய, வேல் - வேற் படையானது, காக்க - காக்கக்கடவது; பின் கை இரண்டும் - இரண்டு பின்னங்கைகளிலும், பின்னவள் - இளையவளாகிய இலக்குமி, இருக்க - வசித்திருப்பாளாக, எ - று.

(வி-ரை.) கெண்டைக்கைகள் - முழங்கைக்குக் கீழ்க் கைகள். பின்கைகள் - முழங்கைக்கு மேற்கைகள்; அவை புயங்களின் அடிப்பாகங்கள்.

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு"

— திருக்குறள்

என்பதுபோல, ஒருவனுக்கு எற்படும் நன்மை தீமைகளுக்கெல்லாம் உதவி புரிந்து காப்பது முன்கையும் பின்கையுமாகையினாலே, அவைகளைக் காக்கவேண்டு மென்பதாம். பின் - என்றது காலத்தைக் காட்டவந்த இடைச்சொல். பின்னவள் - மூதேவிக்குப்பின் தோன்றியவள்; முன் பிறந்தவள் - மூதேவி; பின் பிறந்தவள் - ஸ்ரீதேவி. திருப்பாற்கடலில் பிறந்த மூதேவி, ஸ்ரீதேவி ஆகிய இருவருள்ளும் மூதேவியை முன்னவளென்றும், ஸ்ரீதேவியைப் பின்னவளென்றுங் கூறுதல் மரபு. (46)

நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க

(ப-ரை.) நாவில் - நாக்கினிடத்திலே, சரஸ்வதி - கலைமகள், நல்துணையாக - நல்ல துணையாகப் பொருந்துவாளாக; நாபிக்கமலம் - உந்தித்தாமரையை, நல்வேல் - நல்ல வேலாயுதம், காக்க - காத்தருள்வதாக, எ - று.

(வி - ரை) பல இனிமையான பாடல்களைக் கூறித் துதி செய்தற்குக் கலைமகள் அனுக்கிரகம் அவசியம் வேண்டுமாதலின், அதற்காக 'சரஸ்வதி நற்றுணையாக' என்றார். கற்றோர் நாவிலும் பிரமன் நாவிலும் சரஸ்வதி வசிப்பவளாகையால் 'நாவிற் சரஸ்

வதி' என்றார். 'நாவில்' என்பதில் இல் இடப்பொருளுணர்த்தியது. துணை - சகாயம். நாபிக் கமலம் - பண்புத்தொகை, உந்தி கமலம் போன்றிருத்தலின் அதற்குத் தாமரையை உவமை கூறுதல் மரபு. (47)

முப்பா லுடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க

(ப - ரை.) மூப்பால் நாடியை - மூன்று பகுப்பான நாடிகளை, முனைவேல் - கூர்மை தங்கிய வேற்படையானது. காக்க-காக்கக் கடவது; எனை - அடியேனை, எப்பொழுதம் - எக்காலத்தும், எதிர் - பகைவரோடு பொருகின்ற, வேல் - வேற்படையானது, காக்க - காக்கக்கடவது, எ-று.

(வி - ரை.) மூன்றுவகை நாடிகளாவன; இடைகலை, பிங்கலை, சுழிமுனை என்பவைகளாம். இடைகலை - இட மூக்கால் வரும் சுவாசம். பிங்கலை - வல மூக்கால்வரும் சுவாசம். சுழிமுனை-இரண்டு நாசிகளிலும் சமமாயோடும் சுவாசம். இது நடு நாடியெனவும் படும். முப்பால் நாடி என்பதற்கு வாத பித்த சிலேட்டும தாதுக்க ளெனினுமாம். வாதம் - வாயுவின் கோபம், பித்தம் - அக்கினியின் கோபம், சிலேட்டுமம் - அப்புவின் கோபம், சிலேஷ்மம் என்னும் வடமொழி சிலேட்டுமம் எனவும் வரும். இந்த மூன்று வகை நாடியின் கோபத்தால் சகல வியாதியும் உண்டாகும். (48)

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க

(ப - ரை.) அடியேன் - அடியேனுடைய, வசனம் - வசனமானது, அசைவுள நேரம் - (நாவில்) அசைந்து வெளிப்படும் போது, கனகம் - பொன் மயமாகிய, வேல் - வேலாயுதமானது, கடுக வந்து - விரைவாக வந்து, காக்க - காக்கக்கடவது, எ-று.

(வி - ரை.) அடியேன் - அடிமை என்னும் பண்பினடியாகப் பிறந்த பெயர். முருகனினும் முருகப்பிரானின் வேலின் எளி

மைத் தன்மை ஈண்டுக் கூறியபடி. ஈண்டு எளிமை என்றது லௌ ஸப்ய குணம் வசனம் - வடமொழி- தளர்ந்த நேரத்தில் அடியேனை வந்து காத்தருள்வாயாக ; என்று அடியேனுடைய சொல்லானது நாவில் அசைந்து வெளிப்படும்போது என்பார். 'அடியேன் வசனம் அசைவுள நேரம்' என்றார்.

'வசனம் அசைவுள நேரம்' என்பதற்குக் கருவி கரணங்களெல்லாம் ஓய்ந்து தளர்ச்சியடைந்த அபாயமான நிலைமையில் எனினுமாம். உடையானை உடைமை மேலேற்றி வேண்டிக் கொண்டதாம். (49)

வரும்பக றன்னில் வச்ரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க

(ப - ரை.) வரும் - நாடோறும் வருகின்ற, பகல் தன்னில் - பகற்காலத்தில், (அடியேனை) வச்சிரவேல் - வயிரம் பொருந்திய வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது ; அரையிருள் தன்னில் பாதி ராத்திரியில், அனைய - அப்படிப்பட்ட வயிரம் பொருந்திய, வேல் - வேலாயுதமே, காக்க - காக்கக்கடவது, எ - று.

(வி - ரை.) இனிமேல் வரப்போகும் பகல் நேரத்தைக் காண்பிக்கும் பகல் என்று குறிக்கவே, 'வரும்பகல்' என்றார். இஃது எதிர்காலம் நோக்கிக் கூறியதாம். வச்சிரவேல் - வலியையுடைய வேல்; வயிரங்கள் பதித்த வேல். அனைய - ஒத்த. அரையிருள் - இரவின் இடை; நள்ளிருள் எனினுமாம். முருகக் கடவுளே ! தேவரீரது திருக்கைவேல் தினந்தோறும் இரவும் பகலும் இடையறாது காக்கக் கடவதாக என்பதாம். (50)

ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க

(ப - ரை.) ஏமத்தில் - முன்னிரவு நேரத்திலும், சாமத்தில் - நடுராத்திரியிலும், எதிர் - பகைவர்களுடன் எதிர்க்கின்ற, வேல் - வேற்படையானது, காக்க - காக்கக்கடவது; தாமதம் நீக்கி-

தாமசத்தைப் போக்கி, சதுர் - திறமையுடைய, வேல் - வேலாயுதமானது, காக்க - காக்கக்கடவது.

(வி - ரை.) எதிர்வேல் - பகைவர்களை நீறுபடுத்தும் வேல். தாமதம் - முக்குணங்களில் ஒன்று. கறுப்பு நிறத்துடன் விளங்குவது. இக்குணம் படைத்தபேர் இராக்கத விருத்தியுடன் விளங்குவர், அதிக ஆகாரம் உட்கொள்வர். இத் தாமத குணப் பிரவிருத்தியாளர் சோம்பல், நித்திரை, கடுங்கோபம் முதலியவைகளாற் போர்வை பூண்டு வருவோராகையால் அக் குணத்தை அகற்றவே 'சதுர் வேல் தாமதம் நீக்கிக் காக்க' என்றார். சதுர் - திறமை; சதுரன் - திறமையுடையவன்; சதுர்வேல் - பகைவரை வென்று வெற்றிகொண்ட வேல் என்பதாம். (51)

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க

(ப - ரை.) நொடியில் - ஒரு நொடிப் பொழுதிலே, (அடியேனை) கனகவேல் - பொன்மயமான வேலாயுதமானது, காக்க காக்க காக்க - காக்கக்கடவது காக்கக்கடவது காக்கக்கடவது; நோக்க நோக்க நோக்க - (அன்புடனே அடியேன் பக்கம்) நோக்கக் கடவது நோக்கக் கடவது நோக்கக் கடவது, எ - று.

(வி - ரை.) கனகவேல் - பொன்னாற் செய்தவேல்; பொன்போற் சிறந்த வேல், அழகிய வேல் என்றுமாம். நொடி என்பது கையை நொடிக்கும் நேரம். அது விரைவின் மிகுதியைக் காட்டும்; ஒரு மாத்திரைக்காலம், இதனை,

"இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை"

—நன்னூல்

என்பதனாலறிக.

காக்க காக்க காக்க என்று மும்முறை அடுக்கி வந்ததும், நோக்க நோக்க நோக்க என்று மும்முறை அடுக்கி வந்ததும், பொருள் விரைவைக் காட்ட வந்தனவாம். இதனை,

" அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொருசொல்
லிரண்டு மூன்றுநான் கெல்லை முறையடுக்கும்"

—நன்னூல்

" இசைநிறை யசைநிலை பொருளொடு புணர்த லென்றவை
மூன்றென்ப வொருசொல் லடுக்கே யிரைசொல் லடுக்கே
மூன்று வரம்பாகும்"

—தொல்காப்பியம்

என்பனவற்றானறிக. வேற்படையின் காரியங்களை நோக்க நோக்கச் சிறப்பு தோன்றுமாகையால் 'நோக்க நோக்கக் கனகவேல்' என்றார். இனி நோக்குதல் - தியானித்தல்; நோக்க நோக்கக் காக்கும் வேல் எனப் பொருள் கொளினுமாம். (52)

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட

(ப - ரை.) பாவம் - அடியேன் செய்த பாவங்கள், பொடி பட - தூளாகி நாசமடைய, பார்க்க பார்க்க - (அதனைக் கோபத்துடனே) நோக்கக் கடவது, நோக்கக் கடவது; தடை அற - சிறிதும் தடையில்லாமல், தாக்க தாக்க தாக்க - அடித்துத் தாக்குக, அடித்துத் தாக்குக, அடித்துத் தாக்குக, எ - று.

(வி - ரை.) முருகக்கடவுள் கிருபாகடாக்ஷ வீக்ஷண்ணிய மாத்திரத்தாலே பாவமெல்லாம் பஞ்சாய்ப் பறந்துபோம் என்பது திண்ணமாகையால், 'பார்க்க பார்க்க பாவம் பொடிபட' என்றார்.

பாவம் தேயப் புண்ணியம் வளருமாதலின், 'பாவம் பொடி படப் பார்க்க பார்க்க' என்றார். (53)

பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்

(ப - ரை.) பில்லி - பகைவர் ஏவிவிடும் பில்லி என்னும் ஒருவகைப் பேயும், சூனியம் - மாரண வித்தையும், பெரும் பகை - பெரிய விரோதங்களும், அகல - என்னிடம் வந்து (அடையாமல்

அப்புறம்) ஓடிப்போகவும், வல்லபூசம் - வலிமையான பூதங்களும் வலாஷ்டிகப் பேய்கள் – பலம் பொருந்திய பிசாசுகளும், எ - று.

(வி - ரை.) பில்லி - மனிதருக்குக் கெடுதி செய்யும்படியாகப் பகைவரால் ஏவி விடப்படும் ஒருவகைப்பேய், மாரணவித்தை - மனிதரைக் கொல்லும்படியாகச் செய்யப்படும் ஒருவகை மந்திரம்; பெரும்பகை - பெருமையாகிய பகை; பண்புத்தொகை. பில்லி சூனியம் - இவைகள் பிறரைத் துன்பஞ்செய்ய ஏவுதலாம் ஒருவன் தான் அடையும் பயன் சூனியத்தால் சூனியப்படுமாறு செய்வதே சூனியம் செய்தல். பில்லி சூனியம், பெரும்பகை என்னும் இம் மூன்றும் இவ்வுலகத்தில் வாழும் மனிதவர்க்கத்திற்குத் தீமை தருவன ஆகலின் அவைகளை முறையே அடுக்கி வைத்தனர். வலாட்டிகட்பேய் - தத்துவம்பேசித் தலையாட்டி வருந்தும் பேய். பிரமராக்ஷன் என்னும் பேய் எனவும் முனீஸ்வரன் எனவும் மந்திரவாதிகள் கூறுவர். முருகக்கடவுளே அடியேனுக்குப் பில்லி முதலானவைகளினாலே உண்டாகக்கூடிய துன்பங்களை யெல்லாம் போக்கியருளி இன்பங்களை யெல்லாம் அளித்தருள்வாயாக என்பதாம். (54)

அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்

(ப - ரை) அல்லல் படுத்தும் - மனிதர்களைத் துன்பத்திற்குட்படுத்துகின்ற, அடங்கா முனியும் - கட்டுப்படாத முனியின் வர்க்கங்களும், பிள்ளை - இளங்குழந்தைகளை, தின்னும் - கொன்று சாப்பிடும், புழைக்கடை - வீட்டின் பின்பக்கத்திலே யிருக்கும், முனியும் - முனிகளும், எ - று.

(வி - ரை.) முனிகள் தாம் பிடித்துள்ளவர்களைத் தாம் பிடித்துள்ள வரையிலும் பலவகையாகத் துன்பத்தில் துடிக்கும்படியாகச் செய்யுமாகலால், 'அல்லற் படுத்தும்' என்றார். மந்திர தந்திர விபூதிகளுக் கெல்லாம் கட்டுப்படாமலும், மந்திரம் கற்ற மந்திரவாதிகளையும் மருளச்செய்யும் முனிவர்க்க மென்பார், 'அடங்கா முனியும்' என்றார். இளங்குழந்தைகளைத் தாயலறக் கொன்று

நின்றும்படியான, வீட்டின் பின்பக்கத்திலே வீட்டினர் தரும் பூசை விருந்துண்டிருக்கும் முனிகளும் என்பார், "பிள்ளைகடின் னும் புழக்கடை முனியும்' என்றார். (55)

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்ஷதரும்

(ப - ரை) கொள்ளிவாய் - நெருப்பை வாயிலேயுடைய, பேய்களும் - பிசாசுகளும், குறளைப் பேய்களும் - குள்ளமான பேய்களும், பெண்களைத் தொடரும் - வாலிபப் பருவ மாதர்களைக் கண்டு விடாமலே பின்பற்றும், பிரமராக்ஷதரும் - பிரமராக்ஷதப் பேய்களும், எ - று.

(வி - ரை.) கொள்ளிவாய்ப் பேய்கள் - நெருப்பின் சுவாலையை வாயிலே காட்டிக் கண்டவர்களை யெல்லாம் திகைக்கச் செய்யும்படியான ஒருவகைப் பேய்கள். கொள்ளி - நெருப்புற விறகு; இஃது இங்கே நெருப்பை யுணர்த்திற்று. குறளைப் பேய்கள் - உருவத்தில் மிகவும் குள்ளமான பேய்கள்.

பிரமராக்ஷதர் - வேதங்களை ஓதி யுணர்ந்தும் பிரமஞான மடைந்தும், நல்லொழுக்கத்திற் சிறந்தும், வருணாச்சிர முறையில் முறை பிறழாமல் நின்றும் விளங்கிய ஓர் அந்தண பிரமசாரி துர்மரண மடைந்தால் அவனுவி பேய் வடிவடைந்து நிற்பது. பிரம ராக்ஷதர் - அவமரண மடைந்த பிராமணராவிகள் தங்கிய பேய் வடிவங்கள். (56)

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கி
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்

(ப - ரை.) இரிசி - இரிசி என்னும் ஒரு வகையான பெண் பேயும், காட்டேரி - காட்டேரி என்னும் துஷ்ட தேவதையும், (ஆகிய) இத்துன்ப சேனையும் - இத்துன்பம் பொருந்திய பேய்ப் படைகளும், அடியனைக் கண்டால் - அடியேனைப் பார்த்தால், அலறி - பயந்து, கலங்கிட - கலக்கமடைந்து பற்றினவரை விட்டோடவும், எ - று.

(வி - ரை.) 'அடியனை' என்றது முருகத் தியானத்தில் சிறந்த இவ்வடிமையினை. இரிசி - இருதுவாகும் தன்மையில்லா முன்னே நீரிலிறந்து அவமிருத்து அடைந்து பெண் வடிவமான ஒருவகைப் பேய். காட்டேரி - பிடித்தவரை இரத்தப் பெருக்காலே துன்பஞ் செய்யும் கொடிய தேவதை. (57)

எல்லினு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்

(ப - ரை.) எல்லினும் - பகற்காலத்திலும், இருட்டிலும் - இராக் காலத்திலும், எதிர்படும் - எதிரிலே வந்து தோன்றுகிற, அண்ணரும் - அண்ணர்களென்ற தேவதைகளும், கனம் - மிகுதியான, பூசை கொள்ளும் - விசேஷ பூஜைகளைக் கொள்ளுகின்ற, காளியோடு அனைவரும் - காளிகா தேவியோடு சேர்ந்த மற்ற பரிவாரங்களாகிய தேவதைகளும், எ. று.

(வி - ரை.) எல்-பகல்; அதனைச் செய்பவன் சூரியன், அண்ணர்கள் - ஆண் தேவதைகள்; இவர்களை அண்ணமார் என்றும் சொல்லுவார்கள். சென்னை முதலிய இடங்களில் இவர்களால் கெடுதி நேராதிருப்பதற்காக இவர்களுக்குப் பூஜை புரிந்து இவர்களைக் கொண்டாடுவது வழக்கம். இனி 'அண்ணரும்' என்பதற்கு, கருப்பண்ண ரென்னும் தேவதையும் எனப் பொருள் கூறுவாரு முளர். (58)

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்

(ப - ரை) விட்டாங்காரரும் - கொல்லுகின்ற ஆங்காரமுடையவர்களாகிய பூதர்களும், மிகுபல பேய்களும் - இன்னுமிருக்கின்ற அநேகம் பிசாசுகளும், தண்டியக்காரரும் - சிவிகை மேலேறி வரக்கூடிய பூதர்களும், சண்டாளர்களும் - புலைத்தன்மை வாய்ந்த பேய்களும், எ - று

(வி - ரை.) வீட்டு + ஆங்காரர் என்பது விட்டாங்காரர் எனச் செய்யுள் விகாரத்தால் முதலெழுத்தாகிய வீ குறுகிவந்தது

சண்டாளம் என்பது ஆகு பெயராய் அதனையுடைய பேய்களுக் காயிற்று. (59)

என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்

(ப - ரை.) ஆனையடியினில் - யானைகள் கட்டியிருக்கும் இடத்தில் அதனடிக்குக் கீழே புதைக்கப்பட்ட, அரும்பாவைகளும் - அருமையான மாப்பிரதிமைகளும், என் பெயர் சொல்லவும் - என்னுடைய பெயரைச் சொன்னவுடனே இடிவிழுந்து - இடியானது மேலே வீழ்ந்ததுபோலக் கலக்க முண்டாக, ஓடிட - பயந்து ஓடவும், எ - று.

(வி - ரை.) சொல்லவும் என்பதில் உம்மை விரைவுப் பொருள் குறித்து வந்தது; இசை நிறைப் பொருளு மாகும். செய்புன் ஈகாரம் இடைக்குறை. பாவை - உவமையாகுபெயர். தடங் கருணைப் பெருங்கடலாகிய முருகக் கடவுளிடத்தில் அருள் பெற்றது மன்றியிலே, தன் பெயர் சொன்னவுடனே. பிறாடையும் கஷ்ட நஷ்டங்களும் அவர்களை விட்டுத் தூர விலகிப்போகும்படியாகப் புரிதல் வேண்டுமென்பார், 'என் பெயர் சொல்லவும் இடி விழுந்து ஓடிட' என்றார். மாவினால் பாவை செய்து மாரணத்தின் பொருட்டு மந்திர வுருவேற்றி யானையிற்குமிடத்தில் அதன் அடிக்குக் கீழும், புற்றின் கீழும் புதைப்பது வழக்கம் என்பர். இவ்விடங்களில் புதைத்தால் அது சீக்கிரம் அழிந்து போகு மெனவும், அவ்வாறு அழிந்தவுடனே அஃது எவருக்காகச் செய்யப்பட்டதோ அவர்கள் கேடடைவரெனவும், மாந்திரீக வித்தைக் காரர் விளம்புவர். (60)

பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்

(ப - ரை.) பூனை - பூனைகளுடைய, மயிரும் - உடல் உரோமமும், பிள்ளைகள் என்பும் - தலைப்பிள்ளைகளினுடைய எலும்பும், நகமும் - நகங்களும், மயிரும் - அப் பிள்ளைகளின் உரோமமும்,

நீள்முடி - நீண்ட மயிர் முடியையுடைய, மண்டையும் - தலையும், எ - று.

(வி - ரை.) பூனைமயிர் என்பதற்குக் காட்டுப்பூனையின் மயிர் என்றும், பிள்ளைகள் என்பு என்பதற்குத் தலைப்பிள்ளையின் ஒட்டெலும்பு என்றும், நகம் என்பதற்குக் கைப்பெருவிரலின் நகம் என்றும், மண்டை என்பதற்கு மண்டையின் ஓடு என்றும், இவைகளை எல்லாம் கொண்டுவந்து கருமை கூட்டுவது மந்திரக்காரர் முறையென்றும் சூனியாதிகளுக்காக அவர்கள் உபயோகிப்பார்கள் என்றும் கூறுவர். முடி - முடித்தல்; காரணப்பெயர். நீண்முடி - தொங்கும் தலைமயிர் முடியுமாம். (61)

பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்

(ப - ரை.) பாவைகளுடனே - பல மாப்பதுமைகளுடனேயும், பல கலசத்துடன் - பலவகையான மட்பாண்டங்களுடனேயும், மனையில் புதைத்த - வாழும் வீட்டில் புதைத்துவைத்த, வஞ்சனைதனையும் - வஞ்சனையாகிய மாரணச் செய்கையையும், எ - று.

(வி . ரை) மந்திரவாதிகள் செய்த பல மாப் பதுமைகளுடனேயும் பலவகையான மட்பாண்டங்களுடனேயும் வீட்டிற் புதைப்பது வழக்கமெனவும், அவ்வாறு புதைக்கப்பட்டவை மண்ணுக்குள்ளேயே தங்கிநின்று மாய்ந்து போகுமேயானால், அந்த வீட்டுக்குடையவர் கேடுறுவர் எனவும் கூறுவர். (62)

ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்

(ப - ரை.) ஒட்டியச் செருக்கும் - (அடியேனுக்குக் கெடுதி செய்பவர்கள் கற்றுணர்ந்திருக்கும்) ஒட்டியம் என்னும் மாந்திரீக நூலால் ஏற்பட்ட அகங்காரமும், ஒட்டியப் பாவையும் - ஒட்டியமென்னும் மாந்திரீக நூலில் சொல்லும் முறைப்படி அடியேனைக் கெடுத்தற்காகவே செய்து மந்திர உரு ஏற்றப்பட்ட மாப்பதுமை

யும், காசும் பணமும் - திரவியங்களையும், காவுடன் - பலியுடனே சோறும் - பலி உதிரத்திற் புரட்டிய சோறும், எ - று.

(வி - ரை.) ஒட்டியம் - மாந்திரீக வித்தைகளைக் கூறும் ஒரு வகைச் சாஸ்திரம். அடியேனைக் கெடுத்தற்கு ஏவிவிடும் பேய்களுக்குத் தக்ஷிணையாகக் காசும் பணமும் வைக்கப்படுகின்றனவாதலால், 'காசும் பணமும்' என்றார். பாவை என்பது மாவினால் மனிதனைப்போல் செய்யும் பிரதிமை அல்லது பொம்மை. காவு - கொல்லுதல்; பலி - காவு கொடுத்தல். ஆடு கோழி பன்றி எருமைக்கடா பலி கொடுத்தல். அப்பேய்களுக்கு இடும் ஆடு கோழி பன்றி எருமைக்கடா முதலியவைகளை அறுத்தலாகிய பலியுடனே அப்பலியுதிரத்தில் புரட்டிய சோறும் என்பார், 'காவுடன் சோறும்' என்றார். இரத்தச் சோறு இறைத்தல் இன்றும் வழக்கத்தில் உள்ளது.

மேலே சொன்னவை சூனியத்தின் காரியங்கள். (63)

ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

(ப - ரை.) ஓதும் - (அந்த ஒட்டிய நூலில்) விதித்திருக்கின்ற, அஞ்சனமும் - மந்திர மையும், ஒரு வழிப்போக்கும் - தனி வழியிற் போருமாறு பகைவர் செய்தலாகிய தொழிலும், அடியனைக் கண்டால் - அடியேனைப் பார்த்தால், அலைந்து - கஷ்டமடைந்து, குலைந்திட - சிதைந்து தொலையவும், எ - று.

(வி - ரை.) அடியேனிடத்துள்ள இரகசியங்களை அறிவதற்கு ஏதுவாயிருப்பது அஞ்சன வித்தை யாகலானும், அந்த அஞ்சனவித்தையும் ஒட்டியம் என்னும் நூலில் சொல்லப்பட்டதாகலானும், 'ஓதும் அஞ்சனமும்' என்றார். ஒருவழிப் போக்கு என்பது பயித்தியம் பிடித்துத் தனிவழியிற் செல்லும்படி செய்வதாகிய ஒருவகை வித்தை. அஞ்சனத்தின்மூலம் கண்ணுக்கெட்டாத வெகு தூரத்திலேயுள்ள இரகசியங்களை யெல்லாம் பகைவர்

அறிந்து கொண்டு கெடுதி செய்வார்களாதலால், அதுவும் கூடா தென்றனர். (64)

மாற்றன் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட

(ப - ரை.) மாற்றான் - பகைவனும், வஞ்சகர் - வஞ்சனை செய்யும் வஞ்சகர்களும், காலதூதாள் - காலத்தைக் கணக்கிட்டு உயிரைக் கவர்ந்து கொண்டுபோக வருபவர்களான எமதூதர்களும், எனைக்கண்டால் - அடியேனைப் பார்த்தால், வந்து வணங்கிட - அடியேன் முன்பாக வந்து வணங்கவும், கலங்கிட - மனம் திடுக்கிடவும், எ - று.

(வி - ரை.) தன் மனத்திற்கு வேறான தீய காரியங்களைச் செய்பவன் பகைவனாகலின், அவன் மாற்றான் எனப்பட்டான்.

மாறு + ஆன் மாற்றான்; பகுதி ஒற்றிரட்டி ஆன் விகுதி பெற்றுப் புணர்ந்தது. தூதாள் - தூதவர்கள்; இவ்வாறே சைவாள் வைஷ்ணவாள், பிராமணாள், வைசியாள் என வருவன காண்க. ()

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட

(ப - ரை.) அஞ்சி - பயந்து, நடுங்கிட - நடுக்கவும், அரண்டு - பிரமித்து, புரண்டிட - கீழே விழுந்து புரளவும், வாய்விட்டு அலறி - வாயைத்திறந்து கதறி, மதிகெட்டு - அறிவழிந்து, ஓட - ஓடவும், எ - று.

(வி - ரை.) உலகத்திலுள்ள ஜீவர்களின் உயிரைப் பயமில்லாமல் கவர்ந்துகொண்டு போகும்படியான எமதூதர்களும் அடியேனைக் கண்டால் பயந்தோடும்படியாகத் தேவரீர் திருவருள் பாலிக்க வேண்டும் என்று முருகப்பிரானைப் பிரார்த்தித்ததாம். ஜீவகோடிகளின் உயிர்களைக் கவர்ந்துகொண்டு செல்லும் இயமதூதர்களும் அடியேனைக் கண்டால் பயந்தோடுமாறு தேவரீர் திருவருள் புரிதல் வேண்டும் என்பதாம். (66

படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு

(ப-ரை.) படியினில் - பூமியிலே, முட்ட - மோதிக்கொள்ளவும், பாசக் கயிற்றால் - பாசமாகிய கயிற்றால், கட்டு - கட்டக்கடவாம்; உடன் - உடனே, அங்கம் - அவயவங்கள், கதறிட - அழும்படி, கட்டு - கட்டக்கடவாய், எ - று.

(வி-ரை.) பாசக்கயிறு - பாசமாகிய கயிறு; இரு பெயரொட்டுப் பண்புத்தொகை, சாரைப்பாம்பு என்பதுபோல. பாசம் - உயிர்களைப் பிணிக்கும் அன்பு. கயிற்றால் - ஆல், மூன்றும் வேற்றுமைக் கருவிப்பொருள். தேவரீர் அடியேனைப் பூமியிற் பாசத்தாற் பிணித்து விடுவீராக, என்பதாம். (67)

கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு

(ப-ரை.) கால் கை முறிய - காலும் கையும் ஒடியவும், கதறிடவும் - (அவ்வருத்தத்தால்) வாய்விட்டுக் கதறியழவும், கட்டு கட்டு கட்டு - (பாசத்தாலே இறுகக் கட்டக்கடவாய், கட்டக்கடவாய், கட்டக்கடவாய்; கட்டி - (மேலே சொல்லிய பிரகாரம்) பிணித்து, உருட்டு - (கீழே) உருட்டிவிடக் கடவாய், எ - று.

(வி-ரை.) கட்டு கட்டு கட்டு என்ற அடுக்குகள் வெகுளிப் பொருளன. தீயவர்கள் கைகளும் கால்களும் முறியவும், அவ்வருத்தத்தினாலே அவர்கள் வாய்விட்டுக் கதறியழவும், பாசத்தினாலே அவர்களை இறுகப் பிணித்தருள்வாய். பிணித்தருள்வதோடல்லாமல் கீழே உருட்டிவிடக் கடவாயாக என வேண்டிக் கொள்ளலாம். (68)

முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக

(ப-ரை.) விழிகள் பிதுங்கிட - கண்கள் இரண்டும் வெளியில் புறப்பட்டு வந்து வருந்த, முட்டு முட்டு - குத்து குத்து,

செதில் செதிலாக-உடம்பு பொருக்குப் பொருக்கா யதிருப்படியாக, செக்கு செக்கு-கொல்லு கொல்லு, எ - று.

(வி-ரை.) செகு செகு என்பன செய்யுள் விகாரத்தால் 'செக்கு செக்கு' என வல்லொற்று விரிந்து வந்தன. பொருக்கு என்பது மரம் முதலானவற்றின் பட்டை முதலானவை வறண்டு காய்ந்து உதிரும் அள். பகைவர்களின் அக்கங்களும் இது போலவே யாகுமாறு குத்து என்பார், செக்கு செக்கு செதிற் செதிலாக என்றார். முருகக்கடவுளே! என்னுடைய பகைவரை விழிகள் பிதுங்கி வெளிவரும்படியாகச் செய்து கொல்லுவாயாக என வேண்டிக் சொள்ளுதலாம். (69)

சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

(ப-ரை) சொக்கு சொக்கு-அழகானவனே! அழகானவனே!, சூர்ப்பகை - சூரபதுமனுக்குப் பகைவனான, சொக்கு-அழகானவனே!, கூர்வடிவேலால்-மிகுந்த கூர்மையுடைய தேவரீர் திருக்கை வேலால், குத்து குத்து-இடி இடி, எ - று.

(வி-ரை.) சொக்கு-அழகு, சொக்கர்-அழகர்; சொக்கு என்பது ஈண்டு ஆகு பெயராய் அதனை யுடையவரான முருகக் கடவுளை உணர்த்திற்று கூர்வடி-ஒருபொருட் பன்மொழி; மீமிசைச் சொல் எனவும் படும். மிக்க கூர்மையுடையது என மிகுதிப்படுத்திக் கூறவே 'கூர்வடி' என்றார்; கூர்வடிவேல் என்பதற்குக் கூர்மையாய் வடிக்கப்பட்ட வேல் எனினுமாம். என் பகைவர்களை நின் திருக்கை வேலால் கொன்றொழித் தருள்வாயாக என்பதாம். (70)

பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக

(ப-ரை.) பற்று பற்று-கையினாலே பிடிப்பாயாக பிடிப்பாயாக; பகலவன்-பகலைச் செய்யும் சூரியனிலுள்ள, தணல்

அதுவாக - அத் தழலுருவமாகும்படி, தணல் எரி தணல் எரி தணல் எரி - தழலால் எரிக்கக் கடவாய், தழலால் எரிக்கக் கடவாய், தழலால் எரிக்கக் கடவாய், எ - று.

(வி - ரை.) சூரியன் பகலைச் செய்பவனாகலின் 'பகலவன்' எனப்பட்டான். எனவே இது காரணப்பெயர். பற்று பற்று - விரைவு பற்றிய அடுக்கு. பகலைச்செய்யும் சூரியனிடத்துள்ள தழலையும் நினது ஒளியால் எரித்தருளுவாயாக என்பதாம். (71)

விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க

(ப - ரை.) புலியும் - (அடியேனைக் கொல்லும்படியாக வரும்) புலியென்னும் துஷ்டமிருகமும், வெருண்டு - அடியேனைப் பார்த்துப் பயமடைந்து, அதுஓட - அப்புலியும் ஓடிவிடும்படியும், நரியும் - பெருநரியும், புல்நரி - சிறிய நரியும், நாயும் - நாய்களும், எலியும் - எலிகளும், கரடியும் - கரடிகளும், இனி - இனிமேல் (பீதியடைந்து), தொடர்ந்து - ஒன்றன் பின்னே ஒன்று விடாமல் பின்பற்றி, ஓட - ஓடவும்; தேளும் பாம்பும் செய்யான் பூரான் - தேள்களும், பாம்புகளும், செய்யான்களும், பூரான்களும், கடிவு - கடித்தலையுடைய, இடம் - இடத்திற்றங்கிய, விஷங்கள் - விஷங்களும், கடித்து - பற்களாலே கடித்த, உயர் அங்கம் - உயர்ந்த உடலில், ஏறிய விஷங்கள் - தலைக்கு ஏறிய விஷங்களும், எளிது - மிகவும் சுலபமாய், உடன் இரங்க - உடனே இறங்கிவிடவும், வேலை - வேலாயுதத்தை, விடு விடு - ஏவிவிடக்கடவாய், ஏவிவிடக்கடவாய், எ - று.

(வி - ரை.) 'வெருண்டது ஓட' என்பதற்கு வெருண்டதாகி ஓட என்றும் உரைக்கலாம். 'புன்னரி' என பின்னே வந்தமையால் முன்வந்துள்ள நரிக்குப் பெருநரி எனப் பொருள் கூறப்

பட்டது. செய்யான் - பூரான்களில் ஒரு பேதம். இது கோடுகளமைந்த நீண்ட கொடுமை தரும் ஒரு விஷ ஜந்து. இது கரும் பூரான் அல்லது பெரும் பூரான் எனப்படும். கடிவு - தொழிற் பெயர் ; கடி - பகுதி, வு - தொழிற் பெயர் விகுதி. வேலை விடு என்றதனால், உடையான் பெருமையை அவர் உடைமையின் பெருமையால் விளங்குமாறு விளம்பியது முருகக் கடவுளே! விஷ ஜந்துக்களால் எற்படும் பாதைகளை யெல்லாம் போக்க நினது வேலாயுதத்தைத் தொடுப்பாயாக என்பதாம். (72 73, 74)

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எவ்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணு ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

(ப - ரை.) ஒளிப்பும் - உருவம் தெரியாதபடி மறைக்கும் மறைப்பும், சுளுக்கும் - நரம்பு பிசகுதலும், ஒரு தலைநோயும் - ஒரு பக்கத் தலைவலியும், வாதம் - வாயு சம்பந்தமான வியாதியும், சயித்தியம் - குளிர் வியாதியும், வலிப்பு – கைகால் முதலிய இழுப்பு வியாதியும், பித்தம் - பித்தம் சம்பந்தமான வியாதியும், சூலை - சூலை வியாதியும். சயம் - க்ஷயரோகமும், குன்மம் - குன்ம வியாதியும், சொக்கு - சோர்வையுடைய, சிரங்கு - சிரங்கு வியாதியும், குடைச்சல் - கைகால் குடைச்சலும், சிலந்தி - சிலந்தி வியாதியும், குடல்விப்பிரிதி - குடலில்வரும் சிலந்தி நோயும், பக்கப்பிளவை - விலாப்

புறங்களில் வரும் பிளவையும், படர்தொடைவாழை - மேலும் மேலும் பரவுதலையுடைய தொடை வாழை வியாதியும், கடுவன் - கடுவான் என்னும் ஒருவகைக் கரப்பான் வியாதியும், படுவன் - படுவன் என்னும் வியாதியும், கைத்தாள் சிலந்தி - கையிலும் காலிலும் தோன்றும் சிலந்திகளும், பல்குத்து - பல்லில்வரும் குத்தும், அரணை - பல்லரணையும்; பரு - பெரிய, அரையாப்பும் - அரைகளிலே வருகின்ற அரையாப்புக்கட்டி என்னும் வியாதியும், எல்லாப் பிணியும் - முதலிய சமஸ்தமான வியாதிகளும், என்றனைக் கண்டால் - என்னைப் பார்த்தவுடனே, நில்லாது ஓட - நிற்காமல் ஒழிந்துபோக, நீ எனக்கு அருள்வாய் - முருகக்கடவுளே தேவரீர் அடியேனுக்குக் கருணைபுரிவீராக; ஈரேழு உலகமும் - பதினான்கு லோகங்களும், எனக்கு உறவாக - எனக்கு சிநேகமாகவும், ஆணும் பெண்ணும் - ஆண்களும் பெண்களும், அனைவரும் - ஆகிய சமஸ்தமான பேர்களும், மண்ஆள் அரசரும் - பூமியை ஆளுகிற அரசர்களும், எனக்கா - என்பொருட்டு, மகிழ்ந்து உறவாக - சந்தோஷித்து சினேகங் கொள்ளவும், எ - று.

(வி - ரை) குஷ்டம் முதலிய கெட்ட வியாதிகளால் வடிவந் தெரியாமல் மறைந்து போவதனால் 'ஒளிப்பும்' என்றார். குஷ்டம் வியாதிகளிலெல்லாம் பெருவியாதி என்று குறிக்கவே 'பெரு வியாதி' என்பர். நாலடியார் 'துக்கத் தொழுநோய் எழுபவே அக்காலவனைக் காதலித்துக் கான்முறித்துத் தின்றபழவினை வந்தடைக்கால்' என்றும், தேவாரம் 'அங்கமெலாம் புழுத்தொழுகு தொழுநோயராய்' என்றும் கூறியது நோக்கத்தக்கது. கர்மவியாதி யென்றும் தொழுநோய் என்றும் கூறப்படுவதும் இஃதே. கடுவன் - குழந்தைகளுக்குவரும் ஒருவகை வியாதி. பக்கப்பிளவு - இராஜப் பிளவுக் கட்டி. இதை இராஜகட்டி என்றும் கூறுவர். குன்மம் - வயிற்றினுள்ளே உண்டாகும் கட்டி, குன்மக் கட்டி என்றும் பெயர் பெறும். சொக்கு - பித்த உபரியினால் எற்படும் மயக்கம், வாந்தி முதலியன. எல்லாப் பிணியும் என்பதிலும்மை முற்றும்மை, உலகம் என்ற பல பொருள் குறித்த ஒருபெயர்த் திரிசொல்.

ஈண்டு இடத்தையும் இடத்தில் வாழும் உயிர்களையும் உணர்த்து கின்றது. இது லோகம் என்னும் வடசொல்லின் திரிபு என்பர். இது தமிழ்ச் சொல்லேயாம் என்பது உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் கொள்கை. சமஸ்த வியாதிகளும் அடியேனைக் கண்டவுடனே நிர்மூலமாகும்படி அருள்புரிவாயாக எனவும், எல் லோரும் சினேகராகும்படி கிருபை புரிவாய் எனவும் கூறிய வாறும். (75, 80)

உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே

(ப-ரை.) சரஹணபவனே - நாணற் காடாகிய சரவணப் பொய்கையில் உற்பத்தியானவனே! சைல - மலைகளிலே தங்கு கின்ற, ஒளி - பிரகாசத்தையுடைய, பவனே - கடவுளே, உன் னைத் துதிக்க - தேவரீரைத் துதிக்க, உன் திருநாமம் - தேவரீர் அழகிய திருநாமங்களாகிய, எ - று.

(வி - ரை.) சரவணம் - நாணற் காட்டில், பவன் - அவதரித் தவன் அல்லது பிறந்தவன். நாணற்காடாகிய சரவணப் பொய் கையில் திருவவதாரஞ் செய்தவராகலின், சரஹணபவன் என்றும் சரஹணோற்பவன் என்றும் திருநாமங்கள் பெற்றார். சரஹண பவன் எனவே முருகப் பெருமான் திருவவதாரத்திற்குக் காரண மாக இருந்த சரவணப் பொய்கையிற் றோன்றினமையைக் குறிக் கவே 'சரஹணபவனே' என்றார். சைலம் - மலை; இஃது அம் - விகுதி குறைந்து சைல் என நின்றது. (81)

திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே

(ப - ரை.) திரிபுரபவனே - திரிபுர ஸம்ஹாரஞ் செய்தரு ளிய சிவபெருமானை ஒத்தவனே!, திகழ் - விளங்குகின்ற, ஒளி பவனே - பிரகாசம் தங்கினவனே!, பரிபுரபவனே - பாதச் சிலம்பை அணிந்த மேன்மையுடையவனே!, பவம் - பிறப்பானது, ஒளி - மறையத்தக்க, பவனே - சத்தியை யுடையவனே!, எ - று.

(வி - ரை.) திரிபுரபவன் - திரிபுரங்களை நாசம் செய்த சிவ பெருமான். ஈண்டுக் குண வொற்றுமை கருதி முருகக் கடவுளை அச்சிவபெருமானாகவே கூறினர். எனவே, திரிபுராந்தகனை முதல்வனே வேற்றுரு வெடுத்து முருகனென வந்தா னென்றலு மாம். (82)

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்

(ப - ரை.) அரி - விஷ்ணுவுக்கும், திரு - இலக்குமிக்கும், மருகா - மருமகனே!, அமராபதியை - தேவர்கள் வாழும் தேவ லோகத்தை, காத்து - காப்பாற்றி, தேவர்கள் - அத் தேவர்களு டைய, கடும் சிறை - கொடிதான சிறைச்சாலைத் துன்பத்தை, விடுத்தாய் - நீக்கி யருளினாய், எ - று.

(வி - ரை.) முருகக் கடவுள் தங்கள் பால் எழுந்தருளி வந்து திருமணம் செய்து கொள்ளும்படியாகத் தாங்கள் செய்த தவத்தால் தெய்வயானையும் வள்ளியம்மையாருமாக வடிவெடுத்து வந்தவர்கள் திருமால் புத்திரிகளாகிய சுந்தரியும் அமுதவல்லியு மாதலால், அம் முருகக் கடவுளைத் திருமாலுக்கும் திருமகளுக் கும் மருகராகக் கூறுதல் முறைமை. அம் முறைமை ஒட்டியே இவரும் 'அரி திருமருகா' என்றனர்.

இவ்விரு திருமால் புதல்வியர் இருவரும் முருகக் கடவுளைத் திருமணஞ் செய்து கொள்ளத் தவஞ் செய்தார்கள் என்பதை,

" எல்லை யன்னதின் மாலருள் கன்னிய ரிருவர்
சொல்ல ரும்பெரு வனப்பினர் சுந்தரி யமுத
வல்லி யென்றிடும் பெயரினர் கந்தவேள் வரைத்தோள்
புல்லு மாசையாற் சரவணத் தருந்தவம் புரிந்தார் "
—கந்தபுராணம்

என்பதானறிக.

சூரபதுமன் தேவர்களைச் சிறைப்படுத்தி வருத்தியதை முருகக் கடவுள் விடுவித்தமையால் 'தேவர்கள் கடுஞ்சிறை விடுத் தாய்' என்றார். (83)

கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா

(ப - ரை.) கந்தா - கந்தனே!, குகனே - குகப்பெருமானே!, கதிர் - கிரணங்களையுடைய, வேலவனே - வேலாயுதத்தையுடையவனே!, கார்த்திகை மைந்தா - கார்த்திகை மாதர்களான ஆறு பெண்களாலே வளர்க்கப்பட்ட புதல்வனே!, கடம்பா - கடப்ப மலர் மாலையைத் தரித்தவனே! கடம்பனை இடும்பனை - கடம்பனையும் இடும்பனையும், அழித்த - நாசஞ் செய்த, இனிய வேல் முருகா - நன்மை செய்யும் வேலாயுதத்தைத் திருக்கரத்தில் தாங்கிய முருகனே!, தணிகாசலனே - திருத்தணிகை மலையில் எழுந்தருளி யிருப்பவனே!, சங்கரன் புதல்வா - சிவபெருமான் திருக்குமாரனே!, எ-று.

(வி-ரை.) குகன் - அடியார்களின் மனக்குகையில் வாழ்பவன்; பிரணவக் குகையிலிருப்பவ னெனினுமாம். கடப்பமாலை அணிபவராகலின், 'கடம்பா' என்றார். இதனை, திருமுருகாற்றுப்படை, "தலைப்பெய றலைஇய தண்ணறுங்கானத், திருள்படப் பொதுளிய பாரார மராஅத், துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்" என்பதானறிக. முருகக் கடவுள் கார்த்திகை மாதர்களிடம் பால் குடித்து வளர்ந்த காரணத்தால், 'கார்த்திகை மைந்தா' என்றார். இக் காரணம் நோக்கியே, 'கார்த்திகேயன்' என்ற திருநாமமுமேற்பட்டது. இளமை, அழகு, செல்வம் முதலியவற்றால் பொலிவோனாகலின், 'முருகா' என்றார். (84—85)

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா

(ப - ரை.) கதிர்காமத்துறை - கதிர்காமம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்திலே திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற, கதிர்வேல் முருகா - கிரணங்களையுடைய வேற்படையைத் தரித்

தருளிய முருகக் கடவுளே!, பழநிப் பதிவாழ் - பழநியென்னும் திவ்ய க்ஷேத்திரத்திலே வாழ்கின்ற, பாலகுமாரா - பால வயதுடைய குமாரக் கடவுளே!, எ - று.

(வி-ரை.) கதிர்காமம் - இலங்கைத் தீவிலுள்ள சுப்பிரமணிய க்ஷேத்திரம். இஃது ஈழ நாட்டைச் சேர்ந்தது. முருகு - அழகு, வாசனை என்னும் பொருள்படுதலின் முருகன் என்பதற்கு அழகன், வாசனையுடையவன் என்பது பொருளாகும் பால குமாரா - என்பதற்குப் பாலசுப்பிரமணியனே எனவுமாம். பழநிப் பதி என்பது பழநிமலை அடிவாரத்திருக்கின்றது. இலட்சுமிதேவி, காமதேனு, சூரியன், பூமிதேவி, இருடி முதலியோர் பூசித்துப் பேறுபெற்ற ஸ்தலம், இதனை,

"பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழநிமலை மீதினின்ற பெருமானே"

—திருப்புகழ்

என்பதானறிக. மேலும் பழநிஸ்தல புராணத்தில் இதன் மகிமை விரித்துச் சொல்லியுள்ளதையும் காண்க. (86)

ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா

(ப - ரை.) ஆவினன்குடி - திருவாவினன் குடியிலே, வாழ் - வாழ்கின்ற, அழகிய வேலா - அழகான வேலாயுதத்தையுடையவனே!, செந்தில் - திருச்செந்தூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்திலேயுள்ள, மா - சிறந்த, மலையுறும் - மலையிலே எழுந்தருளியிருக்கின்ற, செங்கல்வராயா - செங்கல்வராயனென்னும் திருநாமம் பூண்டவனே!, எ - று.

(வி - ரை.) ஆவினன்குடி - திருவாவினன் குடி, பழநிப்பதி. செந்தில் - திருச்செந்தூர். திருச்செந்தூர் என்பது, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் ஆறுபடை வீடுகளில் இரண்டாவது படைவீடாக உள்ளது. இத்திவ்ய க்ஷேத்திரத்தைத்

திருச்செந்தில் எனவும், திருச்சீரலைவாய் எனவும், கந்தமாதனம் எனவும், சந்தனாசலம் எனவும் கூறுவர். திருநெல்வேலிக்குத் தெற்கே மூன்றுகாத தூரத்தில் சமுத்திர தீரத்திலுள்ளது. சுகப் பிரமரிஷியும், வெள்ளை யானையும் பூசித்து அனுக்கிரகம் பெற்ற ஸ்தலம். இத் திவ்ய க்ஷேத்திரமகிமையை,

"உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீ
ரலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே"

—திருமுருகாற்றுப்படை

எனவும்,

"நாறுமலர்
கந்திப் பொதும்பரெழு காரலைக்கும் சீரலைவாய்ச்
செந்திற் பதிபுரக்குஞ் செவ்வேளே"

—கந்தர் கலிவெண்பா

எனவும்,

"சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்"

—கந்தபுராணம்

எனவும்,

"சினமெத்திய பூதப்படை விண்ணோர் புடைசூழச்
செந்திற்பதி வந்தானருள் சிந்தித்திடு கந்தன்"

—கந்தபுராணச் சுருக்கம்

எனவும்,

"வளரும் வாழையு மஞ்சளும் இஞ்சியும் இடைவிடாது
நெருங்கிய மங்கள மகிமை மாநகர் செந்திலில்"

எனவும்,

"முந்நீ ரின்புறம் அலை பொருத செந்தில்"

எனவும்,

"துங்க மாமதில் சூழ்திரு செந்தில்"

எனவும்,

"மந்தி நடமாடுஞ் செந்தில் நகர்"

—திருப்புகழ்

எனவும், திருச்செந்தூர் ஸ்தல புராணத்தில் இதன் மகிமையை விரித்துச் சொல்லியுள்ளதையும் காண்க. (87)

சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்

(ப-ரை.) சமராபுரிவாழ் - சமராபுரி யென்னும் திவ்ய க்ஷேத்திரத்திலே வாழ்கின்ற, சண்முகத்து அரசே - ஆறு திருமுகங்களையுடைய சண்முகன் என்னும் திருநாமம் பூண்டகோவே !, கார்ஆர் குழலாள் - மேகநிறம் போலும் கருநிறமுடைய கூந்தலையுடையவளாகிய, கலைமகள் - சரஸ்வதியானவள், நன்றாய் - செம்மையாக, எ - று.

(வி-ரை.) காரார் குழலாள் என்பதில் கார் என்பது கருமையென்ற பண்புப்பெயரின் விகாரம்; இஃது ஈறுபோய் இடையுகரமும் கெட்டு ஆதிநீண்டது பண்பாகுபெயராய்க் கருநிற முடைய மேகத்தை யுணர்த்திற்று. இதனை இருமடியாகு பெயராகவும் கொள்ளலாம். ஷட் - ஆறு, ஷண்முகன் - ஆறுமுகன், வடமொழி. சமராபுரி - முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கும் தலங்களி லொன்று. இதனை, திருப்போரூர் என்றும் கூறுவர். இதன் மகிமையைத் திருப்போரூர் ஸ்தல புராணத்திலும், திருப்போரூர் சந்நிதி முறையிலும் காண்க. (88)

என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்

(ப-ரை.) என்நா - என்னுடைய நாக்கில், இருக்க - வீற்றிருப்பதனால், யான் - அடியேன், உனைப்பாட - தேவரீரைப் புகழ்ந்து துதிப்பாடல்களைப்பாடவும், எனை - அடியேனை, தொடர்ந்திருக்கும் - தொடர்ந்துள்ள, எந்தை - அடியேன் தந்தையாகிய, முருகனை - முருகக் கடவுளை, எ - று.

(வி ரை.) என்னாவிருக்க - எனது நாவில் வீற்றிருக்க, எந்தை - என் தந்தை, இவ்வாறே நுந்தை என வருதலும் காண்க.

உன்னை என்பதும் என்னை என்பதும் முறையே உனை எனவும் எனை எனவும் வந்தது செய்யுள் விகாரம்; இடைக்குறை. (89)

பாடினே ஞடினேன் பரவச மாக
ஆடினே ஞடினேன் ஆவினன் பூதியை

(ப - ரை.) பாடினேன் - துதித்துப் பாடினேன், பரவசமாக, மிகு களிப்பாக, ஆடினேன் ஆடினேன் ஆடினேன் - ஆனந்தமான நர்த்தனம் செய்தேன், ஆடுதல் செய்தேன், ஆடுதல் செய்தேன்; ஆவினன் பூதியை - திருவாவினன்குடியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் செல்வத்தை, எ - று.

(வி - ரை.) பரவசமாதலாவது தன்னைத்தான் மறந்து தெய்வத் தியானத்தில் மனத்தைச் செலுத்தி நிற்றல். பரம் - மேல், வசம் - இலயித்தல் எனக்கொண்டு மேலான பொருளுடன் இலயித்தல் எனினுமாம். ஆவினன் என்பதற்கு ரிஷபத்தை வாகனமாக வுடையவன் என்ருவது, அடியார்மீது இரக்கத்தை யுடையவன் என்ருவதுகொண்டு சிவபெருமான் எனினும் பொருந் தும். பூதி - செல்வம், ஈண்டு ஆவினன் பூதி என்றதனுல் பரம சிவனுலே தரப்பட்ட செல்வம். பக்தியின் முதிர்ச்சி தோன்றத் தன்னைத்தான் மறந்து பாடி யாடியதாகப் பேசிய தென்க. (90)

நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி

(ப - ரை.) பாசவினைகள் - உலக மாயையின் சம்பந்தமான செய்கைகளின், பற்றது - சம்பந்தத்தை, நீங்கி - விட்டகன்று, நேசமுடன் - பிரியத்துடனே, யான் - அடியேன். நெற்றியில் அணிய - விபூதியை நுதலில் தரித்துக்கொள்ளவும், எ - று.

(வி - ரை.) பாசம் - கட்டு, அன்பு. நான் - என்னும் அகங் காரமும், எனது என்னும் மமகாரமும் அவற்றின் சம்பந்தங்களும் அறவே விட்டகன்றபோம் என்பார் அடியேன் பிரியத்துடனும் பக்தியுடனும் நெற்றியிலே திருவெண்ணீற்றைத் தரித்துக்

சொன்ன 'பாசவினைகள் பற்றது நீங்கி' என்றார். எனவே, விபூதியை நெற்றியிலே அணிந்துகொள்ளப் பாசவினைகள் பறந்து போயின என்பதாம். (91)

உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்

(ப-ரை.) உன்பதம் - தேவரீருடைய திருவடிகளை, பெறவே அடையவே, உன் அருள் - தேவரீருடைய கிருபையானது, ஆக - என்மீது உண்டாக, அன்புடன் - கிருபையோடு, இரக்ஷி - காப்பாற்றக் கடவாய்; அன்னமும் சொன்னமும்—சோறும் பொன்னும், எ - று.

(வி-ரை.) பெருமானது திருவருளானது இருந்தாலொழிய யாவரும் அவன் திருவடிகளையடைதல் முடியாதென்பதும் அடைய முயல்வதும் கஷ்டசாத்திய மென்பதும் தோன்றவும், 'தவமும் தவமுடையார்க் காகும்' என்னுமா போலேயும் குறிக்கவும், திருவாசகம் "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்னுமாபோலேயும், 'உன்பதம் பெறவே உன்னருளாக' என்றார்.

மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க

(ப-ரை.) மெத்த மெத்த ஆக - மிக மிக உண்டாகவும், வேலாயுதனார் - வேலாயுதத்தைத் தாங்கிய முருகக்கடவுளது, சித்தி பெற்று - செல்வாக்கைப்பெற்று, அடியேன்—, சிறப்புடன் - மிக்க பெருமையோடு, வாழ்க - வாழக்கடவேனாகவும், எ - று.

(வி - ரை.) மெத்த ஆக என்பதில் அகரம் தொக்கது. மெத்த மெத்த - சாமானிய வசனமான கிராமிய வார்த்தை. அடியேன் முருகக்கடவுளுக்கு ஆட்படவே அவன் திருவருள் மிகவும் பெற்று சகலவிதமான சம்பத்துடனே வாழ்வது நிச்சயமாதலின், அவனருளாலே, அடியேன் வேண்டுவன யாவற்றையும் பெற்று மிக்க பெருமையோடும் அழகோடும் வாழ்வேனாக என்பார், 'அடியேன்

சிறப்படன் வாழ்க' எனத் தம்மைத் தானே வாழ்த்தின ரென்க. அடியேன் முருகக் கடவுளின் திருவருள் பெற்றுச் சகலமான சம்பத்துக்களும் பெற்று மிக்க பெருமையோடு வாழ்வேனுகவும் என்பதாம்.

உலகில் பெறவேண்டியவை தனதான்யாதிக ளாகையால், 'அன்னமும் சொன்னமும்' என்ருர். (93)

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க

(ப-ரை.) மயிலோன் - மயில்வாகனத்தில் ஆரோகணித் தெழுந்தருளி வந்தருள் பாலிப்பவனே! வாழ்க வாழ்க வாழ்க - வாழக்கடவை, வாழக்கடவை, வாழக்கடவை; வடிவேல் - தேவரீர் திருக்கரத்தே பொலியும் கூர்மையுள்ள வேலாயுதமானது, வாழ்க வாழ்க வாழ்க - வாழக்கடவது, வாழக்கடவது, வாழக் கடவது, எ-று.

(வி-ரை.) வாழ்க என்பது வாழ்த்துதல் பொருளில் வந்த வியங்கோள் வினைமுற்று. முருகக் கடவுள் வாழின் இவ்வுலகம் வாழும், இவ்வுலகம் வாழின் தாமும் வாழலாம் என்னும் அவா மேலிட்டுக் கூறியதாம்.

"வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டி
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானு முன்னைப் பரவுவனே"
—திருவாசகம்

என்றபடி சர்வலோக கர்த்தாவுக்குச் சரணியனுக அமைந்தவன் வாழ்த்துக் கூறுவதும் பொருத்த முடையதாகலின், முருகப்பெரு மானுக்கும் அப்பெருமான் திருக்கரத்தில் வீற்றிருக்கின்ற பெருமை மிக்க சேமப்பெரு வேலுக்கும் வாழ்த்துக் கூறுமுகத்தான் 'மயிலோன் வாழ்க...வடிவேல் வாழ்க' என்ருர்.

" வென்றிபுனை யெஃகமது விஞ்சைதரு குன்றை
வன்றிறல்கொ டாரகனை வல்லையி லழித்தே
யொன்றுதிரல் வீரரை யெழுப்பியுயர் கங்கை
சென்றதனி லாடிபு திரும்பியதை யன்றே"

—கந்தபுராணச் சுருக்கம்

என்றபடி, தேவர்கள் துன்பத்தை யொழித்து அவர்களுக்கு இன்பத்தை யளித்தருளியதும், தர்மத்தை நிலைநாட்டிச் சாதுக்களைப் பரிபாலனஞ் செய்து வருவதற்குக் காரணமாக நிற்பதும் அம்முருகன் கைவேலே யாதலால் அதனையும் வாழ்த்தியவாறும். இதனாலேதான்,

" குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு
மன்றங் கமரரிடர் தீர்த்ததுவு—மின்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன் கைவேல்"

எனவும்,

" வீரவே ளூரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை"

எனவும் கூறினர். மேலும், வேலைவாழ்த்தும் விஷயங்கள் புறப்பொருளில் காணலாம். வாழ்க என்னும் அடுக்கு மகிழ்வின்கண் வந்தது. முருகக் கடவுளுக்கும் அவன் திருக்கை வேலுக்கும் வாழ்த்துக்கூறி யருளியதாம். (94)

வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

(ப-ரை.) மலைக்குரு - குறிஞ்சி நிலமாகிய மலையிலே தங்கியிருக்கின்ற பரமகுருவான முருகக்கடவுளே !, மலைக்குறமகளுடன்—(தேவரீர்) மலைகளிலே வாசஞ்செய்கின்ற வேடுவர்களின் வளர்ப்புப் புதல்வியாகிய வள்ளியம்மையாருடனே, வாழ்க வாழ்க வாழ்க

வாழ்க வாழ்க - வாழ்ந்திருக்கக்கடவை, வாழ்ந்திருக்கக்கடவை, வாழ்ந்திருக்கக்கடவை, வாழ்ந்திருக்கக்கடவை, வாழ்ந்திருக்கக் கடவை, எ - று.

(வி - ரை.) 'மலைக்குரு' என்பதை விளியாக்காமல் பரமாசாரியரான முருகப்பெருமான் எனினுமாம். அற்றேல், 'மலைக் குரு வாழ்க வாழ்க' எனவும் 'மலைக்குற மகளுடன் வாழ்க வாழ்க' எனவும் கூட்டிப் பொருளுரைக்க. 'மலைக்குரு' என்பது மலைக் குகைகளிலே தங்கியிருக்கின்ற சற்குரு எனப் பொருள்படும். திருப்பரங்குன்ற முதலிய மலைக்குகைகளில் திருக்கோயில் கொண்டனராதலின், 'மலைக்குரு' எனப்பட்டார். சிவபெருமானுக்கும் ஒரு காலத்தில் பிரணவப் பொருளைச் செவியறிவுறுத்தியவ ராதலின், 'குரு' என்னும் திருநாமம் ஏற்பட்டது. இதனை,

"மட்டவிழும்,
பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப,
முன்னம் பிரம மொழிந்தோனே" —கந்தர் கலிவெண்பா

"முற்றொருங் குணரு மாதி முதல்வகே ளுலக மெல்லாம்
பெற்றிடு மவட்கு நீமுன் பிறருண ராத வாற்றாற்
சொற்றதோ ரினைய மூலத் தொல்பொருள் யாருங் கேட்ப
விற்றென வியம்ப லாமோ மறையினு விசைப்ப தல்லால்"

"என்றலு நகைத்து மைந்த வெமக்கருண் மறையி னென்னாத்
தன்றிருச் செவியை நல்கச் சண்முகன் குடிலை யென்னும்
ஒன்றொரு பதத்தி னுண்மை யுரைத்தன னுரைத்தல் கேளா
நன்றருள் புரிந்தா னென்ப ஞானநா யகனு மண்ணல்"
—கந்தபுராணம்

"அந்தணனுக் கருள்புரிந்தே யறுமுகனைக் கவானிடைவைத்
துந்துகுடிலைப் பொருணீ யுரைத்தியென வுரைத்ததுகேட்
டெந்தைமகிழ்ந் தருங்கயிலை யெய்தினன் குறுமுனிக்குச்
சுந்தரமூ லப்பொருளைச் சொல்லினன் குமரேசன்"
—கந்தபுராணச் சுருக்கம்

என்பனவற்று ளன்றிக. பரம குருவாகிய முருகக்கடவுள் வள்ளி யம்மையாருடனே சேர்ந்து வாழ்ந்திருப்பாராக என்றதாம். (95)

வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க

(ப - ரை.) வாரணத்துவசம் - கோழிச் சேவற்கொடியானது, வாழ்க வாழ்க வாழ்க வாழ்க - வாழக்கடவது, வாழக்கடவது, வாழக்கடவது, வாழக்கடவது ; என் வறுமைகள் - அடியேனுடைய தரித்திரங்கள், நீங்க - நீங்குவனவாக, எ - று.

(வி - ரை.) வாரணம் என்பது கோழிச்சாதியின் பொதுப் பெயர், அஃது ஈண்டு கோழிச் சேவலை யுணர்த்திற்று. முருகக் கடவுளுக்குச் சேவற்கொடியும் மயில்வாகனம் போலவே மிகவும் முக்கியமானதால், 'வாரணத் துவசம்' என்றார்.

ஒரு வீரனது வெற்றிக்கும் புகழுக்கும் காரணமாக நிற்பது கொடியே யாகலால், சேவற்கொடியை வாழ்த்தினர். சூரபன் மனே முடிவில் முருகக் கடவுளுக்குச் சேவற் கொடியாக அமைந் தான் என்க. இதனை,

" மணிகிளர் வரைய தொன்று மரகதப் பிறங்க லொன்றும்
துணையடி சிறகர் பெற்றுச் சூற்புய லழிய வார்த்துத்
திணிசில விசும்பின் மாட்டே சென்றெனச் சேவ லோடு
பிணிமுக வுருவாய் வந்து பெருந்தகை முன்னம் புக்கான்.

அக்கண மெம்பி ரான்ற னருளினு லுணர்வு சான்ற
குக்குட வுருவை நோக்கிக் கடிதினீ கொடியே யாகி
மிக்குயர் நமது தேரின் மேவினை யார்த்தி யென்னத்
தக்கதே பணியி தென்னு வெழுந்தது தபித்து விண்மேல்.

செந்திறங் கெழீஇய குட்டுச் சேவலங் கொடியோன் றூகி
முன்னுற மனத்திற் செல்லு முரண்டரு தடந்தேர் மீப்போ
யந்தில வரைப்பி னண்ட மிடிபட விருமே றட்க
வன்னியம் பெருவ வார்த்து மற்றவ னுற்ற தன்றே"

எனவும், —கந்தபுராணம்

"போரவுணன்,
அங்கமிரு கூறு யடன்மயிலுஞ் சேவலுமாய்த்
தங்கமுட னார்த்தெழுந்து தோன்றுதலும்—அங்கவற்றுள்
சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்து மிளையோனே—மாறிவரு
சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே"

எனவும், —கந்தர் கலிவெண்பா

"ஆறுந்திய முடிகொண்டவ னதுகண்டசுரேச
னமராடி யிளைக்குஞ் செயலாலங் கவன்மீதே
யேறுஞ்செயல் போலப்பொலி நீலச்சிகிமேலே
யேறிக்கொடி தானுக விருஞ்சேவ லுயர்த்தான்"
—கந்தபுராணச் சுருக்கம்

எனவும் கூறியவற்ரு னறிக.

அன்றியும், யுத்தகாலத்தில் அக்கினி பகவானும் குமாரக் கடவுளுக்குச் சேவற்கொடியாக அமர்ந்திருந்தனன் எனக் கந்த புராணத்தா லறியலாம். "கொடிது கொடிது வறுமை கொடிது" என மிக வருத்தும் வாளாகலான் அவ் வறுமை அறவே அகன்றொழிய வேண்டுமென்பார், "வறுமைக ணீங்க" என்றார்.

சேவற் கோழியாகிய தேவரீர் கொடியானது வாழ்ந்திருப்ப தாக, அடியேன் தரித்திரம் ஒழிந்து போகும்படியாகத் தேவரீர் பெருமை என்றும் நிலைபெற்று வாழ்ந்திருப்பதாக என வாழ்த்திய தாம். எனவே, முருகப்பெருமானே! நின் சேவற்கொடியும் புகழும் வாழ்ந்து என் வறுமை ஒழிக என்றதாம். (96)

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்

(ப-ரை.) அடியேன் - தேவரீருக்கு அடிமைப்பட்டவனாகிய நான், எத்தனை குறைகள் - எவ்வளவு குற்றங்களை, செய்யினும்- செய்தாலும், எத்தனை எத்தனை எத்தனை பிழைகள் - எவ்வளவு எவ்வளவு எவ்வளவு தப்பிதங்களை, செயினும் - செய்தாலும், எ-று.

(வி-ரை.) இவ்வளவென்று அறுதியிட்டுச் சொல்ல முடியாதனவாகிய குறையான கன்மங்களையும், எவ்வளவு எவ்வளவு எவ்வளவு பிழையான காரியங்களையும் தேவரீருக்கு அடிமைப்பட்ட நான் இயற்றினாலும் எனத் தம் இழிவை வெளிப்படுத்தியதாம்.

எத்தனை குறைகள் எத்தனை எத்தனை பிழைகள், அடியேன் எத்தனை செய்தால் எனக்கூட்டிப் பொருளுரைக்கினும் அமையும். அடியேன் என்பதற்கு தேவரீருக்கு அடிமைப்பட்டவனாகிய அறிவிலியாகிய யான் என்றாவது, அடியவனும் நின் புதல்வனுமாகிய யான் என்றாவது பொருளுரைக்கலாம். (97)

பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே

(ப-ரை.) பெற்றவன் நீ-அடியேனைப் பெற்ற தந்தையும் நீயே; குருநீ-அடியேனுக்குக் குருவும் நீயே; குறமகள்-குறவர் குடியிலே வளர்ந்த வள்ளியம்மையாரே, பெற்றவள் பெற்றவளாம்-அடியேனைப் பெற்றெடுத்த தாயாருமாவாள், தாயாருமாவாள்; பொறுப்பது உன்கடன் -(ஆதலால்) பொறுத்தருளுவது தேவரீர் கடமையாகும், எ-று.

(வி-ரை.) நீ என்பது இரண்டிடத்திற்கும் கூறப்பட்டதும். பெற்றவன், குரு என்பவைகளில் உம்மைகள் தொக்கன.

முருகக்கடவுளே! தந்தையும் குருவும் நீரே யாகையாலும் வள்ளியம்மையார் தாயாராகையாலும், மைந்தனாகிய அடியேன் பிழைகளைப் பொறுத்தருளவேண்டுவது தேவரீர் கடமையேயாகும் என்றதாம். வள்ளியம்மையாரின் சிறப்பை நோக்கியே ஒரு முறைக்கு இருமுறை 'பெற்றவளாம்' என்றார். (98)

பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்

(ப-ரை.) பிள்ளை என்று-(மேலே கூறியபிரகாரம் அடியேன் தேவரீருக்குப் புத்திரனாக அமைந்தபடியினாலே தேவரீர்

அடியேனைக்) குமாரனென்றே கருதி, மைந்தன் என்மீது - புதல்வனாகிய அடியேன்மேல், உன்மனம் மகிழ்ந்து அருளி - தேவரீர் திருவுளம் மகிழ்ச்சி கொண்டருளி, அன்பாய் - அன்பாகி, பிரியம் - அடியேன் விரும்பி வேண்டுபவைகளை, அளித்து - கிருபையால் வழங்கி, எ - று.

(வி - ரை.) பிரியம் என்பது ஈண்டு வேண்டுபவைகளும் விரும்பப்படுவனவுமாகிய பொருள்களை உணர்த்திற்று; மைந்தன் என்பதில், மைந்து - பகுதி, மைந்து - வலிமை, அழகு. (99)

தஞ்சமென் றடியர் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

(ப - ரை.) கந்தர் சஷ்டி கவசம் - கந்தர் சஷ்டி கவசமாகிய இம் மந்திரத்தை, விரும்பிய - பக்தியோடு விரும்பிப் படித்தவர்களும், தஞ்சம் என்ற அடியர் - துணையென்று தேவரீரை வந்தடைந்தவர்களுமாகிய குகனடியார்கள், தழைத்திட - செழித்து வளரும்படியாக, அருள்செய்-கிருபை செய்யக்கடவாய், எ -று.

(வி - ரை.) என்ற அடியார் என்பது ஈண்டு அகரம் தொக்கு என்றடியவர் என வந்தது தொகுத்தல் விகாரம். முருகக்கடவுளே! கந்தர் சஷ்டி கவசமென்னும் இம் மந்திரத்தை பக்தியோடும் சிரத்தையோடும் ஆசாரத்தோடும் ஓதுபவராகிய குகனடியார்கள் செழித்தோங்குமாறு அருள் பாலிப்பாயாக என வேண்டிக் கோடலாம்.

கந்தர் சஷ்டி கவசம் என்பது கந்தரது சஷ்டி கவசம் என விரிந்து ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் மொழி. கந்தர் என்பதில் அர் - சிறப்பமைந்த மரியாதை விகுதி. இது, ஸ்கந்தர் என்னும் வடசொல்லின் திரிபு. (100)

பாலன் றேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்

(ப - ரை.) பாலன் - (முருகக் கடவுளுக்கும்) புதல்வனாகிய தேவராயன் - தேவராயனென்னும் பெயரினையுடைய அடியேன்,

பகர்ந்ததை - கூறிய இத் தோத்திரத்தை, நாளும் கருத்துடன் - தினந்தோறும் நல்ல வாழ்வு பெறுதல் வேண்டும் என்னும் எண்ணத்துடன், காலையில் மாலையில் - காலைப்பொழுதிலும் மாலைப் பொழுதிலும், எ - று.

(வி - ரை) அறிவின்மை அகலாதவன் எனத் தம்மை யிழிவு படுத்திக் கூறவே, 'பாலன்' என்றார். தேவரீர் அருமை பெருமைகளை அறியாத எளிய தேவராயன் எனத் தம்மை இழிவுபடுத்திக் கொண்டே, 'பாலன் தேவராயன்' என்றார். 'தேவராயன்' என்பதற்குத் தேவர் தலைவன் என்றுவது, பூதேவராகிய அந்தணர்களில் தலைவர் என்றுவது பொருளுரைக்கினு மமையும். (101)

ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்

(ப - ரை.) ஆசாரத்துடன் - ஒழுக்கத்துடனே, அங்கம் துலக்கி - தேகத்தைச் சுத்திசெய்துகொண்டு, நேசமுடன் - பிரியத்துடனே, ஒரு நினைவதுவாகி - ஒரே மனதாக, கந்தர் சஷ்டி கவசம் இதனை - கந்தர் சஷ்டி கவசமென்னும் இம்மந்திரத்தை, சிந்தை கலங்காது - மனம் கலங்காமல், தியானிப்பவர் - (நாடோறும்) சிந்திப்பவர்கள், எ - று.

(வி - ரை.) ஆசாரம் - ஒழுக்கம்; ஈண்டு நல்லொழுக்கம் என்பதாம். சைவாசாரம் மதாசாரம் குலாசாரம் மரபாசாரம் என வழக்கில் வருதலுங் காண்க.

ஆசாரம் - ஆசரித்தல், நடத்தல். நல்லொழுக்கங்களைக் கைக்கொண்டு நல்ல தண்ணீரால் ஸ்நானபானாதிகளை முறைப்படி செய்து சரீரத்தை சுத்திசெய்து கொண்டு முகத்தைத் துலக்கித் திருவெண்ணீறணிய வேண்டுமென்பார், 'ஆசாரத்துடன் அங்கம் துலக்கி' என்றார். சிந்தித்தலுக்குக் காரணமாயிருப்பது மனமாகலின் அது 'சிந்தை' எனப்பட்டது. ஐம்பொறிகளையும் ஐம்

புலன் போகும் வழியிலேயே போகவிடாமல் நிஷ்டையின்கண் நிறுத்த வேண்டுமென்பார் "நேச முடனொரு நினைவது வாகி" என்றார். எனவே நல்ல நியமத்துடனே கந்தர் சஷ்டி கவசத்தை மனங்கலங்காமல் நாடோறும் சிந்திப்பவர்கள் நன்மையடைவார்களென்பதாம். ஆகவே இக் கவசத்தைத் தியானம் புரியும் நெறியினை வகுத்தும் தொகுத்தும் சொல்லியதாமென்க. (102, 103)

ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய

(ப - ரை.) ஒருநாள் - ஒரு தினத்திற்கு, முப்பத்தாறு உருக் கொண்டு - முப்பத்தாறு உரு வீதம் மனத்துட்கொண்டு, ஓதி - சொல்லி, செபித்து - செபஞ் செய்து, உகந்து - சந்தோஷித்து, நீறு அணிய - விபூதியைத் தரித்து முருகக்கடவுளை வணங்கி வழிபாடியற்ற, எ - று.

(வி - ரை.) மந்திரத்தை ஒருமுறை ஜெபித்தலுக்கு ஓர் உரு என்று பெயர்; ஜெபித்தல் - உருவேற்றல். நாளொன்றுக்கு முப்பத்தாறு உரு ஜெபிக்கவேண்டுமென்று கூறியதாம். அவ்வாறு முப்பத்தாறு உரு ஜெபித்தால் பலன் அதிகமாமென வலியுறுத்தியதோடு இனிக் கீழேவரும் வரிகளால் அவ்வாறு முப்பத்தாறு உருக்கொண்டு ஜெபிப்பவர் பலன் அதிகமாம் என்றார். எனவே, முருகக்கடவுளை முப்பத்தாறுருக்கொண்டு ஜெபித்தால் கிடையாத பாக்கியத்தைக் கிட்டலாகுமெனக் கூறியதாம். 'முப்பத்தாறுரு' என்பதற்கு முப்பத்தாறு வகையான உருவத்தை மனத்திலே வைத்துக்கொண்டு எனப் பொருள் கூறினும் கூறலாம். என்னெனில், முருகப்பெருமான் திருவடிவங்கள் பல்வேறு வகையுடையனவா யிருந்தாலும் பீஜாக்ஷர ஸஹிதமான திருவடிவங்கள் முப்பத்தாறே எனக் கூறியிருக்கின்றமையால் அவ்வுருவங்களை ஜெபித்தல் என்பதாம். ஓதியே ஜெபித்து என்பதற்குப் பரமாசாரியன் உபதேசஞ் செய்தருளக் கேட்டுணர்ந்து எனினுமாம். (104)

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்

(ப-ரை.) அஷ்டதிக்கு - எட்டுத் திசைகளிலும், உள்ளோர் அடங்கலும் - இருப்பவர்களாகிய சமஸ்தமான ஜனங்களும், வசமாய் - கீழ்ப்படிதலாக, திசைமன்னர் - எட்டுத் திக்குகளையும் காவல்புரிகின்ற தலைவர்களாகிய, எண்மர் - எட்டுப் பேர்களும், செயலது அருளுவர் - தங்கள் தங்கள் கிருபையைப் பெருக்கி அருளுவார்கள், எ - று.

(வி-ரை.) அஷ்டம் - எட்டு. அஷ்டதிக்கு - கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்பன. எட்டுத் திக்குகளிலு முள்ளவர்களாகிய தேவர், மக்கள், அசுரர், மறையோர் முதலாக என்பதற்கு 'அஷ்டதிக்குள்ளோர்' என்றதாம். வசமாக என்பது வசமாய் எனத் திரிந்து வந்தது. வசமாதல் - தான் சொல்லியதைச் சொல்லியபடி செய்து, வணங்கி நிற்றல். திசா என்பது திசை யென்றாயிற்று, கலா - கலை, சிலா - சிலை என்பனபோல. திசா மன்னர் - திசைமன்னர், திக்குகளிலுள்ள மன்னர். எண்மர் - எட்டுப்பேர்; திசைமன்னர் எண்மர் - அஷ்டதிக்குப் பாலகர்; அஷ்டதிக்குப் பாலகராவர்: இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர்கள். இவர்கள் முறையே: கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு ஆகிய திசைகளுக்குத் தலைவராவர்.

முருகக்கடவுளது சஷ்டி கவசத்தைப் பக்தியோடு பஜித்து வணங்கும் விசேஷத்தினால் எட்டுத் திக்குகளிலும் உள்ளவர்களாகிய எல்லோரும் நமக்குக் கீழ்ப்படிந்தவர்களாவதுடன் அஷ்டதிக்குப் பாலகர்களும் தங்கள் திசைகளைக் காவல் புரியும் தங்கள் காவற் றொழிலை அருளுவர் என்றதாம். (105)

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மை யளித்திடும்

(ப - ரை.) மாற்றலர் எல்லாம் - பகைவர் எல்லோரும், வந்து வணங்குவர் - தாமேவந்து வணங்குவார்கள் ; நவகோள் - ஒன்பது கிரகங்களும், மகிழ்ந்து - சந்தோஷித்து, நன்மை அளித்திடும் - நலத்தைக் கொடுக்கும், எ - று.

(வி - ரை.) நவகோள் - சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது என்பன.

இந்தக் கந்தர் சஷ்டி கவச பாராயணத்தால் பகைவர்கள் தாமே வந்து தலைவணங்குவார்கள். நவக்கிரகங்களும் சந்தோஷமடைந்து இன்பங்களைக் கொடுக்கும் என்பதாம். நவக்கிரகங்கள் தங்கள் மாறுதல்களினாலேயே உயர்த்தியும் தாழ்த்தியும் நன்மை தீமைகளைக் கொடுப்பனவாக இருந்தாலும், அவைகளும் கந்தர் சஷ்டி கவசமாகிய இம் மந்திரத்தைப் பாராயணம் புரிவதால் அவைகள் தங்களுக்கு உள்ள பலங்குறைந்து போவதோடல்லாமல் அவைகள் பாராயணம் செய்பவர்மேல் மிக்க சந்தோஷமடைந்து எல்லாவிதமான இன்பங்களையும் குறைவற அளிக்கும் என்பார் 'நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்' என்றார். (106)

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்

(ப - ரை.) நவம் - புதுமையாகிய, மதன் எனவும் - மன்மதன் என்று சொல்லும்படிக்கும், நல்லெழில் - நல்ல அழகை, பெறுவர் - அடைவர், எந்த நாளும் - எந்த தினத்திலும், ஈரெட்டா - பதினாறாக, வாழ்வர் - நிலைபெற்று வாழ்வார்கள், எ . று.

(வி - ரை.) நவமதன் - புதிய மன்மதன்; பழைய மன்மதனையும் தோற்கச் செய்யும் பேரழகுடையவனாகத் தோற்றுதல். எக்காலத்திலும் மார்க்கண்டேயரைப் போல என்றும் பதினாறு வயதாகவே பாலகுமாரனாகவே விளங்குவர் என்பார் 'எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்' என்றார், எனவே வாலப்பருவம்

என்றும் ரீங்காவளமையொடு பொலிந்திருப்பர் என்பது பெற்றும். ஈர் எட்டு - இரண்டாகிய எட்டு. பண்புத் தொகை. 'ஈரெட்டா வாழ்வர்' என்பதற்குப் பதினறு மக்கட்பேருகிய செல்வமுண் டாக வாழ்வார்கள் எனப் பொருளியம்பினும் அமையும். (107)

கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்

(ப - ரை.) கந்தர் - கந்தசுவாமியாருடைய, கைவேலாம் திருக்கரத்திலே விளங்கும் வேலாகிய, கவசத்து - இக்கவசத்தின், அடியை - ஓரடியை, வழியாய் - முறைமையாக, காண - கண்ணல் கண்டு படித்துவர, மெய்யாய் - உண்மை மார்க்கமானது உண்டாகி, விளங்கும் - பிரகாசிக்கும், எ - று.

(வி - ரை.) கந்தசுவாமியாருடைய திருக்கரத்திலிருக்கின்ற வேலாயுதத்தைப்போலப் பகையைப் போக்கி இனிமை இயற்றத் தக்கதான தன்மை உள்ளது இந்த உடற்காப்பு மந்திரமாகிய கந்தர் சஷ்டி கவச மென்பார் 'கந்தர் கைவேலாங் கவசம்' என் ருர். இந்தக் கவசத்தின் ஓரடியினை அருத்த ஞானத்துடனே அறியவேண்டிய ஒழுங்குப்படி கண்ணுற் பார்த்துப் படித்துவர வேண்டுமென்பார். 'கவசத்தடியை வழியாய்க் காண' என்ருர் அவ்வாறு படித்துணர்பவர்களுக்கு அவர்கள் மனத்திலே உண்மை மார்க்கமானது உண்டாகி அதனல் ஞானவழி யேற்பட்டுப் பிரகா சிக்கும் என்பார் 'வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்' என்ருர். 'கந்தர்கை வேலாம் கவசம்' எனவே, கைவேல் செய்யும் காரியத் தைக் கவசம் செய்யும் என்றதாம்.

முருகக் கடவுள் திருக்கைவேலை யொப்ப இந்தக் கவசமும் துணைசெய்யும் என்றதாம். (108)

விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்

(ப - ரை.) விழியால் காண - கண்களால் பார்த்தவுடனே, பேய்கள் வெருண்டிடும் - பேய்கள் பயந்தோடும்; பொல்லாதவரை,

கெட்டவர்களை, பொடி பொடி ஆக்கும்-பொடிப் பொடியாகச் செய்யும், எ - று.

(வி - ரை.) இக் கவச மந்திரத்தை யோதியுணர்ந்த குகன் அடியார்களின் திருக்கண் பார்வையினாலேயே, பிறருக்குப் பயத்தைக் கொடுக்கும் பைசாசாதிகள் பயந்தோடிவிடும்; நாளும் நன்மையைச் செய்ய நினையாமல் தீமையினையே செய்வதற்கு நினைக்கும் பொல்லாதவர்களான தீயோர்களும் அழிந்து நாசமாய் போய்விடுவர் என்பதாம். எனவே, இக் கவச பாராயணம் செய்வோருக்குப் பேய்களும் பகைவருமில்லை என்பதாம். (109)

நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

(ப - ரை.) நல்லோர் நினைவில் - நல்லவர்களுடைய எண்ணத்திலே, நடனம்புரியும் - நர்த்தனம் செய்யும், சர்வ சத்துரு சங்காரத்து - எல்லாப் பகைவர்களையும் கொன்று குவிப்பதாகிய, அடி - திருவடியாகும், எ - று.

(வி - ரை.) எவருக்குமே எக் காலத்திலுமே தீமையை மனத்தில் நினையாமலும் செய்யாமலும் பரிசுத்தமான மனத்தை யுடையவர்களாகிய பெரியோர்களையும் தெய்வ வழிபாட்டில் சிறந்தவர்களையுமே ஈண்டு 'நல்லோர்' என்றார். நினைவு-எண்ணம்.

" பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே " —நன்னூல்

என்ற விதிப்படி நல்லார் என்பது நல்லோர் என வந்தது. நல்லவர்கள் இருதய கமலத்தில் எப்போதும் நிலைபெற்றிருந்து கொண்டு ஆனந்த நர்த்தனம் செய்துகொண்டு சதா சர்வகாலமும் வீற்றிருந் தருளுவ னென்பது குறிக்கவே 'நல்லோர் நினைவில் நடனம் புரியும்' என்றார். எனவே முருகக்கடவுளது திருவடியானது நல்லவர்களின் இருதய கமலங்களில் எப்போதும் குடியிருக்கு மென்பதும், எல்லாப் பகைவர்களையும் கொன்று குவிப்பதாக உள்ளது என்பதும் கூறியதாம். இதனால் இறைவனடியானது துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யும் தன்மை யுடை

தெனக் கூறியதாம். அன்றியும் நல்லோர் தாங்கள் தியானிப் பதன் மூலம் இறைவன் இடையருமல் அவர்கள் உள்ளத்தில் நீக்கமற நிறைந்திருப்ப னெனக் குறிக்கவே, 'நல்லோர் நினைவில் நடனம் புரியும்' என்ருர் எனினுமாம். (110)

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்

(ப - ரை.) எனது உள்ளம் - அடியேனுடைய மனமானது, அறிந்து - தெரிந்து, அஷ்டலட்சுமிகளில் - எட்டு வகையான லட்சுமிகளிலே, வீரலட்சுமிக்கு - யுத்தத்திலே வீரத்தையும் வெற்றி யையும் உண்டாக்கும் வீரலட்சுமிக்கு, விருந்து - புதிய, உணவாக - உணவாகும்படி,, எ - று.

(வி - ரை.) யுத்தத்தில் பகைவரை நாசம் செய்யத்தக்க வீரம் நெஞ்சிலுண்டானு லொழிய வெற்றியடைய முடியாது. அவ்வெற்றியாலே வேண்டுவனவாகிய செல்வங்களைப் பிறரிட மிருந்து பெற முடியுமாதலால், எட்டுவிதமான இலக்குமிகளிலே முதன்மை பெற்றவளாகிய வீரத்தையும் வெற்றியையும் உண்டாக் குபவளாகிய வீரலக்ஷ்மியின் கிருபை யுண்டாகு மென்பதாம்.

"விருந்து தானே புதுமையது கிளத்தல்"—தொல்காப்பியம் என்ற சூத்திர விதிப்படி 'விருந்து' என்பதற்குப் புதிதாக வந்த வர்க ளென்றதாம். எனவே விருந்து என்பதற்குப் புதுமை எனப் பொருள் கொள்ளப்பட்டது. அஷ்டலட்சுமிகளாவார்: கீர்த்தி லட்சுமி, சௌரியலட்சுமி, தனலட்சுமி, தானியலட்சுமி, தைரியலட்சுமி, விஜயலட்சுமி, வித்தியாலட்சுமி, வீரலட்சுமி என்பவர்களாம். அஷ்ட ஐசுவரியங்களையும் கொடுக்கக் காரண மாகிய வீரலட்சுமியின் பரிபூரண கடாக்ஷத்தையும் இக் கவசம் தரும் என்பதாம். (111)

சூரபத் மாவைத் துணித்தகை யதனுல்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த

(ப - ரை.) சூரபத்மாவை - சூரபதுமன் என்னும் அசுரனை, துணித்த - வெட்டித் துண்டுபடுத்திய, கையதனுல் - கையால்,

இருபத்தேழ்வர்க்கு - இருபத்தேழு பேருக்கு, உவந்து - சந்தோஷித்து, அமுது அளித்த - அமுதத்தைக் கொடுத்தருளிய, எ - று.

(வி - ரை.) மகா மாயாவியாகிய சூரபதுமாசூரன் என்னும் அசுரனைத் தமது திருக்கரத்தாலே கொன்றனராகலின் 'சூரபத்மாவைத் துணித்த கையதனால்' என்றார். இதனை,

" கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
துளைத்துப் புறப்பட்ட வேற்கந்த னேயறந் தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங் கண்ணூர்க்
கிளைத்துத் தவிக்கின்ற வென்னை யென்நாள்வந் திரட்சிப்பையே "
—கந்தரலங்காரம்

என்பதனாலறிக.

முருகக் கடவுள் கிருத்திகை மாதர்கள் அறுவர் முலைப்பால் தா உவந்து உண்டு வளர்ந்தருளுகின்ற பொழுது, சிவபெருமான் உமாதேவியாரோடும் முருகக்கடவுளை ரிஷபவாகனத்தில் வைத்துக்கொள்ளவும் சிவபெருமான் திருமுன்னே கார்த்திகைப் பெண்கள் வணங்கிநிற்க, சிவபெருமான், 'எமது புதல்வனாகிய கந்தவேளை நீவிர் முலைப்பால் கொடுத்துப் பாதுகாத்தமையால் உங்கள் மைந்தன் என்னும் பொருள்பட கார்த்திகேய னென்னும் நாமம் இவனுக்கு வழங்கக்கடவது; உங்களுக்குரிய கார்த்திகைத் தினத்தில் இம்முருகன் திருவடிகளை வழிபடுவோர்களுக்குத் தீவினைகள் தொலைந்து முத்தியையும் கொடுத்தருளுவோம்" என்றார். இதனை,

" கந்தன் றனைநீர் போற்றிய கடனா லிவனுங்கண்
மைந்த னெனும் பெய ராகுக மகிழ்வா லெவரேனு
நுந்தம் பகலிடை யின்னவ னேன்றுள் வழிபடுவோர்
தந்தங் குறைமுடித் தேபரந் தனைநல் குவமென்றார் "

என்பதனாலறிக. —கந்தபுராணம்

இப்படிப்பட்ட கிருத்திகை மாதர்கள் அறுவர் பாலை உண்டதைச் சொல்லப் போந்தவர், இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் கூட்டிச் சொல்லினர். இவ்வாறு சொல்லியது கூட்டிப் பிரித்தல் என்னும் மதம்பற்றி என்க.

க்ஷத்திரங்களெல்லாம் பெண்பால்களாம். இருபத்தேழு க்ஷத்திரங்களுக்கும் சந்தோஷத்தாலே அமிர்தமருளியவ ரென்பார். 'இருபத்தேழ்வர்க் குவந்தமுதளித்த' என்றார். எனவே முருகப் பெம்மான் கிருத்திகை மாதர் அறுவர் திருமுலைப்பால் தாவும் உவப்புடன் உண்டு வளர்ந்தருளினர் என்றதாம். (112)

குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி

(ப - ரை.) குரு - சிவபிரானுக்கும் உபதேசம் செய்த ஆசாரியனும், பரன் - மோக்ஷத்தைக் கொடுக்கும் கடவுளும், பழநிக் குன்றினில் - பழநி என்னும் பெயருடைய திருமலையிலே, இருக்கும் - திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும், சின்னக் குழந்தை - சிறுபிள்ளை வடிவமுள்ளவனாகிய முருகக்கடவுளின், சேவடி - சிவந்த திருவடிகளுக்கு, போற்றி - நமஸ்காரம், எ - று.

(வி - ரை.) சிவபெருமான் தமது தொடையின்மீது வைத்துக்கொண்டு, 'பிரமன் அறியாப் பிரணவத்தின் பொருளை எமக்கு நீ கூறவேண்டும்' என்றருளிச் செய்ய, அறுமுகக் கடவுள் சிவபிரானை நோக்கி, 'எந்தையே! தேவரீர் என தம்மையாருக்கு அயலறியா வண்ணமருளிய மூலப்பொருளை யாவரும் கேட்கும்படியாக இயம்பலாமோ?' என்று கூற, அதற்குச் சிவபெருமான் நகைத்து, 'மைந்த! எமக்கு மறைவாகவே உரைக்கக் கடவை' யென்று திருச்செவியைச் சாய்க்க, முருகவேள் குடிலையின் உண்மைப் பொருளை அருளிச் செய்தனர். இதனை,

'மூற்றொருங் குணரு மாதி முதல்வகே ளுலக மெல்லாம்
பெற்றிடு மவட்கு நீமுன் பிறருண ராத வாற்றாற்
சொற்றதோ ரினைய மூலத் தொல்பொருள் யாருங் கேட்ப
விற்றென வியம்ப லாமோ மறையினு விசைப்ப தல்லால்.

"என்றலு நகைத்து மைந்த வெமக்கருண் மறையி னென்னாத்
தன்திருச் செவியை நல்கச் சண்முகன் குடிலை யென்னும்
ஒன்றொரு பதத்தி னுண்மை புரைத்தன னுரைத்தல் கேளா
நன்றருள் புரிந்தா னென்ப ஞானநா யகனு மண்ணல்"

எனவும்; —கந்தபுராணம்

" மட்டவிழும்,
பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே "
—கந்தர் கலிவெண்பா

எனவும் வருவதனாலறிக.

முருகக் கடவுள் அயனைச் சிறைப்படுத்திய காலத்தில் சிவபெருமான் கேட்டுக் கொண்டபடி அவருடைய திருச்செவியில் பிரணவப் பொருளை யுரைத்தருளிய காரணம்பற்றியே அம்முருகக் கடவுளை குரு என்றும், சுவாமிநாதனென்றும், தகப்பன்சாமியென்றும் கூறுவர். பாமரர் தறுதலைப்பிள்ளை யென்றும் கூறுவர். இச்சரித்திர விரிவைக் கந்தபுராணத்துள் அயனைச் சிறைபுரி படலத்தும், அயனைச் சிறைநீக்கு படலத்தும் காண்க. சிவபெருமான் முருகக் கடவுளிடம் பிரணவப் பொருள் கேட்டருளின மூர்த்தத்தை அஷ்டாட்ட லீலைகளுள் கடைசி மூர்த்தமாக சிஷ்யபால மூர்த்தி என்னும் பெயரால் அழைப்பர். பரன் - உயர்ந்தவன். கடவுளரில் மோக்ஷத்தைக் கொடுக்கும் கடவுளாகலின் 'பரன்' என்றதாம்.

" முக்கட் பரமற்குச் சுருதியின் முற்பட்டது
கற்பித் திருவரும் "
—திருப்புகழ்

என்பது ஈண்டு நோக்கத்தக்கது. குருபரன் - மேலான ஆசிரியன் எனினுமாம். பாலசுப்பிரமணியரெனப் பெயர்பூண்ட முருகக் கடவுளாகலின் 'சின்ன குழந்தை' என்றார்.

செம்மை + அடி = சேவடி, இது பண்புத்தொகை. குருபரன் - மேலான ஆசிரியன். 'பழநிப்பதிவாழ் பாலகுமாரா' என இந்நூலாசிரியர் முன்னே கூறியதும் காண்க. (113)

எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி

(ப - ரை.) எனை - அடியேனை, தடுத்து - தடைப்படுத்தி, ஆட்கொள - அடிமையாக்கிக் கொள்ள, என்றனது உள்ளம் - அடியேனது மனத்தில், மேவிய - வந்தடைந்த, வடிவு உறும் -

உருவத்தோடு வருகின்ற, வேலவ - வேலாயுதனே! போற்றி - தேவரீருக்கு நமஸ்காரம், எ - று.

(வி. ரை.) உலகத்திலே பல கெடுதலான வழிகளிலே சென்று உழலும் அடியேனை அவ்வாறே அக் கெடுதலான வழி களிலே செல்லாதபடி தடைசெய்து அடிமையாகக் கொண்டு ஆண்டருளி அடியேன் மனத்தில் வேலவன் வந்தடைய வேண்டு மென்றும், அவ்வாறே வேலவன் மனத்தில் வந்து புகுந்த மாத்தி ரத்தில் அக்கெடுதலான வழிகளினின்றும் விட்டு நீங்கித் தான் நல்ல வழியில் திரும்புவது திண்ணமா மென்பார், 'எனைத்தடுத் தாட் கொள என்றன துள்ளம் மேவிய வேலவ' என்றார். தடுத் தாட் கொளல் - பாவகிருத்தியங்களைச் செய்யவொட்டாதபடி ஆன்மாக்களை அடிமையாகக்கொண்டு ஆண்டருளுதலும் தன்னடி யார் குழாத்தில் சேர்த்துக் கொள்ளுதலுமாம். என்னை என்பது எனை என வந்தது, செய்யுள்விகாரம்: இடைக்குறை, தன்னை என் பது தனை என வருதல் போலாம். கொள என்பதும் இடைக் குறை. மேவிய என்பதற்கு விரும்பிய எனினுமாம். வடிவு உறும் என்பதற்கு அழகிய பொருந்திய எனினுமாம்.

முருகக் கடவுள் சர்வசக்தி யுடையவர் என்பது குறிக்கவே, 'உள்ளம் மேவிய வடிவுறும்' என்றார். (114)

தேவர்கள் சேனு பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

(ப - ரை.) தேவர்கள் - அமரர்களுடைய, சேனுபதியே - சேனைகளுக்குத் தலைவனே!, போற்றி - தேவரீருக்கு நமஸ்காரம், குறமகள் - வேடுவர் வளர்ப்புப் புதல்வியாகிய வள்ளியம்மையாரின், மனமகிழ் - மனம் சந்தோஷிக்கும்படியான, கோவே - ஆண்மகனே, போற்றி - தேவரீருக்கு நமஸ்காரம், எ - று.

(வி - ரை.) தேவர்களினது வேண்டுகோட் கிணங்கிப் பூத கணங்கள் முதலியோர்க்கெல்லாம் தலைமை தாங்கிச் சூரபத்மன் முதலியோர்களை யெல்லாம் யுத்தத்தில் அவர்களைப் பூண்டில்லா

படி சீர்மூலமாகித் தேவசேனுபதி எனப் பெயர் வகித்தாராக லின், 'தேவர்கள் சேனுபதியே' என்ருர். தேவசேனுபதி என் னும் இத்திருநாமம் தேவர்களைச் சிறையிலிட்ட அசுரர்களான சூரபத்மன் ஆகியோரை நாசம் செய்யும்படியாக யுத்தத்திற்குச் சென்றபோது எற்ற திருநாம மாகையால், அதையே இவ்வாசிரியர் வைத்து விளித்தமைக்குக் காரணம், தமக்குள்ள உட்பகை புறப் பகைகளைக் களைய வல்லவர்கள் யாவருமேயில்லை யென்றும் அவ்வாறே தமது உட்பகை புறப்பகைகளைக் களையவல்லவர்கள் முருகப்பிரானே எனத்தாமுணர்ந்து, அடியேனுடைய உட்பகை புறப்பகைகளையும் களைபவனே என்பார் 'தேவர்கள் சேனு பதியே' என்ருர் எனினுமாம்

தெய்வயானை அம்மையாரும் வள்ளியம்மையாரும் முருகக் கடவுளுக்கு இச்சாகிரியா சத்திகளாயினும், அவர்களுள் வள்ளி யம்மையார் இச்சாசத்தி வடிவத்துடன் அமைந்து அவர் மனத் திற்கு இன்பத்தை யளித்து ஆன்மகோடிகளின் ரக்ஷிப்பிற்குக் காரணமாக இருக்கின்ற காரணத்தாலே, 'குறமகள் கோவே' என்ருர். கோ - தலைவன், அரசன் என்னும் பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல். கோ என்பது கோன் என னகரச் சாரியை பெற்று வரும். என்னை? இதனை,

"ஆமா கோனவ் வணையவும் பெறுமே" —நன்னூல்

என்பதாலறிக.

குறவர் என்ற வேடுவர் மனை புகுந்து வளர்ந்து வந்தவளான வள்ளியம்மையாரின் உள்ளம் உவப் பெய்தத் தகுந்த அழகும் குணமும் வாய்ந்த தலைவனே, அரசனே, ஆண்மகனே என்பார் 'குறமகள் மனமகிழ் கோவே' என்ருர்.

முருகக் கடவுள் சூரசம்மாரம் செய்யத் திருவவதாரம் செய்து திருவிளையாட்டுப் புரிந்துகொண்டிருக்கும் காலத்தில் தேவர்கள் அவருடைய சொரூபத்தை யறியாமல் அவருடன் போர்செய்து தோற்றுப் போயினர். அப்போது சுப்பிரமணியக் கடவுள் அவர் களை நோக்கி, முன்பு நம்மைச் சிறுபிள்ளை என்று எண்ணி என்

னுடன் சண்டை செய்தீர்கள். இப்போது நம்முடைய பரிசுத்த முள்ள வல்லமையைப் பாருங்களென்று பழைய உலகங்கள், அண்டங்கள், அவைகளிலிருக்கும் உயிரானவைக ளெல்லாம் தம் முடைய திருமேனியல்லாது வேறில்லையாக நேயமுள்ள ஒரு விசுவ ரூபங்கொண்டு நின்றார். அவருடைய விசுவரூபத்தையும் உணர்ந்து அவர் திருவடிகளுக்கு வணக்கம் புரிந்து, அவர்களுக்குத் தாங்கள் சேனைகளாகி, அவரைத் தங்கள் சேனாதிபதியாக்கிக் கொண்டனர் என்பதாம். இதனை,

" சேயெனமுன் பெனைக்கருதிச் செருப்புரிந்தீ ரினியெமது
தூயவிறல் காணுமெனத் தொல்லுலக மண்டமுயி
ராயவெலாந் தனதுருவே யல்லால்வே றில்லையென
நேயவொரு வடிவு கொடு நின்றனெம் பெருமானே "
—கந்தபுராணச் சுருக்கம்

" எண்டிசையு மீரேழு திறத்துலகு மெற்கிரியு மேழு கடலுந்
தெண்டிரையு நேமிவரையும் பிறவும் வேறுதிரி பாகியுளசீர்
அண்டநிரையானளவு மனைத்துயிரு மெய்ப்பொருளு மாகியயனும்
விண்டுமரு ஞஞ்செறியவேருருவு கொண்டனன் விறற்குமரனே.

" மண்ணளவு பாதல.மெலாஞ் சரணமாதிர வரைப்பு மிகுதோள்
விண்ணளவெ லாமுடிகள் பேரொளியெ லாநயன மெய்ந்நடு
வெலாம்
பண்ணளவு வேதமணி வாயுணர்வெ லாஞ்செவிகள் பக்கமயன்மா
எண்ணளவு சிந்தவுமையைத் தொழிலு நல்கியரு ளீசனுயிரே. [ல்

" ஆனகாலை யமரர்கள் வாசவன்
ஞான நாயக நாங்க ளுனக்கொரு
தானை யாதுந் தலைவனை நீயென
வான நீத்தத்து மஞ்சன மாட்டினர் "— கந்தபுராணம்
என்பனவற்றாலறிக.

இத்தியாதி காரணங்களால் 'தேவர்கள் சேனாபதியே' என்றார்.

தேவசேனாபதியான முருகனே நமஸ்காரம், வள்ளி மண மகிழ வந்தருள் மன்னனே நமஸ்காரம் என்பதாம். (115)

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி

(ப - ரை.) திறமிகு - வலிமை மிக்க, திவ்விய - இனிமையான, தேகா - தேகமுடையவனே!, போற்றி - நமஸ்காரம், இடும்பு - துன்பத்தைச் செய்கின்ற, ஆயுதனே - வேலாயுதத்தை யுடையவனே!, இடும்பா - பகைவர் முன்னே காட்டும் செருக்கை யுடையவனே!, போற்றி - நமஸ்காரம், எ - று.

(வி - ரை.) இடிம்பு - துன்பம், செருக்கு என்னும் பல் பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல். இடும்பாயுதம் என்பதற்குத் துன்பத்தைச் செய்யும் ஆயுதம் என்ருவது, துன்பத்தைத் தடைக்கும் ஆயுதம் என்ருவது கூறலாம் செருக்கை உடையவன் இடும்பன்.

இடும்பாயுதம் - ஈண்டு வேலாயுதம். இடும்பா என்பதற்குப் பகைவர் முன்னே காட்டும் செருக்கை யுடையவனே என்ருவது; இடும்பா சூரனைக் கொன்றவனே என்ருவது பொருள் கூறலாம்.

வல்லமை மிகுந்த கண்ணையும் கவரும்படியான காந்தியோடு கூடிய தேக காந்தியுடையவனுகலின், 'திவ்ய தேகா' என்ருர்.

முருகக் கடவுள் மன்மதனுே டொத்துப் பிரகாசிக்கும்படியான பேரழகும் பேரொளியும் உடைமையாகக் கொண்டு விளங்குகின்ரு னென்பார் 'திவ்ய தேகா' என்ருர். எனவே தேகா இடும்பாயுதனே! இடும்பா! தேவரீருக்கு நமஸ்காரம், என்றதாம்.

கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சியே புனையும் வேளே போற்றி

(ப - ரை.) கடம்பா - கடப்பமலர் மாலையைத் தரித்தவனே போற்றி - தேவரீருக்கு நமஸ்காரம்; கந்தா - கந்தனே!, போற்றி - தேவரீருக்கு நமஸ்காரம்: வெட்சி - வெட்சிப் பூமாலையை, புனையும் - தரித்துக்கொண்டு விளங்கும், வேளே - குமரனே!, போற்றி - தேவரீருக்கு நமஸ்காரம், எ - று.

(வி - ரை.) கடம்பா என்பதற்குக் கடம்பவனத் துறையும் கடம்பவனத்தானே எனினுமாம். ஆறுவகையான வடிவம் ஒருரு வினதாக அமைந்த கந்தனே என்பார், 'கந்தா' என்றார். வெட்சி என்பது ஒருவகைப் பூ; இதனால் தொடுக்கப்பட்ட மாலையை யுத்த முனையிலே பகைவர்களைப் பகைவர் நிரையை வென்றவர் தம் வீரம் விளங்கவே சூட்டிக்கொள்வது இயல்பும் புறப்பொருளிலக்கணமு மாம். இந்த வெட்சிப் பூ மாலை முருகக் கடவுளுக்கு மிகவும் உகந் தது. ஆகவே, 'வெட்சியே புனையும்' என்றார்.

" இருள்படப் பொதுளிய பாரரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்"

எனவும்,

" காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்"
—திருமுருகாற்றுப்படை

என்ற வரிகளில் கடம்பு முருகக் கடவுளுக்கு இடம் என்று சொல் லினர்.

"கடம்பமர் நெடுவேள்", "கடம்பமர்ந்து", "கடம்ப மரணி யிலே", "செல்வக் கடம்பமர்ந்தான்", "கடம்பமர்மன்றற் றொங் கல் கந்தனை" எனவும், "கடியார் கடப்பமலர்", "மலர்ந்த கரு ணைப் பொருந்தே கற்பகமே" எனவும் வருபவைகளினால் கடம்ப மலரின் விசேஷம் கூறப்பட்டுள்ளபடியால் முருகப் பெருமானுக்கு மிகப் பிரியமான புஷ்பமாகக் கடம்பமலர் விளங்குவதால் இவரும், 'கடம்பா' என்றார்.

வேள் என்பதற்கு வேட்கை யுண்டாக்குபவன் என்பது பொருள். எனவே வேள் என்பது முருகக் கடவுளையும் மன்மத னையும் குறிக்கும் பொதுப்பெயர். ஆதலின் அப்பெயரின் முன் அடைமொழி தந்து வழங்கின், இருவரிலொருவரென்று உணர்ந்து கொள்ளலாம். மன்மதனைக் குறிக்க 'கொடுஞ்சிலை மதனவேள்' என அடைகொடுத்துக் கூறுவர். முருகக் கடவுளைக் குறிக்க

செவ்வேள், செக்கர்வேல், கந்தவேள் குமரவேள் என அடை கொடுத்துக் கூறுவர். இளமையும் அழகும் பற்றி முருகனும் மன் மதனும் வேள் எனப்படுகின்றனர்.

ஆயின் ஈண்டு வேளே என அடைமொழி கூருது வாளா கூறினமையின் வேளே என்பதற்குக் குமரனே எனப் பொரு ளுரைத்தாம். இனி 'வேளே' என்பதற்கு மன்மதனே டொப்ப வனே எனப் பொருள் கூறுவாருமுளர். அப்பொருள் அத்துணைச் சிறப்புடைத்தன்று. ஸ்கந்தம் என்னும் வடமொழி கந்தம் என்ரு விற்று.

போற்றி என்பதை வியங்கோள் வினை முற்ருகக் கொண்டா லும் கொள்ளலாம். அப்படி வியங்கோளாகக்கொண்டு ஆளக் கடவாயாக எனப் பொருளுரைக்கினும் பொருந்தும். போற்று- பகுதி, இ-வியங்கோள் விகுதி. அற்ருயின் போற்றுதல் என்ப தற்கு ஆளுதல் என்பது பொருள். கடம்பா, கந்தா, வேளே என முருகப் பெருமானை விளி முகத்தான் அழைத்து வணக்கம் கூறிய தாம். விளிகள் மூன்றும் சேய்மைவிளி. (117)

உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்

(ப-ரை.) உயர்-உயர்ந்த, கிரி-கந்தகிரியின்மேற் பொருந் திய, கனகம்-பொன்னாலான, சபை-சபாமண்டபத்திற்கு, ஓர் - ஒப்பற்ற, அரசே-அரசனே!, மயில்-மயில் வாகனத்தின் மேல் ஆரோகணித்து, நடம்-நர்த்தனம், இடுவோய்-செய்பவனே!, (தேவரீருடைய) மலர் அடி-தாமரை மலர்போன்ற திருவடிகள், சரணம்-அடியேனுக்குப் புகலிடமாகும், எ-று.

(வி ரை.) உயர்கிரி-வினைத்தொகை. என்னை?

"காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" —நன்னூல்

என்பது சூத்திரமாகலின். கிரி என்றது ஈண்டு கந்தகிரியை. இக் கந்தகிரியே கந்தப்பெருமான் ஆதியில் திருக்கோயில் கொண் டெழுந்தருளிய இடமாதலால் இந்த இடம் அவருக்கு முக்கிய

இடமாகும். இதிலிருக்கும் திருக்கோயிலோ என்றால், தெய்வத் தச்சனாகிய விசுவகர்மனைக் கொண்டு தேவேந்திரனால் அமைக்கப் பட்டது. உலகத்திலுள்ள ஏனைய அரசர்களைப் போலல்லாமல் சேதனவர்க்கங்களுக்கு உண்டாகும் கஷ்ட நஷ்டங்களையும் போக் கும் திறமை மிகுந்த கடவுளாதலால், 'ஓர் அரசே' என்றார்.

உயர்ந்த கந்தகிரியிலேயுள்ள பொன்னாற் செய்யப்பட்ட சபை யினுக்கு ஒப்பற்ற வேந்தனே என்பார், 'உயர்கிரி கனகசபைக் கோரரசே' என்றார். மயில்வாகனத்தி லாரோகணித்து நர்த்தனம் புரிபவனே என்பார், 'மயில் நடமிடுவோய்' என்றார். அடியேனுக்குத் தேவரீருடைய தாமரை மலர்போன்ற திருவடிகளைத் தவிர வேறு அடைக்கலம் இல்லையாகலின், தேவரீர் திருவடிகளே அடியேனுக் குப் புகலிடம் என்பார், 'மலரடி சரணம்' என்றார்.

மலர் அடி - உவமைத் தொகை.

இனி, 'மயில் நடமிடுவோய்' என்பதற்குத் தாங் கற்றுள்ள திரு நடனத்தைத் தாம் ஆரோகணித்திருக்கும் மயில்வாகனத்திற்கும் கற்றுக்கொடுத்தருளிய முருகக் கடவுளே எனக் கூறினுமாம்.

'உயர்கிரி கனக சபைக்கோ ரரசே' என்றதற்குப் பொன்னம் பலத்திற்கு ஒப்பற்ற அரசனே என்றதுமாம்

"பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே" —நன்னூல்

என்ற விதிப்படி இடுவாய் என்பது இடுவோய் என ஆகாரம் ஓகார மாக மாறிற்று. இது செய்யுள் விகாரம்.

அரசு - பொருளால் உயர்திணையாயினும் உருவில் அஃறிணை போற் றோன்றுவது. (118)

சரணஞ் சரணம் சரஹண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

(ப - ரை.) சரஹணபவஓம் - ஓம் சரஹணபவ என்னும் சடாக்ஷரரூபமாகிய, சண்முகா - ஆறு திருமுகங்களையுடைய கட

வுளே !, சரணம் சரணம் சரணம் சரணம் - தேவரீருக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம், எ - று.

(வி - ரை.) சரஹணபவஓம் என்பதை சரஹணபவ எனவும் ஓம் எனவும் இரண்டாகப் பிரித்து, ஓம் என்பதற்குப் பிரணவப் பொருளானவனே எனவும் பொருள் கூறலாம்.

நாணற்காடாகிய சரஹணப் பொய்கையில் அவதாரம் செய்தவராகலின், 'சரஹணபவ' என்றார். ஆறு திரு முகங்களையுடைய ஆறுமுகக் கடவுளே என்பார் 'சண்முகா' என்றார்.

சரணம் - கை கூப்பி வணங்குதல், புகலிடம், அடைக்கலம் என்றும் பொருளாம். ஓம் - பிரணவாக்ஷரம்.

பிரணவம் சிவபெருமானுக்கு இருப்பிடமாயும், பிரமன் முதலிய தேவர்கட்குப் பிறப்பிடமாயும், மறைகளுக்கு முதலாகியும், காசிப்பதியி லிறப்பவர்களுக்குப் பெருமான் உபதேசிக்கும் தாரகப் பிரமமாகியும், சுப்பிரமணியப் பெருமான் திருமுகங்களி லொன்றாகியும் விளங்கும். இதனை,

" ஈசன் மேவரு பீடமா யேனையோர் தோற்றம்
வாச மாயெலா வெழுத்திற்கு மறைகட்கு முதலாய்க்
காசி தன்னிடை முடிப்பவர்க் கெம்பிரான் கழற
மாசி லாரகப் பிரமமா மதன்பய னுய்ந்தான்.

" தாமரைக் கணன் முதலிய பண்ணவர் தமக்கும்
ஏமுறப்படு மறைக்கெலா மாதிபெற் றியலும்
ஓமெனப்படுக் குடிலையே யொப்பிலா முருகன்
மாமுகத்து ளொன்றுமவன் றன்மையார் வகுப்பார் "

—கந்தபுராணம்

என்பதனுணர்க.

ஓம் என்னும் பிரணவாக்ஷரம் எந்த மந்திரத்திற்கும் முதலிலேயாவது கடைசியிலேயாவது சேர்த்துக் கூறப்படுவது, இஃது இல்லாவிட்டால் மந்திரங்களுக்கு மகிமை இல்லை.

“புக்கிறைவன் றனைவணங்கி நிகழ்ந்தவெலாம்
விண்ணப்பஞ் செய்யப் பூத்தேன்
நக்கநறுந் தொடையிரழிக் கடவுளவர் தமை
நோக்கி நவில்வா னென்னே
யக்கமலன் விளம்பியவா நம்மையுநம்
புதல்வனையு மன்றே மான
மிக்க புகழ்ச் சுருதி யெலாம் பிரணவத்தின்
பொருளாக விளம்பு மாறே.

“எக்கலைக்கும் பூதங்க ளெவற் றினுக்கும்
பிரமனுக்கு மீச னென்னத்
தக்கமுதல் பரப்பிரம்மஞ் சதாசிவனேமென
வேதஞ் சாற்று மல்லான்
முக்கனல்சூழ் வேள்வியிற்சுப் பிரமணிய
னேமெனவு முக்காற் கூறும்
இக்கருத்தை யறியானை யெவ்வாறு
விடுவிப்ப தியம்பு மன்னே”

—காஞ்சிப் புராணம்

என வருவனவற்றால் சிவபெருமானும் சுப்பிரமணியப்பெருமானும் பிரணவப் பொருளாய் விளங்குகின்றார் என்று கூறியபடியே இவ்வாசிரியரும் ஈண்டு முருகப்பெருமானும் பிரணவாகாரமுடையவ ரென்பதால் ‘ஓம்’ என்றார் எனினுமாம். ‘சரஹணபவ’ என்றது செவ்வேட் பரமனைத் துதித்துக் கூறிய திருமந்திரங்களில் ஒன்றும். முருகனே! அடியேன் தேவரீர் அடைக்கலம் என்றதாம்.

கந்தர் சஷ்டி கவசம்
மூலமும் - விருத்தியுரையும்
முற்றிற்று.

திருமகன் அச்சகம், சென்னை-1. 1979